
# தமிழ் 5







தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# தமிழ்

## ஐந்தாம் வகுப்பு

மனிதத்தன்மையற்ற செயல்

**தீண்டாமை :** ஒரு பாவச்செயல்

ஒரு பெருங்குற்றம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு—1983

**ஆசிரியர் :**

புலவர் இரா. முத்துக்குமாரசாமி,
முதுகலைத் தமிழாசிரியர்,
அறிஞர் அண்ணா அரசு மேல் நிலைப் பள்ளி,
வாலாசாபாத்,
செங்கை மாவட்டம்.

விலை : ரூ. 3-00

**மேலாய்வாளர்கள் :**

புலவர் ல. சண்முகசுந்தரம்,
துணைத் தலைமை ஆசிரியர்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
தென்காசி.

திரு பா. இராமச்சந்திரன்,
துணைப் பேராசிரியர்,
தமிழ்நாட்டுக் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம்,
சென்னை.

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
**அம்பிகா பிரிண்டர்ஸ், சென்னை-600 002.**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
  பாரத பாக்ய விதாதா.
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
  திராவிட உத்கல பங்கா.
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
  உச்சல ஜலதி தரங்கா.
தப சுப நாமே ஜாகே
  தப சுப ஆசிஸ மாகே
  காஹே தவ ஜய காதா.
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
  பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
  ஜய ஜய ஜய ஜய ஹே !

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் — பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு

வெற்றி ! வெற்றி ! வெற்றி !

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல்-பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.'

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும் ;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே !
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே !

— 'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

# பொருளடக்கம்

## உரைநடைப்பகுதி


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பாரத நாடு | ... | 1 |
| 2. | அறிவே உயிர்காக்கும் | ... | 7 |
| 3. | அறிஞர் அண்ணா | ... | 11 |
| 4. | எழிலார் குற்றாலம் | ... | 15 |
| 5. | குதிரை | ... | 20 |
| 6. | நூல் நிலையம் | ... | 24 |
| 7. | கைத்தொழில் | ... | 29 |
| 8. | தொலைக் காட்சி | ... | 35 |
| 9. | கடிதம் எழுதுதல் | ... | 40 |
| 10. | புறாவும் எறும்பும் | ... | 45 |
| 11. | மனிதருள் மாணிக்கம் | ... | 50 |
| 12. | உதகைப் பயணம் | ... | 54 |
| 13. | தீண்டாமை வேண்டா | ... | 58 |
| 14. | சிறந்தது எது? — எழுத்தாற்றலா? பேச்சாற்றலா? | ... | 63 |
| 15. | ஆலமரம் | ... | 68 |
| 16. | வையை கூறும் தன்வரலாறு | ... | 74 |
| 17. | காயிதே மில்லத் | ... | 79 |
| 18. | புதல்வரைக் காத்த புலவர் (நாடகம்) | ... | 83 |


## செய்யுட்பகுதி


| | | | |
|---|---|---|---|
| I. | வாழ்த்து | ... | 90 |
| II. | அறவுரைப் பகுதி | ... | 92 |
| III. | கதைப் பகுதி | ... | 98 |
| IV. | பல்பொருள் பகுதி | ... | 104 |
| | சொற்பட்டியல் | ... | 110 |


## மனப்பாடப்பகுதி


| | | வரிகள் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 4 |
| 2. | திருக்குறள் (1-15) | 30 |
| 3. | நீதிநெறி விளக்கம் (1-8) | 32 |
| 4. | நம்நாடு | 4 |
| 5. | ஒருமைப்பாடு | 10 |
| 6. | சூரிய உதயம் | 12 |
| 7. | குளிர்தரும் வேம்பு | 8 |
| | மொத்த வரிகள் | 100 |

# கடவுள் வணக்கம்

ஊக்கம் உடையார் உளத்தினுள் உறைந்து
நீக்கம் இன்றியே நிறைந்து, யாம்செயும்
ஆக்கம் பலவினுக்(கு) அருளினை அளித்துக்
காக்கும் கருணைக் கடவுளே, போற்றி!

—அரசி. அகத்தியன்

# உரைநடைப் பகுதி

## 1. பாரத நாடு


நம் தாய்நாடு இந்தியா. முற்காலத்தில் பரதன் என்னும் அரசன் சிறப்பாக நம் நாட்டை ஆண்டான். எனவே, இதற்குப் 'பாரத நாடு' என்னும் மற்றொரு பெயரும் உண்டு. நம் நாடு ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது. உலகின் ஏழாவது பெரிய நாடு என்னும் பெருமையைப் பெற்று நம் நாடு விளங்குகிறது.

இந்நாட்டின் வடக்கே பனி மூடிய இமயமலை அமைந்துள்ளது. தெற்கில் இந்தியப் பெருங்கடல் உள்ளது. மேற்கில் அரபிக் கடலும் கிழக்கில் வங்கக் கடலும் உள்ளன. இந்நான்கும் இயற்கை எல்லைகளாக அமைந்து நம் நாட்டைக் காக்கின்றன.

மக்கள் தொகையில் நம் நாடு உலகில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள் எனப் பல்வேறு சமயத்தைச் சேர்ந்த மக்களும் இங்கு வாழ்கிறார்கள். அவர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், இந்தி, உருது, ஒரியா, மராத்தி, குஜராத்தி, காஷ்மீரி, பஞ்சாபி முதலிய மொழிகளைப் பேசுகிறார்கள். இவ்வாறு சமயத்தாலும் மொழியாலும் வேற்றுமை இருந்தாலும் நம் நாட்டு மக்கள் 'இந்தியர்' என்னும் ஒற்றுமை உணர்வுடன் வாழ்வதே நம் நாட்டின் தனிச்சிறப்பாகும்.

இராமாயணம், மகாபாரதம் என்னும் இருபெரும் இதிகாசங்கள் நம் நாட்டில் தோன்றியவை ஆகும். இந்நூல்கள் இரண்டும் வீரகாவியங் களாகவும், நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும் நூல்களாகவும் உள்ளன. உலகப் பொதுமறையாம் திருக்குறளும் நம் நாட்டில்தான் தோன்றியது.

சிந்து, கங்கை, பிரமபுத்திரா போன்ற வற்றாத வளநதிகள் நம் நாட்டின் வடபகுதியை வளம் கொழிக்கச் செய்கின்றன. மகாநதி, கோதாவரி, கிருட்டினா, காவிரி, நர்மதை, தபதி போன்ற ஆறுகள் நம் நாட்டின் தென்பகுதிக்கு வளம் தருகின்றன.


ஜம்மு காஷ்மீர்
இ.பி
பஞ்சாப்
அரி
உத்தரப் பிரதேசம்
சிக்கிம்
இராஜஸ்தான்
அஸ்ஸாம்
மேகலயா
பீகார்
குஜராத்
மத்தியப் பிரதேசம்
மே. வங்காளம்
மகாராஷ்டிரம்
ஒரிஸ்ஸா
அரபிக்கடல்
ஆந்திரப் பிரதேசம்
வங்காள விரிகுடா
கர்நாடகம்
கேரளம்
தமிழ் நாடு
இந்துப் பெருங்கடல்

உழவுத் தொழிலே நம் நாட்டின் முதன்மையான தொழில். எனினும், ஏனைய தொழில்களிலும் நாம் முன்னேற்றம் பெற்றுள்ளோம். இரும்பு எஃகுத் தொழிலும் பருத்தித் தொழிலும் சர்க்கரை உற்பத்தித் தொழிலும் இரசாயனத் தொழிலும் சிமெண்டு உற்பத்தித் தொழிலும் கப்பல் கட்டும் தொழிலும் நம் நாட்டில் நடைபெறுகின்றன. பம்பாய் நகரத்தில் பருத்தி ஆலைத் தொழில் சிறப்பாக நடைபெறுவதால் அந்நகரை 'இந்தியாவின் மான்செஸ்டர்' என்கிறோம்.

பாரத நாட்டின் தலைநகரம் புதுடில்லி ஆகும். இந்நகரம் பழம் பெருமையும் புகழும் கொண்டது. இது யமுனை ஆற்றின் கரையில் உள்ளது.

நம் நாட்டில்தான் புனிதமான புத்தரும், அருள்நெறி உரைத்த மகாவீரரும், அறவழியில் ஆட்சி செய்த அசோகரும், திருக்குறள் தந்த திருவள்ளுவரும் பிறந்தனர்.

வாணிகத்திலும் நம் நாடு சிறந்து விளங்குகிறது. பண்டை நாளில் நறுமணப் பொருள்கள் பலவும் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின. சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய துறைமுகங்கள் மூலம் இப்போதைய கடல் வாணிகம் நடைபெறுகிறது.

உலகிலேயே அதிக மழைபெறும் சிரபுஞ்சி என்னும் இடம் நம் பாரத நாட்டில் உள்ளது. அபிரக உற்பத்தியில் நம் நாடு உலகில் முதலிடம் பெற்று விளங்குகிறது.

அறிவியல் துறையில் புகழ் பெற்ற சர் சி. வி. இராமன், சர் ஜெகதீச சந்திர போசு, டாக்டர் பாபா முதலானோர் நம் நாட்டில் தோன்றியவர்கள். ஆரியபட்டா, பாஸ்கரா, ரோகிணி, ஆப்பிள், இன்சாட்டு போன்ற செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் அளவுக்கு நம் நாடு முன்னேற்றம் கண்டுள்ளது.

நம் நாட்டில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. தீபாவளித் திருநாள் பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் கொண்டாடப்படுகிறது. இதுபோன்ற விழாக்களால் இந்தியரின் ஒருமைப்பாட்டு உணர்வு வெளிப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நாட்டில் வாழும் இந்தியராகிய நாம் நாட்டுப்பற்றும் ஒற்றுமையும் அன்பும் உடையவர்களாக விளங்க

**வேண்டும். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்னும் கணியன் பூங்குன்றனாரின் உயரிய கருத்தைப் பின்பற்றி நாம் வாழவேண்டும்.**

### *அருஞ்சொற்பொருள்*

*இதிகாசங்கள் - வீர காவியங்கள், மறை - வேதம், வளம் - செழிப்பு, நெறி - வழி, அபிரகம் - ஒரு கனிப்பொருள், விண் - வானம், கேளிர் - உறவினர்.*

#### I. வாய்மொழிப் பயிற்சி

1. *பாரத நாடுபற்றித் தேசப்படத்தின் துணையுடன் உரையாடு.*
2. *பாரதத்திலுள்ள கதை ஒன்றைக் கேள்.*
3. கீழ்வரும் பாட்டைச் சேர்ந்து பாடு :

(அ) *'வாழிய செந்தமிழ் ; வாழ்கநற் றமிழர் ;*
*வாழிய பாரத மணித்திரு நாடு'.* —பாரதியார்

(ஆ) *'கன்னி இமயம் கடலிடை நாடு*
*கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு'.* —நாமக்கல் இராமலிங்கனார்

#### II. படிப்புப் பயிற்சி

1. *பாரத நாட்டின் சுற்றுலா இடங்கள்பற்றிய நூல்களை நூலகம் சென்று படி.*
2. தேசிய ஒருமைப்பாடுபற்றிய கட்டுரை, கவிதைகளைப் படி.
3. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி :

(அ) ........... என்ற ........... உணர்வுடன் வாழ்வதே இந்நாட்டின் தனிச்சிறப்பாகும்.

(ஆ) இந்தியராகிய நாம் ..........., ..........., ..........., ........... உடையவர்களாக விளங்கவேண்டும்.

#### III. எழுத்துப் பயிற்சி

**1.** எதிர்ச்சொல் எழுது :

| | |
|---|---|
| இயற்கை × | ஒற்றுமை × |
| வடபகுதி × | முன்னேற்றம் × |

**2.** சேர்த்து எழுது :

| | |
|---|---|
| *உழவு + தொழில்=* | *எஃகு + தொழில்=* |
| *பருத்தி + தொழில்=* | *ஆலை + தொழில்=* |

**3.** பிரித்து எழுது :

*முதலிடம், வளநதிகள், பழம்பெருமை.*

**4.** வாக்கியத்தில் அமைத்து எழுது :

*நாட்டுப் பற்று, ஒற்றுமை.*

**5.** பல வாக்கியங்களை அமை :

| | | | |
|---|---|---|---|
| இரும்பு எஃகு<br>சர்க்கரை<br>இரசாயன | த்தொழிலும் | நம் நாட்டில் | நடைபெறுகிறது. |

**6.** புள்ளியிட்ட இடத்தில் தக்க சொற்களை எழுது :

நம் நாட்டில்தான் புனிதமான .................. அருள்நெறி உரைத்த .................. அறவழியில் ஆட்சி செய்த ................ .. திருக்குறள் தந்த ................ பிறந்தனர்.

**7.** விடை எழுது :

(அ) நம் நாடு ஏன் பாரதம் எனப்பட்டது ?

(ஆ) நம் நாட்டின் எல்லைகள் யாவை ?

(இ) நம் நாட்டின் தனிச்சிறப்பு யாது ?

(ஈ) நம் நாட்டு வீர காவியங்கள் யாவை ?

(உ) நம் நாட்டில் உள்ள தொழில்கள் யாவை ?

(ஊ) நம் நாட்டில் அறிவியல் எவ்வாறு முன்னேற்றம் அடைந்துள்ளது ?

(எ) நாம் எவ்வாறு வாழவேண்டும் ?

## இலக்கணம்

### இலக்கணம் என்பது யாது ?

நீ படிக்கும் தமிழ்ப் பாடநூலில் உரைநடைப் பகுதி, செய்யுள் பகுதி என்னும் இரண்டு பகுதிகள் உள்ளன. இவ்விரண்டு பகுதிகளும் இலக்கியம் எனப்படும். இவைபோன்று பழங்காலத்தில் இலக்கியங்கள் பல இருந்தன. அந்த இலக்கியங்களிலிருந்து இலக்கணம் தோன்றியது.

இலக்கணம் ஒரு மொழியின் அமைப்பையும் அழகையும் கூறும். அது மொழியைப் பிழை இல்லாமல் பேசவும் படிக்கவும் எழுதவும் துணை செய்கிறது.

### பயிற்சி

1. இலக்கணம் எவ்வாறு தோன்றியது ?

2. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுது :

(அ) ஒரு மொழியின் ............ ............ கூறுவது இலக்கணம் ஆகும்.

(ஆ) இலக்கணம் மொழியைப் பிழை இல்லாமல் ............ ............ ............ துணை செய்கிறது.

## ஐவகை இலக்கணம்

தமிழ் வாழ்க !

இந்த வரியில் 'தமிழ்' என்னும் சொல் உள்ளது. இச் சொல்லில் த, மி, ழ் என்னும் மூன்று எழுத்துகள் உள்ளன. இந்த எழுத்துகளுக்குப் பெயர் உண்டு; வடிவமும் உண்டு. இவற்றிற்குத் தன்மை என்பது பெயர். இவைபோன்ற எழுத்தின் தன்மைகளைக் கூறுவது **எழுத்து இலக்கணம்** ஆகும்.

'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர் !'

இச்செய்யுள் வரியில் 'தமிழ்' 'வாழ்க' என்னும் சொற்கள் உள்ளன. இந்தச் சொற்களினுள் 'தமிழ்' என்பதற்குப் பெயர்த்தன்மை உண்டு. 'வாழ்க' என்பதற்குச் செயல்தன்மை உண்டு. இவை சொல்லின் தன்மைகள் எனப்படும். இவை போன்ற சொல்லின் தன்மைகளை விளக்குவது **சொல் இலக்கணம்** ஆகும்.

தமிழ் மக்கள் பழங்காலத்தில் சிறந்த வாழ்வு வாழ்ந்தனர். அவர்களிடம் வீரமும் அன்பும் சிறந்து விளங்கின. இவை போன்ற வாழ்க்கைச் செய்திகளை விளக்கிக் கூறுவது **பொருள் இலக்கணம்** ஆகும்.

மேலே கூறப்பட்ட வரி, செய்யுள் அடிகளுள் ஒன்று. இதுபோன்று பல அடிகளை உடையது செய்யுள். செய்யுளின் அமைப்பு, வகைகள் பற்றிக் கூறும் இலக்கணம் **யாப்பு இலக்கணம்** ஆகும். யாப்பு என்பதற்குச் செய்யுள் இயற்றுதல் என்பது பொருள்.

மேலே உள்ள செய்யுள் வரியில் உள்ள சொற்கள் அழகுபடக் கூறப் பட்டுள்ளன. செய்யுளின் அழகைப் பற்றிக் கூறுவது **அணி இலக்கணம்** ஆகும்.

எனவே, இலக்கணம் எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் என ஐந்து வகைப்படும்.

### பயிற்சி

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. கோடிட்ட இடங்களை நிரப்பு :

| | | | |
|---|---|---|---|
| எழுத்தின் | தன்மைகளைக் | கூறுவது | .................. |
| சொல்லின் | தன்மைகளைக் | | .................. |
| செய்யுளின் | அமைப்பைக் | | .................. |
| யாப்பின் | அழகைக் | | .................. |
| தமிழ் மக்களின் | வாழ்வு பற்றிக் | | .................. |

# 2. அறிவே உயிர்காக்கும்

ஓர் ஆடு மலையடிவாரத்தில் புல் மேய்ந்துகொண்டிருந்தது. அப்போது திடீரெனப் புயல் வீசியது; மேகங்கள் சூழ்ந்தன ; மின்னல்கள் மின்னின ; இடி இடித்தது ; பெருமழை பொழிந்தது. காட்டு விலங்குகள் தம் இருப்பிடங்களை நோக்கி ஓடின. பறவைகளும் பயத்துடன் பறந்தன. இவற்றைக் கண்ட ஆடு அஞ்சி நடுங்கி அருகில் இருந்த மலைக்குகைக்குள் சென்றது; மழை நின்றதும் தனது இருப்பிடம் செல்ல எண்ணியது.

மழை விடாமல் தொடர்ந்து பெய்யவே ஆடு குகையினுள் இருந்த மேடையில் படுத்துக்கொண்டது. அதன் கொம்புகள் நீண்டு சுருண்டு இருந்தன. உடல் முழுவதும் மயிர் அடர்ந்து கருமை நிறத்துடன் காணப்பட்டது. நீண்ட தாடியும் பெரிய தலையும் உடையதாகப் பயங்கர மான தோற்றத்துடன் அது விளங்கியது. அதன் கழுத்தில் ஒரு மணி தொங்கியது.

சிறிது நேரத்தில் குகையினுள் வழக்கமாகத் தங்கும் சிங்கம் வந்தது. தன் குகையில் புதிய விலங்கு ஒன்று இருப்பதைப் பார்த்துப் பயந்து நின்றது. பின்னர், மனம் துணிந்து, "நீ யார் ? என் குகையில் உனக்கு என்ன வேலை ?" என்று கேட்டது.

சிங்கத்தைக் கண்ட ஆடு பயந்துவிட்டது. அது தனக்குள், 'ஐயோ, கடவுளே ! மழைக்குப் பயந்து குகைக்கு வந்தேன். இப்பொழுது சிங்கத்தால் சாகப்போகிறேனே ! என்ன செய்வது !' என்று எண்ணியது.

அது தன் உடம்பை ஒருமுறை குலுக்கியது. அதன் கழுத்தில் கட்டியிருந்த மணி ஒலித்தது. தன் தலையை நிமிர்த்திச் சிங்கத்தைப் பார்த்து, "ஓ ! விலங்கரசனா ! வாரும், வாரும் ! என் நோன்பு இன்றோடு இனிது முடிந்தது," என்று கோபமாய்க் கூறியது. அக்குரல் குகைச் சுவரில் பட்டு எதிரொலித்தது.

அதைக் கேட்ட சிங்கம் பயந்து ஆட்டைப் பார்த்து, "நீ யார் ? உன் நோன்பு என்ன என்பதைச் சொல்," என்றது.

சிங்கம் பயந்ததைக் கண்ட ஆடு தன் கழுத்தில் இருந்த மணியை ஆட்டிக்கொண்டே, "என்னை யார் என்று தெரியவில்லையா ? தெரியாமல் இருப்பது வேடிக்கைதான் ! நான்தான் தாடிவீரன் ; நூறு

புலிகளையும், நூறு யானைகளையும், ஒரு சிங்கத்தையும் கொன்று தின்ன நோன்பு எடுத்தேன். நூறு புலிகளையும், நூறு யானைகளையும் கொன்று தின்றுவிட்டேன். ஒரு சிங்கம்மட்டும் கிடைக்கவில்லையே என ஏங்கி யிருந்தேன். எனக்கு இரையாக நீயே என்னைத் தேடி வந்துவிட்டாய். நீ உள்ளே வருகிறாயா? இல்லை, நான் வெளியே வரட்டுமா?'' என்று கேட்டுக்கொண்டே சிங்கத்தின்மேல் பாய்வதைப்போல் காட்டியது.

சிங்கம் பயந்து, 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்,' என ஓடத் தொடங்கியது.

சிங்கம் பயந்து ஓடுவதைக் கண்ட ஒரு நரி, ''அரசே, ஏன் ஓடுகிறீர்கள்? இப்படி அஞ்சி ஓடலாமா?'' என்று கேட்டது.

சிங்கம் தான் குகையில் கண்டதையும் கேட்டதையும் கூறியது.

அதைக் கேட்ட நரிக்குச் சிரிப்பு வந்தது. அது தன் சிரிப்பை அடக்கிக்கொண்டு, ''அரசே, நீங்கள் வீணாகப் பயப்படுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் உருவம் ஓர் ஆட்டுக்கடாப் போல் தோன்றுகிறது. அதற்கு இப்படிப் பயந்து ஓடலாமா?'' என்று வினவியது.

சிங்கம், ''போடா முட்டாள்! உனக்கு என்ன தெரியும்? தன் நோன்பை முடிக்க அவன் ஒரு சிங்கம்மட்டுமே தேவை என்று கூறினான்; என்மேல் பாயவும் வந்தான். நான் ஓடி வந்துவிட்டேன்!'' என்று கூறியது.

அதற்கு நரி, ''நானும் உங்களுடன் வருகிறேன். அந்தத் தாடி வீரனிடம் செல்வோம். உங்களுக்கு அச்சமாக இருந்தால் என் வாலோடு உங்கள் வாலையும் கட்டிக்கொள்ளுங்கள். உண்மையை நேரில் கண்டு தெளியலாம்,'' என்றது.

சிங்கமும் சரி என்று ஒப்புக்கொண்டது. அவையிரண்டும் வால் களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆடு இருந்த குகையை நோக்கிச் சென்றன.

சிங்கம் நரியுடன் வருவதைக் கண்ட ஆடு இப்போதும் அறிவின் துணைகொண்டே வெல்லவேண்டும் என்று எண்ணியது. அஃது உடனே, ''அடா, நரியே! நீதான் எனக்கு உண்மையான அமைச்சன். ஓடின சிங்கத்தைக் கூட்டி வா என்றால் நீ கட்டியே கொண்டு வந்துவிட்டாய்! நல்லது செய்தாய். இன்றோடு என் நோன்பு முடிந்தது,'' என்று கூறித் தன் தலையை வேகமாக ஆட்டியது. மணியும் 'கணீர் கணீர்' என ஒலித்தது.

அதைக் கேட்ட சிங்கம் நடுநடுங்கியது. 'ஐயையோ! ஏமாந்து போனேனே! நரி தந்திரம் செய்து என்னை ஏமாற்றிக் கொண்டுவந்து விட்டதே!' என்று வருந்தி, வேகமாய் ஓடத் தொடங்கியது.

நரியால் சிங்கத்துடன் ஓட முடியவில்லை. அது கல்லிலும் முள்ளிலும் உருண்டு, புரண்டு, இழுபட்டு இறந்தது. மழையும் ஓய்ந்தது.

'புத்திமான் பலவான் ஆவான்' என்னும் பழமொழிக்கு ஏற்ப அறிவின் துணைகொண்டு சிங்கத்தைத் துரத்திய ஆடு தன் வீடுபோய்ச் சேர்ந்தது.

## *அருஞ்சொற்பொருள்*

*புயல் - பெருஞ்சுழல் காற்று, அருகில் - பக்கத்தில், அடர்ந்து - நெருக்கமாக வளர்ந்து, மறுபடி - திரும்ப, நோன்பு - விரதம், வினவியது - கேட்டது.*

### I. வாய்மொழிப் பயிற்சி

1. சிங்கமும் சுண்டெலியும் என்ற கதையைக் கூறு/கேள்.
2. முந்திய வகுப்பில் படித்த இரண்டு ஆடுகளின் கதையைக் கூறு.
3. ஆடு, சிங்கம், நரி—ஆகியவற்றை உறுப்பினர்களாகக் கொண்ட இப் பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டு.

### II. படிப்புப் பயிற்சி

1. ஆடு, சிங்கம், நரி பற்றிய வேறு கதைகளைப் படி.
2. கீழ்வரும் பழமொழிகளைப் படி :
   'புத்திமான் பலவான் ஆவான்.'
   'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்.'
3. ஏற்ற சொற்களை நிரப்பிப் படி :
   புயல் ............ .
   மேகங்கள் ............ .
   மின்னல்கள் ............ .
   இடி ............ .
   பெருமழை ............ .
   [சூழ்ந்தன, வீசியது, இடித்தது, பொழிந்தது, மின்னின]

### III. எழுத்துப் பயிற்சி

**1.** எதிர்ச்சொல் எழுது :

| | | |
|---|---|---|
| வீரன் × | பெருமழை × | உள்ளே × |
| கருமை × | மேல் × | முட்டாள் × |

**2.** சேர்த்து எழுது :

| | |
|---|---|
| காடு + விலங்கு = | குகை + சுவர் = |
| ஆடு + கடா = | எனக்கு + இரை = |

3. பிரித்து எழுது :

விலங்கரசன், அவையிரண்டும்.

4. வாக்கியத்தில் அமைத்து எழுது :

உருண்டு புரண்டு, நீண்டு சுருண்டு, நடுநடுங்கியது.

5. வேறுபாடு அறி :

| | |
|---|---|
| மலை — மழை | விலங்கு — விளங்கு |
| என் — எண் | புல் — புள் |
| பரவை — பறவை | கல் — கள் |
| இரை — இறை | புலி — புளி |
| தலை — தளை — தழை | |

6. பல வாக்கியங்களை அமைத்து எழுது :

| | | |
|---|---|---|
| நான் | ................. | விட்டேன். |
| நீ | ................. | விட்டாய். |
| | ................. | |
| | ................. | |
| | ................. | |

[ கொன்று, தின்று, தேடி, வந்து, ஓடி. ]

7. விடை எழுது :

(அ) ஆடு ஏன் குகைக்குள் சென்றது ?

(ஆ) ஆட்டின் தோற்றம் எவ்வாறு இருநதது ?

(இ) குகைக்கு வெளியே நின்ற சிங்கம் என்ன செய்தது ?

(ஈ) சிங்கத்தைப் பார்த்த ஆடு என்ன கூறியது ?

(உ) ஆட்டின் நோன்பு யாது ?

(ஊ) சிங்கம் பயந்து ஓடியது ஏன் ?

(எ) பயந்தோடும் சிங்கத்தைக் கண்ட நரி வினவியது யாது ?

(ஏ) சிங்கத்தின் பேச்சைக் கேட்ட நரி கூறியது யாது ?

(ஐ) நரியுடன் சிங்கம் வருவதைக் கண்ட ஆடு என்ன செய்தது ?

(ஒ) நரி எவ்வாறு இறந்தது ?

## இலக்கணம்

### எழுத்து இலக்கணம்

'அறிஞர் அண்ணா'

இஃது ஒரு பாடத்தின் தலைப்பு. இதில் இரண்டு சொற்கள் உள்ளன. இச்சொற்களில் பல எழுத்துகள் உள்ளன. இந்த எழுத்துகளுக்குப் பல தன்மைகள் உள்ளன. இத்தன்மைகளைக் கூறுவது **எழுத்து இலக்கணம்** எனப்படும். **எண்,** பெயர் முதலானவை எழுத்தின் தன்மைகளாகக் கூறப்படும்.

### பயிற்சி

**எழுத்து இலக்கணம் என்பது யாது ?**

# 3. அறிஞர் அண்ணா

செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராகச் சிறப்புற்றுத் திகழ்வது காஞ்சிபுரம் ஆகும். பழங்காலத்தில் இந்நகர் பல்லவ மன்னர் களின் தலைநகராக இருந்தது. அங்குப் பேரறிஞர்கள் பலர் தோன்றிச் சிறப்போடு வாழ்ந்தார்கள். அந்நகரம் சிற்பக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. அந்நகரத்தில் பேரறிஞர் அண்ணா 1909ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாள் பிறந்தார்.

அண்ணா இளமையில் அன்பும் அருளும் உடையவராய் விளங்கினார்; நட்பு உணர்வும் நல்ல பண்பும் அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. அவர், பெற்றோரும் மற்றப் பெரியோரும் கூறும் நல்ல வழிகளை அப்படியே கேட்டு நடப்பார். விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் பேசுவது அவருக்குக் கைவந்த கலை ஆகும்.



அண்ணா காஞ்சியில் உள்ள பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளியில் கல்வியைக் கசடறக் கற்றார். நுட்பமான அறிவும் நினைவு ஆற்றலும் கொண்டவராய் இருந்ததால் ஒவ்வொரு வகுப்பிலும் அவரே முதல் மாணாக்கராய் விளங்கினார். அவரது அறிவுத் தெளிவைக் கண்ட ஆசிரியர்கள் வியந்து பாராட்டினார்கள்.

காஞ்சியில் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, அவர் சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து உயர் பட்டம் பெற்றார். பின்னர், அவருக்குப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிவந்த தந்தை பெரியாரின் தொடர்பு ஏற்பட்டது. அறியாமையினால் மக்கள் பின்பற்றி வந்த மூடப் பழக்கவழக்கங்களை அண்ணா சாடினார்; சாதிக் கொடுமைகள் ஒழியவேண்டும் என வற்புறுத்தினார்; மக்களிடம்

உண்மையான அறிவு பெருகவேண்டும் என்று கூறினார். அண்ணா சமுதாயத்துக்குச் செய்த தொண்டுகள் மிகப் பலவாகும்.

அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1969 ஆம் ஆண்டு பதவி ஏற்றார். அவர் தம் ஆட்சிக் காலத்தில் தமிழைப் பெரிதும் வளர்த்தார். 'சென்னை மாநிலம்' என்று வழங்கப்பட்ட நம் மாநிலத்தின் பெயரைத் 'தமிழ் நாடு' என்று மாற்றினார். அவர் ஆட்சியில் இருந்த போது இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் சீரோடும் சிறப்போடும் நடத்தினார். அதன்மூலம் தமிழின் பெருமையை உலக மெலாம் பரப்பினார்.

அண்ணா தலைசிறந்த எழுத்தாளர்; மக்கள் மனம் கவர்ந்த பேச்சாளர்; சீர்திருத்தச் செம்மல். அவர் அறிவிலே சிறந்து விளங்கினார். அதனால் அவர் 'அறிஞர் அண்ணா' என்று பாராட்டப் பெற்றார்.

அவர் சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்காகப் பல நாடகங்களை எழுதினார்; சிலவற்றில் அவரே நடித்தார். தம் பேச்சின்மூலம் இந்திய மக்களைக் கவர்ந்தார். அவருடன் கொள்கை மாறுபட்டவர்கள்கூட அவரது பேச்சாற்றலை வியந்து கேட்டார்கள். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் அவர் வல்லவராய் விளங்கினார்.

அவரின் அறிவையும் திறமையையும் பாராட்டி அமெரிக்காவில் உள்ள 'ஏல் பல்கலைக் கழகம்' அவரைச் சிறப்பித்தது. அறிஞர்கள் பலரும் அவரைப் பாராட்டினர். அவரால் தமிழகம் பெருமை பெற்றது.

மக்களின் முன்னேற்றத்துக்காக அவர் பல கருத்துகளைக் கூறினார்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றும் மக்களுக்கு வேண்டும் என்று வற்புறுத்தினார். அவரும் அவ்வழியே நடந்து காட்டினார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்,' என்னும் அவரது கருத்து அனைவராலும் பாராட்டி ஏற்றுக்கொள்ளப்பெற்றதாகும்.

மக்கள் மனத்தில் இடம்பெற்ற அவர், தம் அறுபதாம் வயதில் இயற்கை எய்தினார். அவருக்கு நினைவுச் சின்னம் ஒன்று கடற்கரையில் எழுப்பப்பட்டது. அவ்விடத்திற்கு 'அண்ணா சதுக்கம்' என்பது பெயர். அவரை மக்கள் 'பேரறிஞர் அண்ணா' என இன்றும் பாராட்டி வருகிறார்கள். அவருடைய உயரிய கருத்துகளை நாமும் பின்பற்றி வாழ்வில் சிறப்படைவோம்.

## அருஞ்சொற்பொருள்

அருள் - இரக்கம், கசடற - குற்றம் நீங்க, நுட்பமான - கூர்மையான, சாடினார் - எதிர்த்தார், செம்மல் - சிறந்த மனிதர், வியந்து - ஆச்சரியப்பட்டு.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. அண்ணாவின் இளமைப் பருவ நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்துகொள்.
2. அண்ணா கூறிய குட்டிக் கதைகளுள் ஒன்றைக் கேட்டறி.
3. அண்ணா எழுதிய சிறு நாடகப் பகுதி ஒன்றை நடித்துக் காட்டு.

### II. படிப்புப் பயிற்சி

கீழ்வரும் அண்ணாவின் பொன்மொழிகளைப் படித்து உணர்ந்துகொள்:

1. 'வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராகப் பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.'
2. 'இந்த நாட்டிற்கு நிரந்தரமான செல்வத்தைத் தேடித் தருபவர் எவரேனும் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் ஆசிரியர்களே.'
3. 'முக்கனி கனிவகைகளில் சிறந்து விளங்குகிறது. முத்தமிழ், மொழிகளில் சிறந்து விளங்குகிறது.'

### III. எழுத்துப் பயிற்சி

1. எதிர்ச்சொல் எழுது :

   உண்மையான × பெருமை ×

2. பிரித்து எழுது :

   சிறப்படைவோம், பேச்சாற்றல்

3. சேர்த்து எழுது :

   உலகு + எலாம் = கசடு + அற =

4. வாக்கியத்தில் அமைத்து எழுது :

   கசடற, கைவந்த

5. 'அருள்' என்னும் சொல்லின் முதல் எழுத்தை நீக்கி வேறு புதிய சொற்களை எழுது :

   அருள், ......, ......, ......, ......, ......, ...

   [இ, உ, ம, சு, தெ]

6. விடை எழுது :

   (அ) அண்ணா எப்பொழுது எந்த ஊரில் பிறந்தார் ?

   (ஆ) அண்ணாவின் பண்புகள் யாவை ?

   (இ) அண்ணாவின் இளமைக் கல்விபற்றி எழுது.

(ஈ) அண்ணா செய்த தொண்டுகள் யாவை ?

(உ) அண்ணாவின் கொள்கைகள் யாவை ?

## இலக்கணம்

### ஒலி எழுத்து, வரி எழுத்து

அகத்தியர் தமிழ் வளர்த்தார்.

இவ்வாக்கியத்தில் சொற்கள் உள்ளன. அவற்றில் எழுத்துகள் உள்ளன. அந்த எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வடிவம் உள்ளது. இதற்கு **வரி எழுத்து** என்பது பெயர். வரி வடிவம் உடைய எழுத்து 'வரி எழுத்து' எனப்படும்.

இவ்வாக்கியத்திலுள்ள சொற்களில் எழுத்துகள் உள்ளன. அந்த எழுத்து களை ஒலிக்கும்பொழுது ஒலி வடிவில் அவை உருவாகின்றன. அவற்றுக்கு **ஒலி எழுத்து** என்பது பெயர். ஒலி வடிவம் உடைய எழுத்து 'ஒலி எழுத்து' எனப்படும்.

## பயிற்சி

1. ஒலி எழுத்து என்பது யாது ?
2. வரி எழுத்து என்பது யாது ?
3. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுதிப் படி :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ..................<br>.................. | வடிவம் | உடைய<br>எழுத்து | ...............<br>............... | எழுத்து | ஆகும். |

பிழை இன்றி ஒலித்தால், பிழை இன்றிக் கேட்கமுடியும்.

பிழை இன்றிக் கேட்டால், பிழை இன்றிப் பேசமுடியும்.

பிழை இன்றிப் பேசினால், பிழை இன்றி எழுதமுடியும்.

பிழை இன்றி எழுதினால், பிழை இன்றிப் படிக்கமுடியும்.

# 4. எழிலார் குற்றாலம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசிக்கு அருகே குற்றாலம் உள்ளது. குற்றால மலைக்கு அகத்திய மலை, ஏல மலை, திரிகூட மலை எனப் பல பெயர்கள் உண்டு. இம் மலையில் சித்திரா நதி குற்றால அருவியாக விழுகிறது. குற்றாலத்தில் இருந்துதான் தமிழ் முனிவரான அகத்தியர் தமிழ் வளர்த்தார் என்று அறிஞர் கூறுவர். அகத்தியர் எழுதிய 'அகத்தியம்' என்னும் நூலே தமிழின் முதல் இலக்கண நூல் ஆகும் என்பர்.

தென்னிந்தியாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி தமிழ்நாட்டில் தெற்கு வடக்காக நீண்டு கிடக்கிறது. அம் மலையின் ஒரு பகுதி தென்காசி வட்டத்தில் கிழக்கு நோக்கி நீண்டு உள்ளது. இப்பகுதியே குற்றாலம் என அழைக்கப்படுகிறது.

இம்மலையில் உயரமான பாறைகள் பல உள்ளன. அப்பாறை களின் உச்சியில் நின்றுகொண்டு சுற்றிலும் பார்த்தால் மலையின் எழில் முழுவதும் தெரியும். இவ்வாறு கண்டு களித்த திரிகூடராசப்ப கவிராயர் என்னும் புலவர், இதனைத் தம் 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் நூலில் அழகுபடப் பாடியுள்ளார்.


இந்த அழகிய மலையில் அனைவரின் கவனத்தையும் கவர்வது குற்றால நீர்வீழ்ச்சியே ஆகும். வெள்ளியை உருக்கி வார்த்தது போல இந்த அருவி விழும் அழகு கண்கொள்ளாக் காட்சியாகும். மலையடிவாரத்தில் உள்ள இந்நீர்வீழ்ச்சி மிகுந்த உயரத்திலிருந்து விழுகிறது. இது முதலில் பொங்குமாங்கடல் என்னும் பெரிய சுனையில் விழுந்து பின்னர்க் கீழே விழுகிறது. அருவி விழும் அடிவாரத்தில்தான் அனைவரும் குளிக்கிறார்கள். இவ்வருவியில் குளித்தால் உடல் நோய் களும் மன நோய்களும் நீங்கும்.

நீர்வீழ்ச்சியிலிருந்து மலைமேல் மூன்று கிலோ மீட்டர்த் தூரத்தில் செண்பகாடவி அருவி உள்ளது. செண்பக மரங்கள் நிறைந்த பகுதியில் இவ்வருவி விழுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. இவ் வருவிக்குப் பக்கத்தே உள்ள குகைகளில் துறவிகள் சிலர் வாழ்கின்றனர்.

இங்குச் செண்பகாதேவி என்னும் பெயருடைய அம்மன் கோயிலும் உள்ளது.

செண்பகாடவி அருவிக்கு மேலே மூன்று கிலோ மீட்டர்த் தூரம் சென்றால் தேனருவியைக் காணலாம். தேனருவிக்குப் போகும் பாதை செப்பனிடப்படாமல் கிடக்கிறது. இக்குற்றால மலையின் அருவிகளுக்கு அரசிபோல் இருப்பது தேனருவி ஆகும். ஏறத்தாழ நாற்பது மீட்டர் உயரத்தில் இருந்து இவ்வருவி விழுகிறது. இரண்டு மிகப்பெரிய பாறைகளுக்கு இடையே இந்த அருவி விழுவது மிக அழகாக இருக்கும். இப்பாறைகளில் நீர் படாத இடங்களில் மிகப் பெரிய தேனடைகள் உண்டு. தேனடைகள் பல உள்ள இடத்திலிருந்து இவ்வருவி விழுவதால் ' தேனருவி ' எனப் பெயர் பெற்றுள்ளது.

இந்த மூன்று அருவிகளைத் தவிர ஐந்தருவி, புலி அருவி, பழைய குற்றால அருவி போன்ற அருவிகளும் உள்ளன. இம்மலையில் தேக்கு, சந்தனம், அகில், பலா போன்ற மரங்களும், பல வகையான கொடிகளும் செடிகளும் உள்ளன. புலி, யானை, மான், பாம்பு, மயில், குரங்கு முதலியன இம்மலையில் மிகுதியாக வாழ்கின்றன.



குற்றால மலையின் அடிவாரத்தில் குற்றால நகர் உள்ளது. இந்நகரில் சிவன் கோயில் ஒன்று உண்டு. இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் 'திருக்குற்றாலநாதர்' ஆகும். இக்குற்றாலநாதரை ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார் பாடியுள்ளனர்.

குற்றாலத்துக்கு அருகே இலஞ்சி, பைம்பொழில் போன்ற அழகிய ஊர்கள் உள்ளன. நீர்நிலைகள் நிறைந்த ஊர் 'இலஞ்சி' எனவும் பசுமையான சோலைகள் சூழ்ந்த ஊர் 'பைம்பொழில்' எனவும் அழைக்கப் படுகின்றன.

ஆண்டுதோறும் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று எழிலார்ந்த குற்றாலத்தைக் கண்டு வருகின்றனர். நீங்களும் ஒருமுறை குற்றாலம் சென்று நீராடி வரலாமே!

### அருஞ்சொற்பொருள்

*எழிலார் - அழகு நிறைந்த, துறவி - உலக ஆசைகளை நீக்கியவர், செப்பனிடுதல் - செம்மையாக்குதல், அருவி - நீர்வீழ்ச்சி, செண்பகம் - ஒரு வகை மரம், மணமுள்ள பூவையுடையது.*

### I. வாய்மொழிப் பயிற்சி

1. இமய மலை, குற்றால மலை, விந்திய மலை இம்மூன்றும் உரையாடுவதைப்போல் உரையாடு.
2. அகத்தியர்பற்றி வழங்கும் கதைகளுள் ஒன்றைக் கேட்டு அறி.
3. செய்யுள் பகுதியில் வந்துள்ள குற்றால மலைபற்றிய பாட்டைச் சேர்ந்து பாடு.
4. கீழ்வரும் பாடலைச் சேர்ந்து பாடு :

*கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே !*
*கனகமகா மேருஎன நிற்கும்மலை அம்மே !*
*சயிலைமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே !*
*சகலமலை யும்தனக்குள் அடக்கும்மலை அம்மே !*

*எல்உலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே !*
*இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே !*
*செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்*
*திரிகூட மலைஎங்கள் செல்வமலை அம்மே !*

### II. படிப்புப் பயிற்சி

1. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பி எழுது :

(அ) குற்றாலத்திலிருந்துதான் .............. முனிவரான .............. தமிழ் வளர்த்தார்.

(ஆ) தமிழின் முதல் இலக்கண நூல் .............. ஆகும்.

(இ) குற்றால மலையில் .............., .............., .............. போன்ற அருவிகள் உள்ளன.

(ஈ) தேனடைகள் பல உள்ள இடத்திலிருந்து இவ்வருவி விழுவதால் இதனைத் ................ என்பர்.

(உ) கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படி :

'திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேன் உண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். பயன்மரம் நிறைந்த திருக்குற்றாலச் சாரலில் வேரிலே பழம் பழுத்துத் தூரிலே சுளை வெடிக்கும் குறும்பலா மரங்கள் உள்ளன.'

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

### III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

தெற்கு × கிழக்கு ×
பின்னர் × மேல் ×

**2. சேர்த்து எழுது :**

எழில்+ஆர்ந்த = மலை+அடிவாரம் =
இ+பெயர் = இ+மலை =

**3. பிரித்து எழுது :**

அங்குள்ள, தென்னிந்தியா, ஐந்தருவி.

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

தெற்கு வடக்காக, அழகாக, வீற்றிருத்தல், கூட்டம்,கூட்டமாக.

**5. உவமை வாக்கியத்தை நிரப்பி எழுது :**

குற்றால மலையின் அருவிகளுக்கு அரசி போல் ................

**6. புள்ளியிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்பு :**

இந்த அருவி விழும் அழகு .............. .............. ஆகும்.

**7. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :**

(அ) குற்றால மலை எங்கு உள்ளது ?

(ஆ) குற்றால மலையில் அனைவரின் கவனத்தைக் கவர்வது எது? அதன் காட்சியை விளக்குக.

(இ) செண்பகாடவி அருவி என்று ஏன் பெயர் வந்தது ?

(ஈ) தேனருவி எங்குள்ளது ? அதன் காட்சியை விளக்குக.

(உ) குற்றால மலையில் உள்ள மரங்களும் விலங்குகளும் யாவை ?

## இலக்கணம்

### உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம்

ஆடு, நாய், விலங்கு, உதடு, எஃகு. இச்சொற்களில் பல எழுத்துகள் உள்ளன. 'ஆ, உ, எ' போன்ற எழுத்துகள் ஒரே ஒலியை உடையன. 'ய், ங்' போன்ற எழுத்துகள் புள்ளிகளை உடையன. 'டு, நா, வி, ல, கு, த,'

போன்ற எழுத்துகள் இரண்டு எழுத்து ஒலிகளை உடையன. 'ஃ' என்னும் மூன்று புள்ளி உடைய எழுத்தும் உள்ளது.

'அ' முதல் 'ஔ' வரை உள்ள 12 எழுத்துகளும் ஒரே ஒலியை உடையன. இவை **உயிர் எழுத்துகள்** ஆகும்.

'க்' முதல் 'ன்' வரை உள்ள 18 எழுத்துகளும் புள்ளி உடையன. இவை **மெய் எழுத்துகள்** ஆகும்

மேற்சொன்ன உயிரும் மெய்யும் சேர்ந்துவரும் 'க' முதல் 'னௌ' வரை உள்ள 216 எழுத்துகளும் இரண்டு எழுத்து ஒலிகளை உடையன. அவை **உயிர்மெய் எழுத்துகள்** ஆகும்.

ஃ – இந்த ஒரே எழுத்து மட்டும் 'கேடயம்' என்னும் ஆய்தத்திலுள்ள புள்ளிகள்போல அமைந்துள்ளது. எனவே, இஃது ஆய்த எழுத்து ஆகும். இதற்குத் 'தனிநிலை' எனவும் பெயர் உண்டு.

## பயிற்சி


1. உயிர் எழுத்து என்பது யாது?
2. மெய் எழுத்து என்பது யாது?
3. உயிர்மெய் எழுத்து என்பது யாது?
4. ஆய்த எழுத்து என்பது யாது?
5. கீழ்வரும் சொற்களில் உள்ள எழுத்துகளை உரிய கட்டத்தில் எழுது:

| சொற்கள் | உயிர் | மெய் | உயிர்மெய் | ஆய்தம் |
|---|---|---|---|---|
| எஃகு<br>ஆடு<br>நாய் | | | | |

# 5. குதிரை

விலங்குகள் வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் என இருவகைப்படும். வீட்டிலே வளர்க்கப்படும் ஆடு, மாடு, குதிரை, நாய், பூனை போன்றவை வீட்டு விலங்குகள் எனப்படும். இவற்றில் குதிரை சிறப்பு வாய்ந்த வளர்ப்பு விலங்கு ஆகும். கழுதை, வரிக்குதிரை, காட்டுக் குதிரை ஆகியனவும் குதிரை இனங்களாகும்.

இது குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. குதிரைக் குட்டி பிறந்த சிறிது நேரத்திற்கெல்லாம் உலவும்; ஓடும். அதன் கால்கள் மிக நீண்டிருக்கும். குதிரையின் தலை நீண்டது. உதடுகள் பெரியவை. கழுத்தின் மேற்புறம் நீண்ட தெளிவான பிடரி மயிர் வளரும். நெற்றி மீது முன் மயிர் அழகாக அசையும். மயிர் அடர்ந்த நீண்ட வாலும் இதற்கு உண்டு. குதிரை வெண்மை, பழுப்பு, கருப்பு ஆகிய வண்ணங்களில் காணப்படும்.



வண்டிகளை இழுத்துச் செல்லவும், பொருள்களை ஏற்றிச் செல்லவும், பந்தயத்திற்கும் குதிரைகள் பயன்படுகின்றன. 'சர்க்கஸ்' அரங்குகளில் குதிரைகள் பலவகை விளையாட்டுகளைக் காட்டி நம்மை மகிழ்விக்கின்றன. மட்டக் குதிரை குழந்தைகளின் சவாரிக்கு ஏற்றது.

கொள்ளு, மக்காச்சோளம் போன்ற பயறு வகைகளும், புல், நனைத்த தவிடு, மஞ்சள் முள்ளங்கி, குதிரை மசாலாக் கீரை ஆகியவையும் குதிரையின் உணவுப்பொருள்களாகும். இது 'தாவர உண்ணி' விலங்கு வகையைச் சேர்ந்ததாகும். தன் உணவை மிக மெதுவாகவும் நன்றாகவும் மென்று விழுங்கும். ஆனால், பசுவைப்போலக் குதிரை அசை போடுவதில்லை.

குதிரை மிகவும் கூரிய அறிவுள்ள விலங்கு ஆகும். இதன் செவிப்புலன் மிகக் கூர்மையானது. அவ்வாறே இதன் மோப்பச் சக்தியும்

அதிகமாக உள்ளது. புதுமையான பொருளைக் கண்டால் குதிரை மருளும். எனவே, அது மருளாமல் இருப்பதற்காகக் கண்ணின் முன் பக்கம் தவிர மற்றப் பாகங்களை மறைக்கத் தோற்பட்டைச் சேணம் கட்டுவார்கள். இதன் முன் பற்களுக்கும் கடைவாய்ப் பற்களுக்கும் நடுவே இடைவெளி உண்டு. அங்கேதான் கடிவாளம் பொருந்தி யிருக்கும்.

குதிரை நடந்தும், மெல்ல ஓடியும், அசைந்தாடியும், விரைவாக நான்குகால் பாய்ச்சலில் பாய்ந்தும் பலவிதமாகச் செல்லும். குதிரைக்கு விரைவாகச் செல்லுதல், நீண்ட கடினமான உழைப்பில் ஈடுபடுதல் போன்ற குணங்கள் உள்ளன. இது மிகவும் வேகமாக ஓடும். குதிரை பதினைந்துமுதல் இருபது ஆண்டுகள்வரை உயிர் வாழும். இதற்குக் கொம்பு இல்லை.

பண்டைத் தமிழ் அரசர்கள் வைத்திருந்த நால்வகைப் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. அக்காலக் குதிரைப் படை வீரர்கள் கவசமும் தலைப்பாகையும் அணிந்து அம்பு, ஈட்டி, வாள் முதலிய போர்க்கருவிகள் கொண்டு போரிட்டார்கள்.

'முன்னால் போனால் கடிக்கும்; பின்னால் போனால் உதைக்கும்', 'கொள்ளு என்றால் வாயைத் திறக்கும் குதிரை; கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளும்' ஆகியவை குதிரையைப்பற்றிய பழமொழிகள் ஆகும்.

கொம்புள்ள விலங்குகளுக்கு ஐந்து முழத் தூரமும், குதிரைக்குப் பத்து முழத் தூரமும் விலகிச் செல்லவேண்டும் என 'நீதிவெண்பா' கூறுகிறது.

### *அருஞ்சொற்பொருள்*

*பிடரி - கழுத்தின் மேல்பகுதி, கவசம் - உடம்பை மறைக்கும் இரும்பு உடை, தாவர உண்ணி - தாவர உணவு உண்ணும் பிராணி, மருளும் - மிரளும்.*

I. வாய்மொழிப் பயிற்சி

1. குதிரையும் கழுதையும் உரையாடுவதைப்போல் உரையாடு.
2. குதிரையைப்பற்றிய சுவையான செய்திகளைக் கேட்டறி.
3. தெனாலிராமன் குதிரை வளர்த்த கதையைக் கேள்/கூறு.
4. பரமார்த்த குரு கதையில் குதிரை பிடிக்கத் தூண்டில் போட்ட கதையைக் கேள்/கூறு.

## II. படிப்புப் பயிற்சி

**1. கீழ்வரும் விடுகதையைப் படித்துச் சரியான விடையைக் கண்டுபிடி :**

மூன்று எழுத்துகளால் ஆன ஒரு விலங்கின் பெயர் ;
முதல் இரண்டு எழுத்துகளைச் சேர்த்தால் வினையின் பெயர் ;
முதல் எழுத்தையும் மூன்றாம் எழுத்தையும் சேர்த்தால் ஒலியின் பெயர் ;
கடைசி இரண்டு எழுத்துகளையும் சேர்த்தால் அலையின் பெயர்;

—அஃது என்ன?

[குதிரை—குதி, குரை, திரை]

**2. கீழ்வரும் பழமொழிகளைப் படி :**

(அ) 'கடிவாளம் இல்லாத குதிரை கட்டுக்கு அடங்காது ஓடும்.'

(ஆ) 'கொள்ளு என்றால் வாயைத் திறக்கும்.
கடிவாளம் என்றால் வாயை மூடும்.'

(இ) 'முன்னால் போனால் கடிக்கும்; பின்னால் போனால் உதைக்கும்.'

**3. பின்வரும் செய்யுள் வரியைப் படி :**

'கொம்புளதற்கு ஐந்து; குதிரைக்குப் பத்து முழம்;
வெம்புகரிக்கு ஆயிரந்தான் வேண்டுமே.'

—நீதி வெண்பா

## III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

புதுமை ×　　　　முன்னால் ×
திறக்கும் ×　　　　நனைந்த ×

**2. சேர்த்து எழுது :**

யாவரும் + அறிந்த =　　　　பழமை + காலம் =
பத்து + ஐந்து =

**3. பிரித்து எழுது :**

காட்டுவிலங்கு, மேற்புறம், வீட்டுவிலங்கு, தோற்பட்டை, கொம்புள்ள.

**4. வாக்கியத்தில் அமை :**

நன்றாக, அடர்த்தியாக, நெடுந்தூரம்.

**5. சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமை :**

| | | |
|---|---|---|
| குதிரை | ......................<br>......................<br>..... ...............<br>...................... | செல்லும். |

[நடந்தும், ஓடியும், அசைந்தாடியும், பாய்ந்தும்]

6. புள்ளியிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்பி எழுது :

குதிரைக்குட்டி பிறந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ..............; ..............

7. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :

(அ) வீட்டு விலங்குகள் யாவை ?

(ஆ) குதிரையின் தோற்றம்பற்றி எழுது.

(இ) குதிரை நமக்கு எவ்வாறு பயன்படுகின்றது ?

(ஈ) குதிரை எவற்றை உண்ணும் ?

(உ) குதிரைபற்றிய பழமொழிகள் யாவை ?

(ஊ) 'நான் விரும்பும் விலங்கு குதிரை' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுது.

## இலக்கணம்

### குறில், நெடில்

| | |
|---|---|
| அறம் | ஆறு |
| இடி | ஈட்டி |
| உச்சி | ஊர் |
| எஃகு | ஏலம் |
| ஒன்று | ஐந்து |
| | ஓடு |
| | ஔவை |

இச்சொற்கள் இரண்டு வரிசைகளில் உள்ளன. முதல் வரிசையில் உள்ள சொற்களின் முதல் எழுத்துகளை ஒலித்துப்பார். அவை குறுகிய ஓசை யுடையனவாக இருப்பது தெரியும். இரண்டாம் வரிசையில் உள்ள சொற்களின் முதல் எழுத்துகளை ஒலித்துப்பார். அவை நீண்ட ஓசையுடையனவாக இருப்பது தெரியும். இந்த இரண்டு வகையான எழுத்துகளும் உயிர் எழுத்துகளே. இவைகளில் குறுகிய ஓசையுடைய 'அ, இ, உ, எ, ஒ' என்னும் ஐந்து எழுத்து களும் **குறில்** எனப்படும். நீண்ட ஓசையுடைய 'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ' என்னும் ஏழு எழுத்துகளும் **நெடில்** எனப்படும்.

இவை போன்றே உயிர்மெய் எழுத்துகளிலும் குறுகிய ஓசையுடையவை **உயிர்மெய்க் குறில்** எனவும், நீண்ட ஓசையுடையவை **உயிர்மெய் நெடில்** எனவும் கூறப்படும்.

### பயிற்சி

1. குறில் என்பது யாது? உயிர்க்குறில் எழுத்துகள் யாவை ?
2. நெடில் என்பது யாது? உயிர்நெடில் எழுத்துகள் யாவை ?

# 6. நூல் நிலையம்

*[உரையாடல்]*

*அரசி :* அப்பா! நாளை எங்கள் பள்ளியில் கட்டுரைப்போட்டி நடத்தப் போகிறார்கள்; அதில் நான் கலந்து கொள்ளப் போகிறேன்.



*அப்பா :* அப்படியா அரசி! மிக்க மகிழ்ச்சி! என்னென்ன தலைப்புகளைக் கட்டுரைப் போட்டிக்குக் கொடுத்துள்ளார்கள் ?

*அரசி :* 'நூல் நிலையம்,' 'நான் விரும்பும் தொழில்', 'நான் விரும்பும் தலைவர்' என்னும் மூன்று தலைப்புகள் கொடுத்துள்ளார்கள்.

*அப்பா :* நீ என்ன தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளாய், அரசி ?

*அரசி :* நான் 'நூல் நிலையம்' என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத் துள்ளேன்.

*அப்பா :* ஏன் அதைத் தேர்ந்தெடுத்தாய் ?

*அரசி :* 'நூல் பல கல்', 'நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என ஔவைப் பாட்டி கூறியுள்ளது நினைவுக்கு வந்தது. அதனால் அத்தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.

*அப்பா :* அப்படியா, மிக்க மகிழ்ச்சி. நூல் என்பது என்ன ? உனக்குத் தெரியுமா, அரசி ?

*அரசி :* நூல் என்பது அச்சிட்ட தாள்களால் ஆன அறிவை வளர்க்கும் புத்தகம்தானே, அப்பா ? அது எனக்குத் தெரியுமே.

*அப்பா :* ஆம். அதற்கு இன்னொரு பொருளும் உண்டு. அஃது உனக்குத் தெரியுமா, அரசி ?

*அரசி :* நாம் வீட்டில் துணிகளைத் தைக்கப் பயன்படுத்துகிறோமே, பஞ்சினால் ஆன நூல்தானே அது ? அதுவும் எனக்குத் தெரியுமே, அப்பா. நூல் நிலையம் என்பது என்ன அப்பா ?

*அப்பா :* பல ஆயிரக்கணக்கான நூல்களை ஒழுங்காக வகைப்படுத்தி மக்கள் படிப்பதற்காக வைக்கப்பட்ட ஓரிடம் நூல் நிலையம் எனப்படும்.

*அரசி :* நூல் நிலையத்தில் என்னென்ன நூல்கள் இருக்கும், அப்பா ?

*அப்பா :* மொழி, கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், இலக்கியம், சமயம் போன்ற பல துறைகளைச் சார்ந்த நூல்கள் இருக்கும்.

*அரசி :* கதை, கட்டுரை நூல்கள் எல்லாம் இராதா அப்பா ?

*அப்பா :* நீ குறிப்பிட்ட நூல்கள் இலக்கியம் என்னும் துறையில் இருக்கும்.

*அரசி :* நூல் நிலையத்தில் பல ஆயிரக்கணக்கான நூல்கள் இருக்குமே, எனக்கு வேண்டியதை எவ்வாறு எடுத்துப் படிப்பேன் ?

***அப்பா :*** நூல் நிலையத்தில் நூலகர் இருப்பார். உனக்குத் தேவையான நூல்களைக் கேட்டால், அவற்றை எடுத்துத் தருவார்.

***அரசி :*** அந்த நூல்களை நான் வீட்டுக்குக் கொண்டுவந்து படிக்கலாமா, அப்பா ?

***அப்பா :*** நூல் நிலையத்தில் படிப்பறை உண்டு. அங்கு அமர்ந்து படிக்கலாம். ஆனால், சத்தம் போட்டுப் படிக்கக் கூடாது. அமைதியாகப் படிக்கவேண்டும். வீட்டுக்கு நீ விரும்பும் நூல்களைக் கொண்டுவந்து படிக்கவேண்டுமானால் நீ நூல் நிலையத்தில் உறுப்பினராக வேண்டும். அதற்குக் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தவேண்டும்.

***அரசி :*** நூல் நிலையம் எத்தனை வகைப்படும், அப்பா ?

***அப்பா :*** குழந்தைகள் நூல் நிலையம், பொது நூல் நிலையம், பள்ளி நூல் நிலையம் முதலிய பல வகைப்படும்.

***அரசி :*** நம் நாட்டிலே மிகப் பெரிய நூல் நிலையம் எங்கு உள்ளது, அப்பா ?

***அப்பா :*** நம் நாட்டிலே மிகப் பெரிய நூல் நிலையம் கல்கத்தாவில் உள்ளது. தமிழ்நாட்டிலே மிகப்பெரிய நூல்நிலையம் சென்னையில் உள்ள கன்னிமரா நூல் நிலையமாகும்.

***அரசி :*** நூல் நிலையத்திற்குச் சென்று படிப்பதால் என்ன நன்மைகள் ஏற்படுகின்றன ?

***அப்பா :*** அகன்ற அறிவையும், உயர்ந்த பண்புகளையும் பெறலாம். புத்தம் புதிய நூல்களைப் படிப்பதால் புத்துணர்ச்சியைப் பெறுகிறோம். நேரம் பயனுள்ள முறையில் கழிகிறது.

***அரசி :*** நல்ல பயனைத்தான் தருகிறது நூல் நிலையம். இல்லையா, அப்பா?

***அப்பா :*** ஆம், அரசி. சரி, எனக்கு வேறு வேலை இருக்கிறது. இதுவரை நான் கூறியதை வைத்துக் கட்டுரை ஒன்றை எழுதிப் படி. போட்டியில் வெற்றி பெற என் வாழ்த்துகள்..

***அரசி :*** நன்றி அப்பா. நான் போய்க் கட்டுரைப் போட்டிக்கான குறிப்புகளைத் திரட்டிக்கொள்கிறேன்.

## 27

## அருஞ்சொற்பொருள்

நூல் - புத்தகம்,   நுண்ணறிவு - நுட்பமான அறிவு.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. அருகில் உள்ள நூல் நிலையம் சென்றுவந்ததைப் பற்றிக் கூறு.
2. நூல் நிலையம் பற்றிச் சுவையான செய்திகளைக் கேட்டறி.
3. சிறுவர் நூல் நிலையமும், பொது நூல் நிலையமும் பேசிக் கொள்வதைப்போல் உரையாடு.

### II. படிப்புப் பயிற்சி

கீழ்வரும் பொன்மொழிகளைப் படி :

(அ) 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூல்பயனே.'

—பவணந்தி முனிவர்

(ஆ) 'நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.'

—ஔவையார்

(இ) 'புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.'

—பாரதிதாசன்

### III. எழுத்துப் பயிற்சி

1. சேர்த்து எழுது :

புதுமை + உணர்ச்சி =     படிப்பு + அறை =

2. வாக்கியத்தில் அமைத்து எழுது :

வியப்பூட்டும், கதை கட்டுரை.

3. புள்ளியிட்ட இடங்களை நிரப்பி எழுது :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் நிலையத்தில் | ............<br>............<br>............<br>............<br>............<br>............<br>............ | போன்ற | துறையைச் | சார்ந்த | நூல்கள் இருக்கும். |

4. துணி என்னும் சொல்லிலிருக்கும் முதல் எழுத்தை மாற்றிப் புதுச் சொற்களை அமை :

அணி, ........., ........., ........., ........., ........., ........., ........., ........., ........., .........  [ஆ, ஏ, க, கா, கே, கோ, சா, பி, ப, ம]

5. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :

(அ) கட்டுரைப் போட்டிக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகள் யாவை ?

(ஆ) அரசி நூல் நிலையம் என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

(இ) நூல் என்பது யாது ?

(ஈ) நூல் நிலையம் என்பது யாது ?

(உ) நூல் நிலையத்தில் என்னென்ன நூல்கள் இருக்கும் ?

(ஊ) நூல் நிலையம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

(எ) நூல் நிலையத்தில் சென்று படிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

## இலக்கணம்

### வல்லினம், மெல்லினம், இடையினம்

காக்கும், திருச்சி, ஈட்டி, புத்தகம், அப்பா, நூற்கள்.—இச்சொற்களை ஒலித்துப்பார். இவற்றில் உள்ள மெய்யெழுத்துகளுள் 'க், ச், ட், த், ப், ற்' என்னும் ஆறு எழுத்துகள் வலிய ஓசை உடையன. இவை **வல்லினம்** எனப் படும்.

பூங்கா, பஞ்சு, கண், பந்து, மரம், நான்.—இச்சொற்களில் உள்ள மெய்யெழுத்துகளுள் ' ங், ஞ், ண், ந், ம், ன் ' என்னும் ஆறு எழுத்துகள் மெலிய ஓசை உடையன. இவை **மெல்லினம்** எனப்படும்.

நாய், நீர், நூல், கொவ்வை, வீழ்ச்சி, தாள்.—இச்சொற்களில் உள்ள 'ய், ர், ல், வ், ழ், ள்' என்னும் எழுத்துகள் வல்லின ஓசைக்கும், மெல்லின ஓசைக்கும் இடைப்பட்ட ஓசை உடையன. இவை **இடையினம்** எனப்படும்.

எனவே, மெய் எழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

### பயிற்சி

1. மெயயெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? விளக்கு.

2. புள்ளியிட்டவைகளை நிரப்பு :

| | | | |
|---|---|---|---|
| வலிய<br>மெலிய<br>இடைப்பட்ட | ஓசை | உடையவை | ... - ...........<br>........... ......<br>...... ...... - |

# 7. கைத்தொழில்


நம் நாட்டில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் உழவுத்தொழிலும் நெசவுத்தொழிலும் முதலிடம் பெறுகின்றன. இந்த இரண்டு தொழில்களுக்கும் அடுத்த நிலையில் கைத்தொழில் சிறப்புற்று விளங்குகிறது. இதன் சிறப்பினை உணர்ந்த கவிஞர் ஒருவர், 'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கு இல்லை ஒத்துக் கொள்,' என்று பாடினார். எனவே, நாம் கவலை இல்லாமல் வாழ ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பள்ளியில் கைத்தொழில் வகுப்புகள் பல உள்ளன. அவ்வகுப்பு களில் தாள் வேலை, களிமண் வேலை, பொம்மை செய்தல், பின்னல் வேலை, தடுக்குச் செய்தல் போன்ற தொழில்களுள் ஏதாவது ஒன்றைக் கற்றுத் தருகிறார்கள். கையினால் செய்யக்கூடிய சிறு தொழில்களைக் கைத்தொழில்கள் என்று கூறுகிறோம்.

கூடை முடைதல், பாய் பின்னுதல், மண்பாண்டம் செய்தல் போன்ற தொழில்களையும் கைத்தொழில்கள் எனக் கூறலாம். கயிறு திரித்தல், நூல் நூற்றல், செங்கல் அறுத்தல் போன்றவை கையினால் செய்யப்படும் போது அத்தொழில்களும் கைத்தொழில்கள் என அழைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பத்தமடை என்னும் ஊரில் பாய் பின்னுதல் என்னும் கைத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. பத்தமடைப் பாய் உலகப் புகழ் பெற்றதாக விளங்குகிறது. சாத்தூர், சிவகாசி போன்ற இடங்களில் பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்ற கைத்தொழில்கள் சிறப் பாக நடைபெறுகின்றன. கயிறு திரிக்கும் தொழில் கேரள மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

கைத்தொழில்களுக்குப் பல மூலப்பொருள்கள் தேவைப்படு கின்றன. கோரை, தேங்காய் நார், களிமண், செம்மண், ஓலைகள், மூங்கில், மரம் போன்றவை மூலப்பொருள்கள் எனப்படும். இவற்றுடன் கைத்தொழில் வல்லுநர்களும் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவைப் படுகின்றனர்.



ஒரு நாட்டின் பொருள் வளர்ச்சி அந்த நாட்டின் கைத் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பொறுத்தது. எனவே, நாம் கைத் தொழில்களுள் ஒன்றைக் கற்று அதன் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். கைத்தொழில்கள் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தருகின்றன. அதனால் வேலை இல்லாத் திண் டாட்டம் ஒழிகிறது.

கைத்தொழில்களினால் மேலும் பல நன்மைகள் விளை கின்றன. உழவுத்தொழிலுக்கு வேண்டிய ஏர், மரம், கொழு, நுகக்கோல், தார்க்கோல், வண்டிச் சக்கரம், கயிறு போன்ற பொருள்கள், கைத்தொழில்கள் மூலம் நமக்குக் கிடைக்கின்றன. நெசவுத் தொழிலுக்கு வேண்டிய தறி, நாடா, சட்டம் போன்ற பொருள்களும் அவை மூலம் நமக்குக் கிடைக்கின்றன. வீட்டிற் குத் தேவைப்படும் தட்டுமுட்டுச் சாமான்கள், பெட்டி படுக்கைகள், பாய், சமுக்களம், மட்பாண்டங்கள் போன்றவையும் கைத்தொழில்கள் மூலமே நமக்குக் கிடைக்கின்றன.

கைத்தொழில்களைச் செய் வதால் சிந்தனை, அறிவுக்கூர்மை

சுறுசுறுப்பு, மன அமைதி போன்றவை ஏற்படுகின்றன. அத்துடன் தொழில் திறமையும் ஏற்படுகிறது. உடல் நலத்தையும் வலிமையையும் சில கைத் தொழில்கள் ஏற்படுத்துகின்றன.



ஆலைத் தொழில்கள் பெருகிவரும் இக்காலத்தில் கைத் தொழில்கள் நசிந்துவருகின்றன. அவை நசிந்துவிடாமல் வளர நம் அரசு கடன் உதவி அளித்து வருகிறது.



நம் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழில் கல்விக்கு அரசு முக்கிய இடம் தந்துள்ளது. வேளாண்மை, பொறியியல், தையல் போன்ற பல தொழில் கல்விகளைக் கற்றுத்தருகிறார்கள்.



கைத்தொழில்கள் பல நன்மைகளை ஏற்படுத்துவதால் நாம் ஒவ்வொருவரும் குலம், சமயம் முதலிய வேறுபாடுகளை மறந்து அரசு தரும் உதவியைப் பெற்றுக் கைத்தொழிலைச் செய்யவேண்டும். அதன்மூலம் நம்மையும் நாட்டையும் உயர்த்தவேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

கவலை - துயரம், நசிந்து - தேய்ந்து, வேளாண்மை - உழவு, பொறி - எந்திரம்.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. உழவுத் தொழில்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

2. நீ விரும்பும் கைத்தொழில் ஒன்றைப்பற்றிக் கூறுக.

3. கைத்தொழில்கள் இரண்டு தம்முள் உரையாடுவதைப்போல உரையாடு.

4. கீழ்வரும் பாடல்களைச் சேர்ந்து பாடு :

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ?

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக்கு அச்சாணி.

—நாமக்கல் இராமலிங்கம்

சிறுசிறு தேங்காய் நார்கள்
சேர்ந்தவை ஒன்று பட்டால்
அரும்பெரும் தேரைக் கூட
இழுத்திடும் வடமாய் ஆகும்.

—கவிஞர் தமிழ்முடி

### II. படிப்புப் பயிற்சி

புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி :

(அ) உழவுத் தொழிலுக்கு வேண்டிய ......... ......... ... ..... ......... போன்ற பொருள்கள் கைத்தொழில்கள்மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

(ஆ) நெசவுத் தொழிலுக்கு வேண்டிய ... ..... ......... ......... போன்ற பொருள்கள் கைத்தொழில்கள் மூலமே நமக்குக் கிடைக்கின்றன.

### III. எழுத்துப் பயிற்சி

1. எதிர்ச்சொல் எழுது :

கவலை ×          சிறுதொழில் ×
**புகழ்** ×          **நன்மைகள்** ×

**2. பிரித்து எழுது :**

கைத்தொழில், உனக்கில்லை

**3. சேர்த்து எழுது :**

ஆலை + தொழில் = நெசவு + தொழில் –

உழவு + தொழில் =

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

சிறப்புற்று, உலகப்புகழ்

**5. பொருத்தி எழுது :**

| | | |
|---|---|---|
| கூடை | — | நூற்றல் |
| பாய் | — | திரித்தல் |
| கயிறு | — | முடைதல் |
| செங்கல் | — | பின்னுதல் |
| நூல் | — | அறுத்தல் |

**6. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :**

(அ) கைத்தொழிலை ஏன் கற்றுக்கொள்ளவேண்டும் ?

(ஆ) பள்ளியில் கற்றுக்கொடுக்கப்படும் கைத்தொழில்கள் யாவை ?

(இ) வேறு என்னென்ன கைத்தொழில்கள் உள்ளன ?

(ஈ) நம் நாட்டில் எங்கெல்லாம் என்னென்ன கைத்தொழில்கள் சிறந்து விளங்குகின்றன ?

(உ) கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள் யாவை ?

(ஊ) கைத்தொழிலினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

(எ) கைத்தொழில்மூலம் நாம் என்னென்ன பொருள்களைப் பெறுகிறோம் ?

## இலக்கணம்

### சுட்டு — வினா

| | | |
|---|---|---|
| அவ்வகுப்பு | இந்நாடு | உவ்வீடு |
| அவன் | இவன் | |
| அவர் | இவர் | |

இச்சொற்களில் உள்ள 'அ, இ, உ' என்னும் எழுத்துகள் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டப் பயன்படுகின்றன. அந்த எழுத்துகள் **சுட்டெழுத்துகள்**

எனப்படும். இச்சுட்டெழுத்துகள் உயிர் எழுத்துகளாகவும் குறிலாகவும் இருப்பதைக் கவனி. ‘உ’ என்னும் எழுத்துச் செய்யுளில் மட்டும் வரும்.

என்ன ? யார் ? ஏன் ?

வந்தவர் அரசரா ? நீயோ போனாய்?

இச்சொற்களில் எ, யா, ஆ, ஒ, ஏ ஆகிய ஐந்து எழுத்துகளும் கேள்விப் பொருளை உணர்த்துகின்றன. எனவே, இவை **வினா எழுத்துகள்** ஆகும். (வினா - கேள்வி)


### பயிற்சி

1. சுட்டு எழுத்து என்பது யாது ?
2. வினா எழுத்து என்பது யாது ?
3. கீழ்வரும் கட்டத்தில் சுட்டெழுத்துகளையும் வினா எழுத்துகளையும் எடுத்து எழுது :

| சொற்கள் | சுட்டு | வினா |
|---|---|---|
| அவன் | | |
| என்ன ? | | |
| இவர் | | |
| ஏன் ? | | |

# 8. தொலைக்காட்சி

நீங்கள் தொலைபேசிக் கருவியைப் பார்த்திருப்பீர்கள். அக்கருவி தொலைவில் உள்ளவர்களுடன் பேசப் பயன்படுகிறது. வானொலிப் பெட்டியையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்பெட்டி வானொலி நிலையம் ஒலி பரப்பும் எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்கப் பயன்படுகிறது. தொலைவில் நிகழும் காட்சிகளை நம் வீட்டிலிருந்தபடியே பார்த்து மகிழவும்,



நேர்முக வருணனைகளைக் கேட்டு மகிழவும் இன்னொரு பெட்டி பயன்படுகிறது. அப்பெட்டியின் பெயர் 'தொலைக்காட்சிப் பெட்டி' என்பதாகும்.

தொலைக்காட்சி நிலையங்களிலுள்ள கருவிகள் காட்சிகளைப் படம் பிடிக்கின்றன; அத்துடன் ஒலியையும் பதிவு செய்கின்றன.

பின்னர், இக்காட்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அதனுடன் ஒலியும் ஒலி பரப்பப்படுகின்றது. இவ்வாறு பரப்பப்படும் ஒளியும் ஒலியும் மின் அணு அலைகளாக மாற்றப்படுகின்றன. அவை வான்வழியாக வரும்போது 'ஆண்டனாக்கள்' என்னும் கருவி, ஒளி அலைகளைப் பெற்று நாம் பார்க்கும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அனுப்பி வைக்கிறது. அங்கு மின் அணு அலைகள் ஒளி, ஒலி அலைகளாக மாற்றப்பட்டுக் காட்சி யாகத் திரையில் தெரிகிறது.

தொலைக்காட்சியைப் பல அறிவியல் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து கண்டுபிடித்தனர். எனினும், 'தொலைக்காட்சியின் தந்தை' எனக் கூறப்படுபவர் 'ஸ்வாரிக்கின்' என்னும் அறிவியல் அறிஞர் ஆவார். இவர்தான் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை 1929ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். அதன் பிறகு தொலைக்காட்சிப் பெட்டியை நல்ல முறையில் உருவாக்கி முதன் முதலில் படத்தைத் தெளிவாகக் காண்பித்தவர் 'ஜான் எல் பெயர்டு' என்னும் அறிவியல் அறிஞர் ஆவார்.

சென்னையில் தொலைக்காட்சி நிலையம் உள்ளது. அது நாள் தோறும் பாட்டு, நடனம், நாடகம், திரைப்படம், கிராமக்கலை நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒளிபரப்புகிறது.

தொலைக்காட்சித் திரையின் அகலத்தைப் போன்று ஏழெட்டு மடங்குத் தொலைவில் இருந்து தொலைக் காட்சியைப் பார்க்கவேண்டும். மிக அருகில் இருந்து பார்த்தால் கண் பார்வை கெடும். எதையாவது மென்று தின்று கொண்டே பார்க்கக்கூடாது எனவும் பார்த்த உடனே தூங்கப் போகக்கூடாது எனவும் உடல் நல இயல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு தீப்பெட்டி அளவுள்ள தொலைக்காட்சிப் பெட்டியும் உண்டு. இது மிகச் சிறியதாக இருந்தாலும் காட்சிகளைத் தெளிவாகக் காட்டும். இதனைச் சப்பான் நாட்டுத் தொழில் நிறுவனம் உருவாக்கியுள்ளது. பல வண்ணங்களில் காட்சிகளைக் காட்டும் தொலைக்காட்சியும் உள்ளது. இந்தத் தொலைக்காட்சி நாம் வண்ணத் திரைப்படங்களைப் பார்ப்பது போலவே இருக்கும்.

தொலைக்காட்சி, கல்வியைப் பரப்புவதற்கு ஓர் அருமையான சாதனமாகும். ஓர் ஆசிரியர் பல ஆயிரம் மாணாக்கர்களுக்கு ஒரே நேரத்தில் பாடங்களைக் கற்பிக்க முடியும் அல்லவா ?

குடியரசு நாள் விழா, விடுதலை நாள் விழா, 'கிரிக்கெட்டு'ப் போட்டிகள், கால் பந்தாட்டம், மல்யுத்தப் போட்டிகள் முதலியவற்றை நாம் தொலைக்காட்சியில் கண்டு மகிழலாம்.

தொலைக்காட்சியைப் பயன்படுத்திக் கடலில் மூழ்கிய கப்பலைக் கண்டுபிடித்தனர். கடலின் அடித்தரையையும், ஆழ்கடலில் இருளில் வாழும் மீன்களையும் படம்பிடிக்கத் தொலைக்காட்சியின் படப்பிடிப்புக் கருவி பயன்படுகிறது.

தொலைக்காட்சி போன்ற அறிவியல் விந்தைக் கருவிகள் பல உள்ளன. அவற்றைப்பற்றிப் படித்தும் அவற்றைப் பயன்படுத்தியும் நம் அறிவியல் அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

### அருஞ்சொற்பொருள்

வான் - ஆகாயம், அறிவியல் — விஞ்ஞானம், ஆழ்கடல் - ஆழமான கடல், விந்தை - வியப்பு.

### பயிற்சி

#### I. வாய்மொழிப் பயிற்சி

1. தொலைபேசியும் தொலைக்காட்சியும் உரையாடுவதைப்போல் உரையாடு.
2. வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் உள்ள வேறுபாடுகளைக் கேட்டறி.
3. தொலைக்காட்சியில் நீ கண்டவைகளைக் கூறு.

#### II. படிப்புப் பயிற்சி

1. தொலைக்காட்சி பற்றிய சிறுநூல்களைப் படி.
2. பொருத்திப் படி :

| | | | |
|---|---|---|---|
| தொலைக்காட்சி / வானொலி | நிலையம் | ..................<br>..................<br>.................. | பரப்புகின்றது. |

[ஒலி, ஒளி, ஒலியும் ஒளியும்]

3. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி :

தொலைக்காட்சியின் தந்தை எனப்படுபவர்.................ஆவார்.

## III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

தொலைவில் ×　　　　　அடிப்பகுதி ×

**2. சேர்த்து எழுது :**

வான் + ஒலி =　　　　　ஏழு + எட்டு =

பல + ஆயிரம் =　　　　　மின் + அணு =

**3. பிரித்து எழுது :**

வானொலிப்பெட்டி, பார்க்கக்கூடாது

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

அறிவியல், விந்தை, ஏழெட்டு

**5. வேறுபாடு அறிந்து பொருள் எழுது :**

அலை — அளை — அழை

கலை — களை — கழை

ஒலி — ஒளி — ஒழி

**6. பொருத்தி எழுது:**

| | | | |
|---|---|---|---|
| வானொலி<br>தொலைக்காட்சி | நிகழ்ச்சிகளைக் | ..................<br>.................. | மகிழலாம். |

[கண்டு, கேட்டு]

**7. விடை எழுது :**

(அ) தொலைக்காட்சிப் பெட்டி என்பது யாது ?

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒளிபரப்பப்பட்டுப் பெட்டியின் திரையில் தெரிகின்றன ?

(இ) தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார் ?

(ஈ) தொலைக்காட்சியை எவ்வாறு பார்க்கவேண்டும் ?

(உ) தொலைக்காட்சியின் பயன்கள் யாவை ?

(ஊ) தொலைக்காட்சிபற்றிய விந்தைச் செய்திகளை எழுது.

# இலக்கணம்

## சொல்லின் இலக்கணம்

தொலைக்காட்சியால் அறிவு வளர்கிறது. ‘ உறுமீன் ’

மேலே பல சொற்கள் உள்ளன. அவை எழுத்துகளால் ஆனவை. ‘தொலைக்காட்சி’ என்னும் சொல் ஒரு பொருளின் பெயரைத் தருகிறது. ‘வளர்கிறது’ என்னும் சொல் வினைப்பொருளைத் தருகிறது. ‘ வினை ’ என்பது செயல் எனப் பொருள்படும். ‘ஆல்’—பெயர் வினைகளுக்கு இடையே நின்று பொருள் தருகிறது. ‘உறு’—செய்யுளுக்கே உரியதாக இருந்து ‘மிகுதி’ என்னும் பொருளைத் தருகிறது. எனவே, சொல்லுக்குப் பெயர்த் தன்மை உண்டு ; பெயர், வினைகளுக்கு முன்னோ பின்னோ ஓரிடத்து நிற்கும் தன்மை உண்டு; செய்யுளில் மட்டும் நிற்கும் தன்மை உண்டு. எனவே, சொல்லின் வகைகளையும், சொல்லின் தன்மைகளையும் கூறும் இலக்கணம் சொல் இலக்கணம் எனப்படும்.

### பயிற்சி

1. ஏற்ற சொற்களை நிரப்பிப் படி :

| | | | |
|---|---|---|---|
| சொல்லின் | ..................<br>.................. | கூறும்<br>இலக்கணம் | சொல்<br>இலக்கணம் |

2. சொற்கள் எவற்றால் ஆனவை ?

3. சொல் இலக்கணம் என்பது யாது ?

# 9. கடிதம் எழுதுதல்

## *பாராட்டுக் கடிதம்*

9, திருவள்ளுவர் தெரு,
திருச்செந்தூர் - 628 215
4 - 6 - 83

அன்புள்ள நண்பன் அறிவொளிக்கு,

வணக்கம். இங்கு நானும், என் தாய், தந்தை, உடன் பிறந்தார் அனைவரும் நலம். அங்கு உன் நலத்தையும் உன் உடன்பிறந்தார் நலத்தையும் அறிய விரும்புகிறேன். நீ அன்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது. அதில் நீ வானொலியில் சொற்பொழிவு ஆற்றப்போவதாக எழுதியிருந்தாய். அதைப் படித்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

நீ உன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் வானொலியில் 'மாணவர் கடமை' என்னும் தலைப்பில் நீ சொற்பொழிவு ஆற்றியதைக் கேட்டேன். நீ மிகவும் சிறப்பாகப் பேசினாய். பேச்சாற்றல் எல்லார்க்கும் வாய்ப்பது அரிது. நேரு, பேரறிஞர் அண்ணா, தமிழ்த் தென்றல் திரு. வி. க. போன்றோர் பேச்சாற்றலில் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் பேச்சை உலக மககள் போற்றிப் பாராட்டினார்கள். நீயும் அவர்களைப்போலப் பேச்சாற்றலில் சிறந்து விளங்கி உலகப்புகழ் பெறவேண்டுமென விரும்புகிறேன்.

நீ மேலும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு புகழ் பெற வேண்டும் என்பது என் ஆசை ஆகும்.

இப்படிக்கு,
உன் அருமை நண்பன்,
*இரா. வளவன்*

*முகவரி :*
செல்வன் மு. அறிவொளி,
18, பாரதிதாசனார் தெரு,
காஞ்சிபுரம் - 631 501

## விடுப்பு விண்ணப்பக் கடிதம்

*விடுநர் :*

ப. இளங்கோவன்,
6, பாரதிதாசன் தெரு,
மயிலாடுதுறை

*பெறுநர் :*

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஐந்தாம் வகுப்பு 'அ' பிரிவு,
திருமுருகன் தொடக்கப் பள்ளி,
மயிலாடுதுறை

ஐயா,

வணக்கம். நேற்று மாலைமுதல் என் பாட்டியார் காய்ச்சலால் துன்பப்படுகிறார். நான் அவருடன் மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இன்று என்னால் பள்ளிக்கு வர இயலவில்லை. ஆகையால், இன்று (9-6-'83) ஒருநாள்மட்டும் விடுப்பு அளிக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
*ப. இளங்கோவன்*

மயிலாடுதுறை,
9 - 6 - '83

## *வாணிகக் கடிதம்*

*விடுநர் :*

ந. குறிஞ்சி வேந்தன்,
ஐந்தாம் வகுப்பு,
கண்ணப்பர் தொடக்கப் பள்ளி,
தஞ்சாவூர் - 613 001

*பெறுநர் :*

மேலாளர் அவர்கள்,
அகத்தியனார் நூற்பதிப்புக் கழகம்,
சென்னை - 600 003

ஐயா,

கீழே குறிக்கப்பெற்ற நூல்களை என் முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவற்றிற்குரிய பணத்தைப் பணவிடைமூலம் தங்களுக்கு அனுப்பியுள்ளேன்.

| *வரிசை எண்* | *நூல்களின் பெயர்* |
|---|---|
| (1) | நீதிநூற் கொத்து |
| (2) | திருக்குறள் தெளிவுரை |
| (3) | தம்பிக்கு |
| (4) | கதைத் திரட்டு |

மிக்க நன்றி.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
*குறிஞ்சி வேந்தன்*

தஞ்சாவூர்,
12 - 6 - '83

## அருஞ்சொற்பொருள்

பாராட்டு - புகழ்ச்சி, அரிது - அருமையானது.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. கடிதம் எழுதுவது எவ்வாறு என்பதுபற்றி உரையாடு.
2. தவலை போயிற்று என்று எழுதுவதற்குப் பதில் தலை போயிற்று என்று ஒருவன் எழுதிய நிகழ்ச்சிபற்றிக் கேட்டறி.

### II. படிப்புப் பயிற்சி

1. பல்வேறு வகையான கடிதங்களைப் படி. கடிதத்தின் அமைப்பைத் தெரிந்துகொள்.
2. பண விடையை எவ்வாறு நிரப்புவது என்பதைக் கேட்டறிந்துகொள்.

### III. எழுத்துப் பயிற்சி

(அ) உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள தமிழ் தெரிந்த மாணாக்கன் ஒருவனுக்கு உனது மாநிலம்பற்றிக் கடிதம் எழுது.

(ஆ) எதிர்ச்சொல் எழுது :

மகிழ்ச்சி × அரிது ×

(இ) பிரித்து எழுது :

பேச்சாற்றல், உலகப்புகழ்

## இலக்கணம்

### சொல்லின் வகைகள்

குதிரை

நாடு

இச்சொற்கள் உன் பாடத்தில் வந்துள்ளன. இச்சொற்கள் பொருள், இடம் போன்ற பெயர்களைக் குறிக்கின்றன. அதனால், இவை **பெயர்ச் சொற்கள்** எனப்பட்டன.

புயல் வீசியது.

மேகங்கள் சூழ்ந்தன.

இவ்வாக்கியங்களில் 'வீசியது, சூழ்ந்தன' எ
வந்துள்ளன. இச்சொற்கள் ஒரு பொருளின் வினையை
குறிக்கின்றன. அதனால், இவை **வினைச்சொற்கள்** என

தாமரை சிரித்தமுகம் என மலர்ந்தது.

பாம்பு கடகம் என வளைந்தது.

இவ்வாக்கியங்களில் 'என' என்னும் சொல் பெயர் வினைகளுக்கு இடையே வந்துள்ளது. இவ்வாறு வரும் சொற்கள் **இடைச்சொற்கள்** எனப் பட்டன.

நனி தாழ்ப

உறுமீன்

இச்சொற்றொடர்களில் 'நனி', 'உறு' என்னும் சொற்கள் செய் யுளுக்கே உரியனவாய் உள்ளன. அதனால் இவை **உரிச்சொற்கள்** எனப் பட்டன.

சொல் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

### பயிற்சி

1. சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களைக் க்ண்டுபிடித்துக் கட்டங்களில் எழுது.

   (1) குதிரை ஓடியது.

   (2) தட்டு நனி தாழ்ந்தது.

   (3) இலை பனி எனக் குளிர்ந்தது.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| | | | |

# 10. புறாவும் எறும்பும்

காவிரி ஆற்றின் கரையில் ஒரு பெரிய காடு இருந்தது. ஆற்றின் கரைமேல் இருந்த பலா மரத்தில் ஒரு புறா கூடுகட்டி வாழ்ந்துவந்தது. அந்த மரத்தின் கீழே இருந்த ஒரு பெரிய புற்றில் எறும்புகள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஓர் எறும்பு புறாவுக்கு உற்ற நண்பனாக விளங்கியது. ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் புறாவும் எறும்பும் அன்புடன் உரை யாடிக் கொள்ளும். அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் புறா, எறும்பிடம் சொல்லும். அதேபோல எறும்பும் புறாவிடம் பல செய்திகளைச் சொல்வது வழக்கம்.

ஒரு நாள் மாலை எறும்பு தண்ணீர் குடிக்க ஆற்றுக்குச் சென்றது. அஃது ஆற்றுக்குள் தவறி விழுந்து தத்தளித்தது. மரத்தின் மேலிருந்த புறா அதைப் பார்த்து வருத்தம் கொண்டது. உடனே அப்புறா ஓர் இலையைத் தன் அலகால் கிள்ளி எறும்பின் அருகில் போட்டது. எறும்பு இலையின்மேல் ஏறிக் கரையை அடைந்தது. அது புறாவிடம், ''நண்பரே, உங்களால் நான் இன்று உயிர் பிழைத்தேன் ; இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்,'' என்று கூறியது. இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு எறும்பும் புறாவும் மிகநெருங்கிய நட்புக் கொண்டன. இவ்வாறு சில நாள்கள் சென்றன.

புறா ஒருநாள் இரை தேட நெடுந்தொலைவு சென்றது. அப்போது பெரிய பருந்து ஒன்று இரை கிடைக்காமல் சுற்றி அலைந்தது. அது புறாவைக் கண்டதும் பெரிதும் மகிழ்ந்தது. '' ஆ ! இன்று நல்ல இரை கிடைத்தது. புறாவின் கறி மிகவும் சுவையாக இருக்கும்,'' என்று கூறிக்கொண்டே புறாவைத் துரத்தியது. புறா அஞ்சி, நடுநடுங்கி விரைவாகத் தன் இருப்பிடம் நோக்கிப் பறந்து சென்றது.

அவ்வேளையில் புறா வாழும் பலா மரத்தடியில் ஒரு வேடன் களைப்பாற அமர்ந்திருந்தான். அவனைக் கண்ட எறும்பு அச்சம் கொண்டது. நல்ல வேளையாகப் புறா நண்பர் இல்லை. இருந்தால் இக்கொடிய வேடன் அதனைக் கொன்று தின்று விடுவான் என்று எண்ணி யது. அப்போது பருந்துக்கு அஞ்சிய புறா, மரத்தில் விரைந்து வந்து அமர்ந்தது. துரத்திவந்த பருந்து மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

புறா மரத்தில் அமர்ந்ததைக் கண்டு வேடன் மகிழ்ச்சி அடைந்தான். ' இந்தப் புறாவைக் கொன்று என் பசியைப் போக்கிக்கொள்வேன்,' என்று எழுந்து நின்றான். தன் கையில் இருந்த வில்லில் அம்பைப் பூட்டி, புறாவை நோக்கிக் குறி வைத்தான். புறா அது கண்டு அஞ்சி உடனே பறந்து விடலாம் என்று எண்ணி மேலே பார்த்தது. அங்கே அதைக் கொல்ல வந்த பருந்து வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. கீழே வேடன் அம்பினால் குறி வைத்துக்கொண்டிருந்தான். புறா பெரிதும் அஞ்சியது.

வேடன் வில்லின் நாணை இழுத்தான். அவன் காலருகே இருந்த எறும்பு அவன் காலை 'வெடுக்' கென்று கடித்தது. அவன் ஆ ! என்று அலறி நாணை விட்டுவிட்டான். வில்லில் இருந்த அம்பு குறி தவறி மேலே பறந்துகொண்டிருந்த பருந்தின்மேல் பட்டது. பருந்து மேலிருந்து கீழே 'தொப்'பென விழுந்தது. வேடன் கடிபட்ட காலைத் தேய்த்துக் கொண்டு பருந்தைத் தூக்கிச் சென்றான்.

இவற்றை எல்லாம் கவனித்த புறா தன் நண்பனான எறும்புக்கு நன்றி சொல்லியது. " எறும்பு நண்பரே ! தக்க சமயத்தில் நீங்கள் வேடனின் காலைக் கடிக்கவே நான் உயிர் பிழைத்தேன். உங்கள் உதவியை நான் மறக்கவே மாட்டேன்," என்று புறா கூறியது.

இக்கதையால் 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்னும் முதுமொழி விளங்குகிறது அன்றோ ?

### *அருஞ்சொற்பொருள்*

*பிழைத்தேன்-தப்பித்தேன், இரை-உணவு, தொலைவு-தூரம், கறி-தசை, களைப்பு-சோர்வு, வேளை—நேரம், சமயம்-நேரம், இடுக்கண்-துன்பம்.*

I. வாய்மொழிப் பயிற்சி

(1) ' வேடனும் புறாக் கூட்டமும் ' என்னும் கதையைக் கேள்.

(2) புறாவுக்காகத் தன் தசையை அரிந்து கொடுத்த சிபிச்சோழன் கதையைக் கேள் / கூறு.

(3) புறா எறும்புபற்றிய சுவையான செய்திகளைக் கூறு.

(4) இப்பாடத்தைச் சிறு நாடகமாக நடித்துக் காட்டு.

## II. படிப்புப் பயிற்சி

**1.** புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி.

(அ) ஒருவர்க்கு ஒருவர் துன்பம் வந்த சமயத்தில்
............... ............... ...............

(ஆ) இடுக்கண் ............... ...............

**2.** புதிய சொற்களை அமைத்துப் படி:

கரை ..............., ..............., ..............., ..............., ...............,
..............., ...............

[ அ, இ, உ, த, ந, ம, வ ]

**3.** புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி:

| | | |
|---|---|---|
| எறும்பு | .................. | விழுந்தது. |
| பருந்து | .................. | |
| வேடன் | .................. | நின்றான். |

[தவறி, செத்து, எழுந்து]

**4.** நீதிகளைப் படி:

'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.'

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.'

## III. எழுத்துப் பயிற்சி

**1.** எதிர்ச்சொல் எழுது :

கீழே × மாலை ×

நண்பன் × தண்ணீர் ×

**2.** பிரித்து எழுது :

களைப்பாற, காலருகே, வில்லிலிருந்த, ஆற்றங்கரை.

**3.** சேர்த்து எழுது :

மேல் + ஏறி = அமர்ந்து + இருந்தான் =

வட்டம் + இட்டு = உங்கள் + உதவி =

**4.** வாக்கியத்தில் அமை :

நெடுந்தொலைவு, மறுபுறம், உயிர்பிழைத்தல், கொன்று தின்று.

5. வேறுபாடு அறிந்து பொருள் எழுது :

கரை — கறை | கொள்ளும் — கொல்லும்
இரை — இறை | வேளை — வேலை
கரி — கறி | காளை — காலை

6. புதிய சொற்களை எழுது :

சொல்லும் ..............., ..............., ...............

[ கொ, வெ, நி ]

7. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :

(அ) எறும்புக்குப் புறா செய்த உதவி யாது ?
(ஆ) புறா தன் இருப்பிடம் நோக்கி ஏன் பறந்து சென்றது ?
(இ) வேடன் ஏன் மகிழ்ந்தான் ?
(ஈ) பருந்து எப்படிச் செத்து விழுந்தது ?
(உ) தன் உயிரைக் காப்பற்றிய எறும்பை நோக்கிப் புறா கூறியது யாது?

## இலக்கணம்

### பெயர்ச்சொல்

**பலா** மரத்தில் **புறா** இருந்தது.
ஆற்றின் **கரையில்** **காடு** இருந்தது.
புறாவும் எறும்பும் **மாலை** நேரத்தில் அன்புடன் உரையாடும்.
**வேடன்** வேட்டையாடப் புறப்பட்டான்.
புறா **இலையைக்** கிள்ளிப் போட்டது.

இவ்வாக்கியங்களில் பல சொற்கள் உள்ளன. இவற்றுள் தடித்த எழுத்திலுள்ள சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன ?

'பலா', 'புறா', 'வேடன்' என்னும் சொற்கள் பொருளின் பெயரைக் குறிக்கின்றன. எனவே, இவை **பொருட்பெயர்** ஆகும்.

'காடு' 'கரை' என்னும் சொற்கள் இடத்தின் பெயரைக் குறிக்கின்றன. அதனால், இவை **இடப்பெயர்** ஆகும்.

'மாலை' என்னும் சொல் காலத்தைக் குறிக்கின்றது. அதனால், இது **காலப்பெயர்** ஆகும்.

'இலை' என்னும் சொல் உறுப்பின் பெயரைக் குறிக்கின்றது. அதனால், இது **சினைப் பெயராகும்**. 'சினை' என்னும் சொல்லுக்கு உறுப்பு என்பது பொருள்.

'அன்பு' என்னும் சொல் பண்பைக் குறிக்கிறது. அதனால், இது **பண்புப்பெயர்** ஆகும். இது குணப்பெயர் எனவும் கூறப்படும்.

'வேட்டை' என்னும் சொல் தொழிலைக் குறிக்கும். அதனால், இது **தொழிற்பெயர்** ஆகும்.

இவை எல்லாம் ஒன்றன் பெயரையே குறிக்கின்றன. அதனால், இவை பெயர்ச்சொற்கள் எனப்பட்டன. பெயர்ச்சொல் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகைப் படும்.

**பயிற்சி**

1. பெயர்ச்சொல் என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை யாவை?


2. நீ படித்த பாடங்களில் வந்துள்ள ஆறு வகைப் பெயர்களைக் கண்டு பிடித்துக் கீழ்வரும் கட்டங்களில் ஒவ்வொரு வகைக்கும் இரண் டிரண்டு எடுத்துக்காட்டுகளை எழுது :

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# 11. மனிதருள் மாணிக்கம்

பாரத நாடு பழம்பெரு நாடாகும். இந்நாடு சில காலம் அயலார் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்தது. பின்னர் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 15ஆம் நாள் விடுதலை பெற்றது. விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பிரதமர் 'மனிதருள் மாணிக்கம்' எனப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார்.

ஜவஹர்லால் நேரு உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அலகாபாத் என்னும் ஊரில் 1889ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14ஆம் நாள் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் மோதிலால் நேரு; தாயார் பெயர் சொரூபராணி அம்மையார். 'ஜவஹர்' என்னும் சொல்லுக்கு 'மாணிக்கம்' என்பது பொருள். 'லால்' என்னும் சொல்லுக்குச் 'சிவப்பு' என்பது பொருள். 'நேரு' என்பது குடும்பப் பெயராகும். வசதியான குடும்பத்தில் பிறந்த நேரு இளமையில் செல்லமாக வளர்க்கப்பட்டார்.



'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்பதற்கு ஏற்ப இவர் இளம் வயதிலேயே கூர்மையான அறிவு உடையவராக விளங்கினார். ஒரு சமயம், நேரு சிறுவராக இருக்கும்பொழுது சிறுவர்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது பந்து தரையில் இருந்த ஒரு சிறிய ஆழமான பொந்துக்குள் விழுந்துவிட்டது. பல சிறுவர்கள் கையைப் பொந்துக்குள் நுழைத்தார்கள். ஆனால், பந்து ஒருவர் கைக்கும் எட்டவில்லை. உடனே நேரு ஒரு வாளி நிறைய நீரைக் கொண்டுவந்து பொந்துக்குள் ஊற்றினார். பந்து மேலே வந்தது. சிறுவர்கள் பந்தை

எடுத்துக்கொண்டபின் நேருவின் அறிவுக் கூர்மையை வியந்து பாராட்டினார்கள். குதிரையேற்றம் அவருக்குப் பிடித்தமான விளையாட்டு ஆகும். நீச்சல் அடிப்பதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

சிறுவயதில் நேரு வீட்டிலேயே கல்வி கற்றார். ஆசிரியர்கள் அவரது வீட்டுக்கு வந்து பாடம் சொல்லித் தந்தார்கள். அறிவியல் துறையில் நேரு நல்ல ஆர்வம் காட்டிப் படித்தார். மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற அவர் அறிவியல் துறையில் உயர் பட்டம் பெற்றபின், சட்டக் கல்வி பயின்றார். அதன் பிறகு 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினார்.

தாயகம் திரும்பிய நேரு காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து காந்தியடிகளுடன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்; நாட்டின் விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றார். ஒரு முறை சிறையில் இருக்கும்போது அவரின் மனைவியார் கமலா நேரு உயிர் நீத்தார். எனினும், விடுதலைப் போராட்டத்தில் நேரு தளர்ச்சி அடையவில்லை.

இந்தியா விடுதலை பெற்றபின் முதல் பிரதமராகப் பதவி ஏற்ற நேரு, உலக அரங்கில் நம் நாடு முன்னணிக்கு வரப் பெரிதும் பாடுபட்டார். அணு ஆற்றலை ஆக்கப் பணிகளுக்கே பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார். உலகில் போரும் பூசலும் குறைய, 'பஞ்ச சீலக் கொள்கை' என்னும் அமைதிக் கருத்தை வெளியிட்டார். தம் அளப்பரிய தொண்டுகளால் நேரு, ***மனிதருள் மாணிக்கம்***, ***ஆசிய சோதி***, ***சமாதானப் புறா*** என்றெல்லாம் புகழப்பெற்றார்.

நேரு குழந்தைகளிடம் மிகுந்த அன்பு காட்டினார். குழந்தைகள் அவரை 'நேரு மாமா' என்று அன்புடன் அழைத்தார்கள். குழந்தைகளிடம் பேரன்பு கொண்ட நேரு, தம் பிறந்த நாளைக் குழந்தைகள் திருநாளாகக் கொண்டாடுமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி நாம் ஆண்டுதோறும் குழந்தைகள் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

ரோஜா மலர் நேருவுக்கு மிகவும் பிடித்தமான மலராகும். அவர் எப்பொழுதும் தமது சட்டையில் ரோஜா மலரை அழகுபட வைத்துக் கொண்டிருப்பார்.

நேரு ஏழைகளிடம் இரக்கமும் அன்பும் கொண்டவர்; அஞ்சாத நெஞ்சமும் அமைதியான எண்ணமும் உடையவர்; தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டுக்காகவே தியாகம் செய்தவர்.

**அல்லும் பகலும் அயராது நாட்டுக்கு உழைத்த மனிதருள் மாணிக்கம் நேரு 1964ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது பொன்னுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது.**

## அருஞ்சொற்பொருள்

அயலார் - மாற்றார், விடுதலை - சுதந்தரம், மாணிக்கம் - நவமணிகளுள் ஒன்று, வியந்து - ஆச்சரியப்பட்டு, ஆர்வம் - விருப்பம், பயின்றார் - படித்தார், தளர்ச்சி-சோர்வு, முன்னணி - முதல் வரிசை, பஞ்ச சீலம் - ஐந்து ஒழுக்கம், இரக்கம்-கருணை, ஆவி - உயிர், அல்லும் பகலும் - இரவும் பகலும், நீத்தார் - இறந்தார்.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. நேருவின் இளமை வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றைக் கேட்டுத் தெரிந்துகொள்.
2. நேருபற்றிய பாடலைச் சேர்ந்து பாடு.
3. குழந்தைகள் தின விழா அன்று பள்ளி இலக்கிய மன்றத்தில் பேசிப் பழகு.

### II. படிப்புப் பயிற்சி

1. நேருவின் வாழ்க்கை நிகழ்ச்சிபற்றிய சிறு நூல்களைப் படி.
2. நேரு கூறிய பொன்மொழிகளைப் படி.
3. **புள்ளியிட்ட இடங்களில் தக்க சொற்களை நிரப்பிப் படி .**

   (அ) நேரு ஏழைகளிடம் .............. .............. கொண்டவர்.

   (ஆ) நேரு தம்முடைய ............... ............... ............அனைத்தையும் நாட்டுக்காகவே தியாகம் செய்தவர்.

### III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

ஆக்கம் × குறைய ×

**2. சேர்த்து எழுது :**

குதிரை + ஏற்றம் = ஆக்கம் + பணி =

**3. பிரித்து எழுது :**

அளப்பரிய, என்றெல்லாம், பொன்னுடல்.

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

போரும் பூசலும், அஞ்சாத நெஞ்சம், அல்லும் பகலும்.

**5.** புள்ளியிட்ட இடங்களை நிரப்பி எழுது :

| | | | |
|---|---|---|---|
| நேரு தம் தொண்டுகளால் | ................... ................... ................... | என்றெல்லாம் | பாராட்டப் பெற்றார். |

[மனிதருள் மாணிக்கம், ஆசிய சோதி, சமாதானப் புறா.

**6.** உடல், பொருள், ஆவி என்னும் சொற்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களை எழுது :

உள், உருள், ............, ............, ............, ............, ............

**7.** பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :

(அ) மனிதருள் மாணிக்கம் யார் ?

(ஆ) நேருவின் பெற்றோர் யாவர் ?

(இ) நேருவின் அறிவுக்கூர்மைக்கு எடுத்துக்காட்டுத் தருக.

(ஈ) நேரு நம் நாட்டுக்குச் செய்த தொண்டுகள் யாவை ?

(உ) குழந்தைகள் திருநாளை நாம் ஏன் கொண்டாடிவருகிறோம் ?

(ஊ) நேருவின் பண்பு நலன்கள் யாவை ?

(எ) 'நான் விரும்பும் தலைவர்' என்ற தலைப்பில் 10 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.

## இலக்கணம்

### வினைச்சொல்

பருந்து **சுற்றி அலைந்தது**.

புறா **பறந்து சென்றது**. பருந்து **பறக்கிறது**.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களைப் பார். இச் சொற்கள் எவற்றை உணர்த்துகின்றன ? ஒரு செயலை உணர்த்துகின்றன மேலும், அச்செயல் நிகழ்ந்த காலத்தையும் தெரிவிக்கின்றன. இவை **வினைச் சொற்கள்** எனப்படும்.

அலைந்தது, பறந்தது' என்னும் சொற்கள் செயல் முடிவடைந்ததைக் காட்டுகின்றன. இவை **வினை முற்று** எனப்படும். 'சுற்றி, பறந்து' என்னும் சொற்கள் செயல் முடிவடையவில்லை என்பதைக் காட்டுகின்றன. இவை 'அலைந்தது, சென்றது' என்னும் வினைச்சொற்களைக் கொண்டு பொருள் முடிவதால் **எச்ச வினை** எனப்படும்.

# 12. உதகைப் பயணம்

நாம் பள்ளியில் படித்து அறிவைப் பெறுகிறோம். அது வெறும் புத்தக அறிவு. அந்த அறிவோடு பொது அறிவையும் நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். பொது அறிவு பல இடங்களை நேரில் காண் பதாலும் பல மக்களோடு பழகுவதாலும் வளரும். அவ்வாறு வளர்ப்பதற் குரிய வழிகளுள் ஒன்று கல்விப் பயணம் ஆகும். இக்கல்விப் பயணத் தினால் நாம் அறிவைப் பெருக்கிக்கொள்வதோடு நம் உள்ளச்சோர்வை நீக்கிப் புத்துணர்ச்சியைப் பெறுகிறோம்.

எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் கல்விப் பயணம் ஒன்றை ஏற்பாடு செய்தார். அக்கல்விப் பயணத்தில் நான் கலந்துகொண்டேன். அக்கல்விப் பயணம் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

சென்னையிலிருந்து எங்கள் கல்விப் பயணம் தொடங்கியது. சென்னைப் புகைவண்டி நிலையத்தில் நீலகிரி விரைவு வண்டியில் ஏறினோம். அரக்கோணம், சேலம், கோவை வழியாக மேட்டுப்பாளையம் சென்றோம். அங்கிருந்து உதகமண்டலம் எனப்படும் உதகை நோக்கிப் புகைவண்டியில் புறப்பட்டோம். அவ்வண்டி மிகவும் மெதுவாகச் சென்றது. இடைவழியே மலையைக் குடைந்து செய்யப்பட்ட பல குகை வழிகள் உள்ளன. குகைவழிக்குள் ஒரே இருள் ; வெளியில் வந்தவுடன் வெளிச்சம்.

வியப்புடன் சுற்றிலுள்ள மலைக்காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே சென்றோம். மலையிலிருந்து விழும் அருவிகள், வானளாவிய மரங்கள், பள்ளத்தாக்குகள், சிகரங்கள், குன்னூர் போன்ற மலை வாழிடங்கள், கொண்டை ஊசி போன்ற வளைவுப் பாதைகள் முதலிய வற்றைப் பார்த்துக்கொண்டே சென்றோம்; இறுதியில் உதகமண்டலத்தை அடைந்தோம்.

உதகமண்டலத்துக்கு ' உதகை ' எனவும் பெயர் உண்டு. அங்கு மலர்க் கண்காட்சி ஒன்றைக் கண்டு களித்தோம். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பல வண்ண வண்ணப் பூக்களைக் கண்டோம். அக்காட்சி பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

உதகையில் எல்லாருடைய உள்ளங்களையும் கவர்வது அரசு தாவர இயல் தோட்டமாகும். அங்குப் பல நூற்றுக்கணக்கான மரங்களையும் செடி கொடிகளையும் கண்டு மகிழ்ந்தோம். அவையெல்லாம் உலகிலுள்ள பலவேறு நாடுகளி லிருந்து கொண்டு வரப்பட்டவை என்று எங்கள் ஆசிரியர் கூறினார்.



நீலகிரி மலையில் தோடர்கள் என்ற பழங்குடியினர் வாழ்வதைப் பார்த்தோம். அவர்களின் வீடு தழைகளினாலும், மூங்கில்களினா லும் வேயப்பட்டு இருந்தது. அது பார்ப்பதற்குப் புதுமையாக இருந் தது.

அதன்பிறகு நாங்கள் 'தொட்டபெட்டா' என்னும் சிகரத் துக்குச் சென்றோம். தமிழ் நாட்டிலேயே மிக உயரமான இடம் தொட்ட பெட்டா என்று எங்கள் ஆசிரியர் கூறினார். கடல் அலைகள் போன்று அங்கு மலைகள் அடுக்கடுக்காகக் காட்சி தருகின்றன. மேகங்கள் மலைமீது தவழ்ந்து செல்வது அழகாக இருந்தது. அக்காட்சிகளை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் நின்றுகொண்டே இருந்தோம். எங்கள் ஆசிரியர், ''இனிமேல் குளிர் வந்துவிடும். எனவே, கீழே செல்வோம்,'' என்று கூறினார். தொட்டபெட்டாவை விட்டு உதகையை அடைந்தோம். அங்கிருந்து புகைவண்டி மூலம் மேட்டுப்பாளையம் வழியாகச் சென்னையை அடைந்தோம்.

வண்டியில் வரும்பொழுது நம் நாட்டில் கோடை வாழிடங்கள் பல உள்ளன என்று எங்கள் ஆசிரியர் கூறினார். அவற்றுள் குறிப்பிடத் தக்கது வடஇந்தியாவில் உள்ள ' சிம்லா ' என்று அவர் கூறினார்.

நாங்கள் கண்ட எழில் மிகு காட்சிகள் எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும்.

## அருஞ்சொற்பொருள்

சோர்வு-தளர்வு, வியப்பு-ஆச்சரியம், களித்து-மகிழ்ந்து, வான்-ஆகாயம், சிகரம்-மலை உச்சி, வேயப்பட்டு-கூரையாகப் போடப்பட்டு, எழில்-அழகு.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. அருகில் உள்ள மலை, ஆறு, கடல், வயல் ஆகிய இடங்களுள் ஏதாவது ஒன்றைக் கண்டு வந்தமைபற்றிக் கூறு.
2. உன் பயணம்பற்றிய சுவையான செய்திகளைக் கூறு.

### II. படிப்புப் பயிற்சி

1. பயணங்கள்பற்றிய சுவையான செய்திகளை நூல் நிலையம் சென்று படி.
2. கடற்பயணம்பற்றிய நூல்களைப் படி.

### III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

மகிழ்ச்சி × இருள் ×

**2. சேர்த்து எழுது :**

கடல் + அலை = அடுக்கு + அடுக்காக =

**3. பிரித்து எழுது :**

சென்னையிலிருந்து, வானளாவிய.

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

உளச்சோர்வு, தவழ்ந்து,

**5. முதல் எழுத்தை நீக்கி வேறு எழுத்தைச் சேர்த்துப் புதிய சொற்களை எழுது :**

கோவை, ........., ........., ........., ............., ........., ............., ...... . ...

[அ, இ, சு, சே, தே, து, பா]

**6. விடை எழுது:**

(அ) நாம் ஏன் பல இடங்களைப் பார்க்க வேண்டும் ?

(ஆ) உதகை எங்குள்ளது ?

(இ) உதகைக்குச் செல்லும் வழியில் மாணாக்கர்கள் கண்ட காட்சியை எழுது.

(ஈ) தொட்டபெட்டா மலைச்சிகரம்பற்றி எழுது.

# இலக்கணம்

## பெயரெச்சம்

**நீண்ட** கம்பி **அஞ்சா** நெஞ்சம்
**எட்டிய** தூரம் **கண்ட** காட்சிகள்

இச்சொற்றொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்கள் எவற்றைக் காட்டுகின்றன ? வினை முற்றுப் பெறவில்லை என்பதைக் காட்டுகின்றன. இந்த வினைகள் முடியாமல் எஞ்சி நிற்கின்றன. இவை எந்தச் சொற்களோடு முடிகின்றன ? பெயர்ச்சொற்களோடு முடிகின்றன. அதனால், இவை **பெயரெச்சம்** எனப்படுகின்றன. பெயரைக் கொண்டு முடியும் எச்ச வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும்.

### பயிற்சி

1. பெயரெச்சம் என்பது யாது ?
2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயரெச்சங்களைக் கண்டுபிடித்து எழுது :

   மரத்தின்மேல் இருந்த புறா சுற்றிலும் பார்த்தது.
   புறாவுக்கு உற்ற நண்பன் எறும்பு.
   வேலன் துரத்திய ஆடு பள்ளத்தில் விழுந்தது.

## வினையெச்சம்

செடி கொடிகளைக் **கண்டு** மகிழ்ந்தோம்.
செப்பேடுகளில் **எழுதி** வைத்திருந்தனர்.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்கள் எவற்றைக் காட்டுகின்றன ? வினை முற்றுப்பெறவில்லை என்பதைக் காட்டுகின்றன. இந்த வினைகள் முடியாமல் எஞ்சி நிற்கின்றன. இவை எந்தச் சொற்களோடு முடிகின்றன ? வினைச்சொற்களோடு முடிகின்றன. அதனால், இவை **வினையெச்சம்** எனப்படுகின்றன. வினையைக் கொண்டு முடியும் எச்ச வினைச்சொல் வினையெச்சம் எனப்படும்.

### பயிற்சி

1. வினையெச்சம் என்பது யாது ?
2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினையெச்சங்களைக் கண்டு பிடித்து எழுது:

   நீர்ச் சுழியில் சிக்கியவர் இறந்து போவார்.
   சுற்றுலாவில் நான் கலந்து கொண்டேன்.
   வானத்தில் மேகங்கள் தவழ்ந்து சென்றன,

# 13. தீண்டாமை வேண்டா

" தீண்டாமையை ஒழிப்பதுதான் என் ஆசை ; அதற்காகவே நான் உயிர் வாழ்கிறேன் ; அதற்காக நான் மகிழ்ச்சியுடன் உயிரைக் கொடுப்பேன், " எனக் காந்தியடிகள் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்தார்.

தம்பி தங்கைகளே ! தீண்டாமை என்பது என்ன தெரியுமா ? மக்களில் சில பிரிவினர் தம்மை உயர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொண்டு மற்றவர்களைத் தொட மறுப்பதும், அவர்கள் எதிரில் வந்தால் ஒதுங்கிச் செல்வதுமே ஆகும். இச்செயல் பாவமான செயல்அன்றோ ? இது பெருங் குற்றம் அன்றோ ? மனிதத் தன்மை இல்லாதவர்களே இவ்வாறு செய்வார்கள். எனவே, நாம் இத்தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க வேண்டும் ; அழிக்கவேண்டும்.

இந்தக் கொடுமையை ஒழிக்கப் புத்தர் பாடுபட்டார். அவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நீங்கள் இங்கே தெரிந்துகொள்ளுங்கள்.

புத்தர் தம் அறவழியைப் பரப்புவதற்காக நாடெங்கும் சென்றார். வெயிலென்றும் மழையென்றும் பாராமல், உடல் வருத்தத்தைக் கவனிக்காமல் அலைந்து திரிந்து அன்பு வழிகளை மக்களுக்கு விளக்கினார். நடந்து நடந்து அவரின் கால்கள் தளர்வுற்றன ; உணவும் உறக்கமும் இல்லாமல் அவர் சோர்ந்துபோனார். ஒருநாள் உச்சிவேளையில் அவர் கால்கள் தடுமாறின ; கண்கள் இருண்டன ; பேச்சின்றி மூச்சின்றி மயங்கித் தரையில் விழுந்தார்.



மயங்கி விழுந்த புத்தரை ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் பார்த்தான். அவன் அருள் உள்ளம் கொண்டவன். புத்தரின் முகத்தில் வெயில் படாதபடி தழைகளை வெட்டிவந்து அவர் அருகில் நட்டான். புத்தரின் முகத்தில் நிழல் படிந்தது. எனினும், அவரது களைப்புத் தீரவில்லை. " உயர்ந்த குலத்தில் பிறந்த இந்தப் பெரியாரை நான்

எவ்வாறு தொடுவேன்,'' என்று சிறுவன் திகைத்தான். அவன் உடனே வெள்ளாடு ஒன்றை இழுத்து வந்தான் ; மயக்கம் தெளிவதற்காக அவர் வாயில் அந்த வெள்ளாட்டின் பாலைக் கறந்து ஊற்றினான். அதற்குள் அவன் நட்டிருந்த தழைகள் பெரியனவாய் வளர்ந்து பூத்துக் குலுங்கின. அதைக் கண்ட அவன் வியப்பு அடைந்தான். புத்தரே பெரிய கருணைக் கடவுள் என்று நினைத்து அவரை வணங்கினான்.

தரையில் மயங்கி இருந்த புத்தர் சிறிது தெளிவுற்றார். அவர் சிறுவனைப் பார்த்து, '' அன்புத் தம்பி ! உன் கலத்தில் கொஞ்சம் பாலைக் கறந்து கொடு,'' என்று கேட்டார் அது கேட்ட சிறுவன் பெரிதும் வருந்தினான். அவன், '' ஐயனே ! நான் ஓர் ஏழைச் சிறுவன் ; தங்களைத் தீண்டும் தகுதி இல்லாதவன் ; தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவன் ; தங்களுக்குப் பாலைக் கறந்து என் கலத்தில் கொடுத்தால் பாவம் சேரும் ; எனவே, என்னை மன்னித்துவிடுங்கள்,'' என்றான்.

உடனே புத்தர், '' தம்பி ! நீ சொல்வது சரியன்று ; இதனால் உனக்குப் பாவம் சேராது ; துன்பத்தில் கிடக்கும் என்னைக் காப்பாற்றினால் புண்ணியமே வரும். நீ என்னைத் தீண்டாமல் நிற்பதுதான் பாவம்; உலகில் தாழ்ந்த குலமும் இல்லை ; உயர்ந்த குலமும் இல்லை,'' என்றார்.

அதைக் கேட்ட சிறுவன், ''தலைவரே ! தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. என் தந்தையும் பாட்டனும் நான் உயர்ந்த குலத்தாரைத் தொடக் கூடாது எனக் கூறுகின்றனர். தாங்கள் இப்படிச் சொல்வது புதுமையாகவே உள்ளது,'' என்றான்.

புத்தர் அந்த ஏழைச் சிறுவனைப் பார்த்து, ''தம்பி, உன் உடம்பில் ஓடும் குருதியும் என் உடம்பில் ஓடும் குருதியும் சிவப்பாகவே உள்ளன. எல்லாரும் வடிக்கும் கண்ணீர் உவர்ப்பாகவே உள்ளது. ஆகையினால் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை ; இவ்வுலகில் நன்மை செய்பவரே உயர்ந்த குலத்தினர் ; தீமை செய்பவரே தாழ்ந்த குலத்தினர் ; நீ துன்பம் அடைந்த என்னைக் காப்பாற்றியவன். நீயே உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவன்,'' என்று அவன் உள்ளம் தெளிவு அடையுமாறு நல்ல உண்மைகளை எடுத்துக்கூறினார்.

சிறுவன் மனம் தெளிவு அடைந்தது. அவன், '' பெரியீர் ! தங்களால் பல உயர்ந்த கருத்துகளை அறிந்தேன். இதோ ! என் கலத்தில்

**உள்ள பாலை அருந்துங்கள்'', என்று கூறிக் கலத்தில் இருந்த பாலைக் கொடுத்தான்.**

**புத்தர் ''தீண்டாமை வேண்டாதது தம்பி! அது மிகவும் கொடியது தம்பி,'' என்று கூறி அவன் கொடுத்த கலத்திலிருந்த பாலை அருந்தினார். சிறுவன் அவரை வணங்கி விடைபெற்றான்.**

**புத்தர் அவனுக்கு விடை கொடுத்தார். அத்துடன் அவனிடம் இருந்த தீண்டாமைக் கொள்கையை அவன் மனத்திலிருந்து நீக்கினார்.**

### *அருஞ்சொற்பொருள்*

*தீண்டாமை - தொடாதிருத்தல், தன்மை - இயல்பு, அறவழி - தருமவழி, ஆயர் - ஆடுமாடு மேய்ப்பவர், அருள் - கருணை, களைப்பு - சோர்வு, திகைத்தான் - தயங்கினான், கருணை - இரக்கம், கலம் - பாத்திரம், குருதி - இரத்தம், உவர்ப்பு - உப்புச்சுவை, அருந்துங்கள் - குடியுங்கள், ஒருங்கே - ஒருசேர.*

### I. வாய்மொழிப் பயிற்சி

1. தீண்டாமை என்னும் கொடுமைக்கு உள்ளான அம்பேத்கார் வாழ்க்கை நிகழ்ச்சியினைக் கேட்டறிந்துகொள்.
2. 'புத்தரும் சிறுவனும்' என்னும் பகுதியைச் சிறு நாடகமாக நடித்துப் பாருங்கள்.

### II. படிப்புப் பயிற்சி

கீழ்வரும் நீதிகளையும் பொன்மொழிகளையும் படி :

1. 'சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி முறையின் ;—மேதினியில்
இட்டார் ; பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர் ;
பட்டாங்கில் உள்ள படி.'

—ஔவையார் (நல்வழி)

2. 'சாதிகள் இல்லையடி பாப்பா; — குலத் தாழ்ச்சி உயர்ச்சி
சொலல் பாவம்,
நீதி உயர்ந்த மதி கல்வி—அன்பு நிறைய உடைவர்கள் மேலோர்.'

—பாரதியார்

3. 'சாதி சாதி என்று நிதம்
சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி உடைப்பதொரு
மூடச் செயலென்று உணரீரோ ?'

—கவிமணி தேசிகவிநாயகம்

4. ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’.

—திருமூலர்

5. சாதிப் பேயை ஓட்டுவமே;
சமநிலை எங்கும் நாட்டுவமே’

—திரு. வி. க.

### III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

தாழ்ந்த × இல்லை × வெயில் ×
பெருமை × தீமை × உண்மை ×

**2. சேர்த்து எழுது :**

நாடு + எங்கும் = மூச்சு + இன்றி

**3. பிரித்து எழுது :**

பேச்சின்றி, விளங்கவில்லை

**4. வாக்கியத்தில் அமை :**

தீண்டாமை, புதுமை

**5. தழை—முதல் எழுத்தை நீக்கிப் புதிய எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை அமை:**

[எ -.கா ] கழை [அ, இ, உ, ஏ, கு, கூ, கோ, பி, பீ, பே,ம]

**6. புள்ளியிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது :**

..............., .................. என் ஆசை.

**7. வேறுபாடு அறிந்து பொருள் எழுது :**

தலை, தழை, தளை.

**8. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :**

(அ) தீண்டாமைபற்றிக் காந்தியடிகள் யாது கூறினார் ?

(ஆ) புத்தர் ஏன் மயங்கித் தரையில் வீழ்ந்தார் ?

(இ) புத்தரைப் பார்த்த சிறுவன் என்ன செய்தான் ?

(ஈ) புத்தர் சிறுவனிடம் தீண்டாமைபற்றி யாது கூறினார் ?

## இலக்கணம்

### சொற்றொடர்

சாதி இரண்டொழிய
மணி படித்தான்.
பேச்சு மூச்சின்றித் தரையில்
என் தங்கை நன்றாகப் பாடுவாள்.

இவ்வாக்கியங்களில் பல சொற்கள் காணப்படுகின்றன. இவை இரண்டாகவோ மூன்றாகவோ நான்காகவோ தொடர்ந்து நிற்கின்றன. தொடர்ந்து நின்று, இவை உணர்த்தும் பொருள் முற்றுப்பெற்றதைச் சில காட்டுகின்றன. வேறு சில சொற்கள் பொருள் முற்றுப் பெறவில்லை என்பதைக் காட்டுகின்றன.

இந்தச் சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்கின்றன. எவ்வாறு என்னென்ன சொற்கள் தொடர்ந்து நிற்கும் என்பதைக் கூறுவது **சொற்றொடர் இலக்கணம்** ஆகும். எனவே, சொல் தொடரும் தன்மைகளை விளக்கும் இலக்கணம், சொற்றொடர் இலக்கணம்' எனப்படும்.

## 14. சிறந்தது எது — எழுத்தாற்றலா ? பேச்சாற்றலா ?

*நம்பி :* நங்கை ! நேற்று நீ மன்றக் கூட்டத்தில் அழகாகவே பேசினாய். இருந்தாலும் பேசுவதைக் காட்டிலும் எழுதுவதுதான் சிறப்பு என எண்ணுகிறேன்.

*நங்கை:* நம்பி! நீ சொல்வது சரியன்று; எழுதுவதைவிடப் பேசுவதுதான் சிறந்தது. உலகில் பேசிப் புகழ் அடைந்தவர்கள் மிக அதிகம் என்பதை நீ மறந்துவிடக்கூடாது.

*நம்பி :* எழுதி வைப்பது எந்த நாளிலும் அழியாது ; மறையாது. தற்காலத்தில்தான் பேச்சினால் புகழ் பெற்றவர்கள் வாழ்ந் தார்கள். ஆனால், வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் யார் யார் சிறப்பாகப் பேசினார்கள் என்பதை அறிய முடிகிறதா ? அதே நேரத்தில் வள்ளுவர் எழுதி வைத்ததை நாம் இன்றும் படிக்க முடிகிறது. எனவே, பேசுவதைக் காட்டிலும் எழுதுவதுதான் சிறந்தது என்கிறேன்.

*நங்கை:* வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பேசும் கலை உயர்வாக இருந்தது. எனவேதான் வள்ளுவர் ‘சொல்வன்மை’ என ஓர் அதிகாரத் தையும், ‘பயனில சொல்லாமை’ என ஓர் அதிகாரத்தையும் எழுதியுள்ளார். அதை நீ மறக்கக்கூடாது.

*நம்பி :* அதையும் அவர் எழுதி வைத்ததால்தான் நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது. அவ்வாறு இல்லாமல் அவர் மட்டும் எல்லாக் குறட்பாக்களையும் வாய்மொழியாகமட்டும் சொல்லி இருந்தால் நமக்கு ஒன்றுகூடக் கிடைத்திருக்காது.

*நங்கை:* உண்மைதான். அவர் பேசியதைத்தான் எழுதியிருப்பார் என்பதையும் நீ மறுக்க முடியாது. முதன்முதலில் மனிதன் பேசியே வாழ்ந்தான். பிறகு எழுத்தைக் கண்டுபிடித்து எழுதி வைத்தான். முதலில் தோன்றியதே உயர்வு ஆகும். தொடர் வண்டியில் இழுக்கும் பொறிதான் முதலில் உள்ளது. அஃது இல்லையென்றால் வண்டி எப்படி ஓடும் ?

*நம்பி :* நீ கூறுவதுபோலப் பேசும் கலை இழுக்கும் பொறி போன்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், பெட்டிகள் இல்லாமல் இழுக்கும் பொறிமட்டும் ஓடினால் பயன் இல்லை. எனவே, எல்லார்க்கும் பயன்தருவது எழுதும் ஆற்றலே ஆகும்.

*நங்கை:* நீ கூறுவது முற்றிலும் சரியன்று. பேசும் கருத்தை அனைவரும் எளிமையாகப் புரிந்துகொள்வார்கள். ஆனால், எழுதி வைத்ததைப் படித்தவர்கள் மட்டுமே அறிய முடியும்; மற்றவர்களுக்கு அது பயன்படாது.

*நம்பி :* பேசும் கருத்து உடனுக்குடன் மாறிவிடும். ஆனால், எழுதும் கருத்து நிலையாக இருக்கும். தேவையானபோது நூல்களை எடுத்து அவற்றில் எழுதியுள்ளதை அறிந்து கொள்ளலாம். எனவே, எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்; அஃது உன் புகழை இப்பூமியில் நிலைபெறச்செய்யும்.

*நங்கை:* நீ இன்னும் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. பேசுவது எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? மலையிலிருந்து அழகாக விழும் அருவி போன்றதே பேசும் ஆற்றலாகும். அஃது எவ்வளவு மகிழ்ச்சி தரும் என்பதை நீ அறியமாட்டாயா?

*நம்பி :* பேச்சிலேயே என்னை மடக்கிவிடலாம் என நீ எண்ணுகிறாய். நீ என்ன கூறினாலும் பேசுவதைவிட எழுதுவதுதான் சிறந்தது என்பேன். அதோ நம் ஆசிரியர் வருகிறார். அவரிடம் கேட்போம்.

*இருவரும் :* வணக்கம் ஐயா! எங்கள் இருவருக்கும் ஐயம் ஒன்று உள்ளது.

*ஆசிரியர் :* வணக்கம். உங்கள் ஐயத்தைக் கூறுங்கள்.

*நங்கை :* ஐயா! எழுத்தாற்றல்தான் சிறந்தது என்கிறான் நம்பி. பேச்சாற்றல்தான் உயர்ந்தது என்கிறேன் நான்.

*ஆசிரியர் :* நல்லது. இப்படி அமருங்கள். சிறந்தது எது என நான் கூறுகிறேன். நம்பி! நீ ஒரு ரூபாய் நாணயத்தைப் பார்த்திருப்பாய். அதில் ஒரு பக்கம் உள்ள சிங்க உருவம் எழுத்தாற்றல். 'ஒரு ரூபாய்' என மறுபக்கம் எழுதியிருப்பது பேச்சாற்றல். இரண்டு பக்கமும் இருந்தால்தான் ரூபாய்க்கு மதிப்பு ஏற்படும். எனவே, ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டும் தேவை. அப்போதுதான் அவனை அனைவரும் பாராட்டுவர்.

*இருவரும் :* மிக்க நன்றி ஐயா! நாங்கள் இரண்டு ஆற்றலையும் வளர்த்துக்கொள்கிறோம்.

## அருஞ்சொற்பொருள்

பொறி - இயந்திரம், முற்றிலும் - முழுவதும், ஐயம் — சந்தேகம்.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. ''எது சிறந்தது—கல்வியா ? செல்வமா ?'' என்பதைப்பற்றிக் கேட்டு அறிந்துகொள்.

2. திரைப்படத்தால் நன்மையா ? தீமையா ? என்பதைப்பற்றிக் கேட்டு அறிந்துகொள்.

3. பின்வரும் பொன்மொழிகளைப் படி :

   (அ) ' எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். '

   (ஆ) ' எண்ணெழுத்து இகழேல். '

### II. படிப்புப் பயிற்சி

1. எழுத்தின் சிறப்புகளையும் சொல்லின் சிறப்புகளையும் கூறும் நூல்களைப் படி.

2. புள்ளியிட்ட இடங்களில் நிரப்பிப் படி :

   மலையிலிருந்து அழகாக விழும் அருவி போன்றது ...................... ஆற்றல் ஆகும்.

### III. எழுத்துப் பயிற்சி

1. எதிர்ச்சொல் எழுது :

   அதிகம் × உயர்ந்த ×

2. பிரித்து எழுது :

   பயனில உடனுக்குடன்

3. சேர்த்து எழுது :

   பேச்சு + ஆற்றல் = எழுத்து + ஆற்றல் =

4. வாக்கியத்தில் அமைத்து எழுது :

   விட, காட்டிலும், ஒன்றுகூட,

5. முதல் எழுத்தை நீக்கிவிட்டு வேறு எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை எழுது :

   அழுத்து, ............, ............, ............, ............ [இ, க, ப, பு]

6. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :

(அ) நம்பி 'எழுத்தாற்றல்தான் சிறந்தது' என்று ஏன் கூறினான் ?

(ஆ) நங்கை 'பேச்சாற்றல் சிறந்தது' என்பதற்குக் கூறும் கருத்துகள் யாவை ?

(இ) ஆசிரியர் கூறிய முடிவுரை யாது ?

## இலக்கணம்

### எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

பருந்து புறாவைத் துரத்தியது.

எறும்பு காலைக் கடித்தது.

இவ்வாக்கியங்களைப் படித்துப் பார். இவற்றுள் பல சொற்கள் உள்ளன. சில பெயர்ச்சொற்கள்; வேறு சில வினைச்சொற்கள். இவை வாக்கியத்தின் பொருளை முடிக்கும் சொற்கள். இன்னும் சில 'ஐ' என்ற எழுத்தை இறுதியில் கொண்ட பெயர்ச்சொற்கள். பெயர்ச்சொல்லிலிருந்து இவை சிறிது வேறுபட்டுள்ளன.

வேறுபடாத எல்லாப் பெயர்ச் சொற்களும் **எழுவாய்** எனப்படும். பயனிலைச் சொற்களின் முன் எவன், எவள், எவர், யார், எது, எவை என்னும் வினாக்களுள் பொருத்தமான ஒன்றைக் கொண்டு கேள்வி கேட்டால் கிடைக்கும் விடை எழுவாய் ஆகும்.

எ. கா. : எது துரத்தியது ? — பருந்து துரத்தியது.

வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கும் சொற்கள் வாக்கியத்தின் பயனாக நிற்பதால் **பயனிலை** (பயன்+நிலை) எனப்பட்டது. எழுவாய்ச் சொல்லின்முன் என்ன செய்தான் ? என்ன செய்தாள் ? என்ன செய்தன ? என்ன செய்தது ? என்ன செய்தார் ? என்னும் வினாச் சொற்களுள் பொருந்தும் ஒன்றைக்கொண்டு கேள்வி கேட்டால் கிடைக்கும் விடை பயனிலை ஆகும்.

எ. கா. : பருந்து என்ன செய்தது ?—துரத்தியது.

பயனிலைச் சொற்களின் முன் எதை, யாரை, எவற்றை, எவனை, எவளை என்றும் வினாச் சொற்களுள் பொருந்தும் ஒன்றைக்கொண்டு கேள்வி கேட்டால் கிடைக்கும் விடை **செயப்படுபொருள்** ஆகும்.

எ. கா. : எதைத் துரத்தியது ?
புறாவைத் துரத்தியது.

ஒரு பெயர்ச்சொல்லின் பின் 'ஐ' என்னும் எழுத்தைச் சேர்த்தால் அது செயப்படுபொருளாக மாறிவிடும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் மூன்று உறுப்புகள் இருக்கலாம். முதலில் எழுவாயும் அதன்பின் செயப்படு பொருளும் அதற்குப்பின் பயனிலையும் இருப்பதைத் தெரிந்துகொள்.

### பயிற்சி

1. எழுவாய் என்பது யாது?
2. பயனிலை என்பது யாது?
3. செயப்படு பொருள் என்பது யாது?
4. எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைக் கண்டுபிடி.
   கண்ணன் நூலைப் படித்தான்.
   அகத்தியர் தமிழை வளர்த்தார்.
5. பொருள் அமையுமாறு சொற்களை மாற்றி வாக்கியமாக எழுது :
   எரித்தாள் கண்ணகி மதுரையை.
   எழுதினார் குறளை வள்ளுவர்.

# 15. ஆலமரம்

'ஆல் போல் தழைத்து வாழ்க!' எனப் பெரியோர்கள் வாழ்த்து வார்கள். ஏன் தெரியுமா? ஆலமரம் கிளைகளும் இலைகளுமாகத் தழைத்துப் பசுமையாக விளங்குவதால்தான் அவ்வாறு வாழ்த்துவார்கள். அத்தகைய ஆலமரம் நமக்குப் பல வகைகளில் பயன்படுகிறது.

ஆலமரம் வெண்மையான பால் உடையது; பாம்புகளைப் போன்று தொங்கும் விழுதுகளை உடையது. இது தன் அடிமரத்தைச் சுற்றிப் பல இடங்களில் விழுதுகளை ஊன்றி வளர்கின்றது. இதற்குக் கான்மரம், பாலி, நிழல் மரம், பழுமரம், தொன்மரம் எனப் பல பெயர்கள் வழங்கு கின்றன. இம்மரம் பல நூற்றாண்டுகள் வரை வாழ்கின்றது.



ஆலம்பழம் உருண்டையாகவும் சிவப்பாகவும் இருக்கும். இம் மரத்தில் எண்ணற்ற பறவைகள் தங்கிப் பழங்களைத் தின்னும்போது இனிய ஒலிகளை எழுப்பும். அவை நம் செவிக்கு இனிமையாக இருக்கும்.

ஆலம் விதை மிகச் சிறியதும் மென்மையானதும் ஆகும். இச்சிறிய விதையிலிருந்து தோன்றி வளர்ந்த மரமோ மிகப்பெரியது.

சாலைவழியே வெயிலில் செல்லும் மக்களுக்கு இனிய நிழலைத் தருகிறது; அவர்களின் களைப்பையும் நீக்குகிறது. 'சிறிய ஆலம்பழத்தின் விதை மீன் முட்டையைவிடச் சிறியது என்றாலும், அவ்விதையிலிருந்து தோன்றும் பெரிய ஆலமரம் அரசனுக்கும், அவனது நால்வகைப் படைகளுக்கும் நிழலைக் கொடுக்கிறது' என்னும் கருத்துள்ள பாடல்மூலம் அதிவீரராமபாண்டியன் என்னும் மன்னன் ஆலமரத்தின் சிறப்பைப் புகழ்ந்துள்ளான். அப்பாடல் 'வெற்றிவேற்கை' என்னும் நூலில் உள்ளது.

சென்னையில் அடையாறு என்னுமிடத்தில் மிகப்பெரிய ஆலமரம் இருக்கிறது. நம் நாட்டிலேயே மிகப்பெரிய ஆலமரம் கல்கத்தா நகரில் இருக்கிறது. உலகிலேயே மிகப்பெரிய ஆலமரம் நம் அண்டை நாடான இலங்கையில் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் ஒரே சமயத்தில் இருபதினாயிரம் பேருக்கு நிழல் தரக்கூடிய பெரிய ஆலமரம் ஒன்றிருந்ததாம். இப்பெரிய ஆலமரங்கள் விழுதுகளை ஊன்றிநிற்கும் காட்சி கோயில்களில் காணப்படும் ஆயிரங்கால் மண்டபம் போன்றிருக்கும்.

நன்றாக வளர்ந்த மரக்கிளைகளிலிருந்து ஆங்காங்கு விழுதுகள் பல தோன்றுகின்றன. அவை கீழ்நோக்கி வளர்ந்து நிலத்தினுள் புகுந்து வேர்கள் செய்யும் வேலையைச் செய்கின்றன; தாய்மரத்திற்கு வேண்டிய சத்துநீரை உறிஞ்சி அனுப்புகின்றன. கிளைகள் முரிந்து விழாதபடி தாங்குகின்றன. ஆண்டுகள் செல்லச்செல்ல அவ்விழுதுகள் உருவத்தில் பருத்து நெடுந்தூண்கள்போல் ஆகின்றன.

ஆலங்குச்சி பல் துலக்கப் பயன்படுகின்றது. அது துவர்ப்பாக இருக்கும். அது பற்களுக்கு வலுவைத் தருவதால், 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்னும் பழமொழி தோன்றியது. சிறிய ஈர்க்குச்சிகளால் தைக்கப்பட்ட ஆல இலைகள் வாழை இலைபோலப் பயன்படுகின்றன. காய்ந்த ஆலஞ்சுள்ளிகளும் இலைகளும் தீ எரிக்கப் பயன்படுகின்றன. பிளக்கப்பட்ட ஆலங்கட்டைகள் விறகாகப் பயன்படுகின்றன. பவளம் போன்ற ஆலம் பழங்கள் பறவைகளுக்கும், குரங்கு, அணில் போன்ற விலங்குகளுக்கும் உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன. ஆலம் பாலும் ஆலமரப் பட்டையும் மருந்துப் பொருளாகப் பயன்படுகின்றன. ஆலம் பலகைகள் கட்டில், பெட்டி போன்ற பொருள்கள் செய்யப் பயன்படுகின்றன.

ஆலமரம் பல வகைகளில் பயன்படுவதுபோல மாணவர்களும் பெற்றோர்க்கும், உற்றார்க்கும் வீட்டிற்கும், நாட்டிற்கும் பயன்பட வேண்டும். தொண்டுகள் பல செய்து வாழவேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

கான் - காடு, தொன்மை - பழமை, களைப்பு - சோர்வு, நால்வகைப் படை - யானைப் படை, குதிரைப் படை, தேர்ப் படை, காலாள் படை, அண்டை - பக்கம், வேல் - கருவேலமரம், பெற்றோர் - தாய் தந்தையர், உற்றார் - உறவினர்.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. 'படைப்பின் விசித்திரம்' என்னும் தலைப்பில் நான்காம் வகுப்பில் படித்த பாட்டின் கதையைக் கூறு.

2. கீழ்வரும் பாடலைச் சேர்ந்து பாடு :

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை,
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே.

3. 'ஆலமரமும் நாணலும்' என்னும் கதையைக் கேள்.

4. 'ஆல இலை தெரியாதா ? அது புளிய இலைபோல வேலியில் படர்ந் திருக்கும்' என்னும் வரியின் நகைச்சுவை நிகழ்ச்சியை ஆசிரியரிடம் கேள்.

### II. படிப்புப் பயிற்சி

**1. கீழ்வரும் பழமொழியைப் படி :**

'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி;
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.'

**2. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பிப் படி:**

| | | |
|---|---|---|
| ஆல இலைகள் | .........ப் | |
| ஆலங் குச்சிகள் | .........ப் | |
| ஆலங் கட்டைகள் | .........ப் | பயன்படுகின்றன. |
| ஆலஞ் சுள்ளிகள் | .........ப் | |
| ஆலம் பட்டை | .........ப் | |

(பல் துலக்க, உண்கலமாக, விறகாக, தீ எரிக்க, மருந்துப் பொருளாக)

**3. பின்வரும் பத்தியைப் படித்து உணர் :**

ஆலமரத்திற்குத் தாய் மரம் உண்டு. அதைச் சுற்றி விழுதுகளாலான கிளைமரங்கள் உண்டு. அத்தாய் மரத்திற்கு விழுதுகள் சேய்கள் போன்று உதவுகின்றன. தாய்மரமும் கிளைமரங்களும் தனித்தனியாகப் பிரியாமல் ஒன்று சேர்ந்து ஒரு குடும்பமாக வாழ்கின்றன, அது போன்று இந்திய மக்களாகிய நாம் ஒற்றுமையாக ஒரே குடும்பமாக வாழவேண்டும்.

**4. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைச் சேர்த்துப் படி :**

ஆலம் பழங்கள் ..........., ........... போன்ற விலங்குகளுக்கு உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன.

## III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

வெண்மை ×　　　அடிமரம் ×

பருத்து ×　　　காய்ந்த ×

**2. சேர்த்து எழுது :**

மரம் + கிளை =　　　பல்லுக்கு + உறுதி =　　　வாழை + இலை =

மரம் + பட்டை =　　　வேல் + கை =

**3. பிரித்து எழுது :**

எண்ணற்ற, நூற்றாண்டுகள், நால்வகை.

**4. வாக்கியத்தில் அமை :**

உற்றார், பசுமையாக, அண்டை, செல்லச்செல்ல.

**5. வேறுபாடு அறி :**

ஆல் - ஆள்,　　　வேல் - வேள்,

ஒலி - ஒளி,　　　பலவகை - பழவகை

**6. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :**

(அ) பெரியோர்கள் எவ்வாறு வாழ்த்துகிறார்கள் ? ஏன் ?

(ஆ) ஆலமரம் எத்தகையது ?

(இ) ஆலமரம்பற்றி 'வெற்றிவேற்கை' நூல் என்ன கூறுகிறது ?

(ஈ) மிகப்பெரிய ஆலமரங்கள் எங்கெங்கு உள்ளன ?

(உ) ஆலவிழுதுகள் தாய்மரத்துக்கு எவ்வாறு உதவுகின்றன ?

(ஊ) ஆலமரத்தின் பயன்கள் யாவை ?

# இலக்கணம்

## திணை

**மன்னன்** புகழ்ந்தான்.

**ஆல்**போல் தழைத்து வாழ்க.

இவ்வாக்கியங்களில் 'மன்னன்', 'ஆல்' என்னும் பெயர்ச்சொற்கள் உள்ளன. அச்சொற்களுள் 'மன்னன்' என்பது உலகில் உள்ள மக்களுள் ஒருவரைக் குறிக்கிறது. 'ஆல்' என்பது மக்கள் அல்லாத பொருளைக் குறிக்கிறது. மக்கள் அல்லாத பொருள் உயிர் உள்ளதாக இருக்கலாம், உயிர் இல்லாததாகவும் இருக்கலாம்.

மக்களைக் குறிக்கும் சொற்கள் **உயர்திணை** எனப்படும். மக்களே நல்வினை செய்து விண்ணில் வாழும் தேவர் (தெய்வம்) ஆக இருப்பதாலும், தீவினை செய்து நரகர் ஆக மாறுவதாலும் மக்கள், தேவர், நரகர் ஆகிய இம் மூவரையும் குறிப்பது உயர்திணை எனப்படும்.

மக்கள் அல்லாதவை உலகில் உயர்வு அல்லாதவை. எனவே, உயர்வு அல்லாத திணை (அல் + திணை) **அஃறிணை** எனப்படும்.

திணை உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும்.

## பால்

**மனிதருள் மாணிக்கம்** போன்றவர் **நேரு** ஆவர்.

**அப்பா**வும் **அரசி**யும் உரையாடினர்.

ஆலம் **விழுதுகள்** நிலத்தினுள் புகுந்து **வேர்கள்** செய்யும் **வேலை**யைச் செய்கின்றன.

ஆல **மரம்** பல **விழுதுகளை** உடையது.

**நம்பி**யும் **நங்கை**யும் விவாதித்தார்கள்.

இவ்வாக்கியங்களில், உள்ள தடித்த சொற்களைக் கவனி. 'அப்பா', 'நேரு,' 'நம்பி' என்னும் சொற்கள் ஆணைக் குறிக்கின்றன. அதனால் அவை **ஆண்பால்** எனப்படும். பால் என்பதற்குப் பிரிவு என்பது பொருள்.

'அரசி', 'நங்கை' என்னும் சொற்கள் பெண்ணைக் குறிக்கின்றன. அதனால் அவை **பெண்பால்** எனப்படும்.

'மனிதர்' என்னும் சொல் மக்களுள் பலரைக் குறிக்கிறது. அதனால், அது **பலர்பால்** எனப்படும்.

'மாணிக்கம்', 'வேலை' என்னும் சொற்கள் ஒன்றைக் குறிக்கின்றன. அதனால் அவை **ஒன்றன்பால்** எனப்படும்.

'வேர்கள்', 'விழுதுகள்' என்னும் சொற்கள் பலவற்றைக் குறிக்கின்றன. அதனால், அவை **பலவின்பால்** எனப்படும்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து வகைப்படும். இவற்றுள் ஆண்பாலும் பெண்பாலும் பலர் பாலும் உயர்திணைக்கு உரியன. ஒன்றன்பாலும் பலவின்பாலும் அஃறிணைக்கு உரியன.

## பயிற்சி

1. திணை என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பால் என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. உயர்திணைக்குரிய பால்கள் யாவை? விளக்கு.
4. அஃறிணைக்குரிய பால்கள் யாவை? விளக்கு.
5. நீ படித்த பாடங்களில் வரும் ஐம்பால் சொற்களைக் கண்டுபிடித்து வகைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கீழ்வரும் கட்டங்களில் எழுது :

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |

6. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுதிப் படி :

| | | | | |
|---|---|---|---|---|
| ஆணை<br>பெண்ணை<br>பலரை<br>ஒன்றை<br>பலவற்றை | க் குறிப்பது | ...............<br>...............<br>...............<br>...............<br>............... | பால் | எனப்படும். |

# 16. வையை கூறும் தன்வரலாறு

'காவிரி தென்பெண்ணை பாலாறு' எனத் தமிழக ஆறுகள்பற்றிப் பாடிய கவிஞர் பாரதியார் என்னைத் 'தமிழ் கண்டதோர் வையை' எனச் சிறப்பாகப் பாடியுள்ளார். எனக்கு 'வைகை' எனவும் 'பாண்டியர் குலக் கொடி' எனவும் வேறு பெயர்கள் உண்டு. என் கரையில் இருந்த மதுரை மாநகரிலேதான் பாண்டிய மன்னர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். இதனால், தமிழை 'வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை' எனப் புலவர் கூறுவர். என்னைப்போன்று சிறப்பு வாய்ந்த, தமிழோடு தொடர்பு உடைய ஆறு வேறு இல்லை.

எல்லா ஆறுகளையும்போல நானும் மலையிலே பிறந்தேன். நான் பிறந்த மலையின் பெயர் ஆண்டிப்பட்டி வர்ஷநாட்டு மலைத்தொடர் என்பதாகும். அந்த மலையில் பெய்யும் மழை நீரால் நான் உருவானேன். மழைநீர்த்துளிகள் சேர்ந்து சிறிய ஓடையாக நான் மாறினேன். என்னுடன் பல ஓடைகள் சேர்ந்தன. பின்னர்ப் பெரிய ஓடையாக மாற்றம் அடைந்தேன்; மேடுபள்ளங்களைக் கடந்து அடர்ந்த காட்டுக்குள் புகுந்தேன்; அதன் பின்னர் அங்குள்ள பள்ளத்தாக்கை நோக்கிப் பாய்ந்து ஓடினேன்; அப்பள்ளத்தாக்கிலிருந்து தொடர்ந்து பயணம் செய்தேன். ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் பிறக்கும் எல்லாச் சிற்றாறு களும் என்னிடம் வந்தடைந்தன. அவற்றை ஏற்றுக்கொண்டு கம்பம் பள்ளத்தாக்கை அடைந்தேன்.

அங்கு வீரவன் ஆறு, சுருளி ஆறு, வராக ஆறு, மஞ்சள் ஆறு, முல்லை ஆறு போன்ற என் தங்கைகள் என்னுடன் சேர்ந்தனர். அதனால், நான் மிகப் பெரிய ஆறாக மாறினேன்.

நான் நிலக்கோட்டை வட்டத்தில் புகும்போது மக்கள் என்னை அணை போட்டுத் தடுத்து நிறுத்தினார்கள். அந்த அணையை நிரப்பிய பின்னர், அதைக் கடந்து மதுரை நகரின் நடுப்பகுதிவழியே சென்றேன். அந்த நகரின் வழியேதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சென்றுகொண்டிருக்கிறேன்.

சிலப்பதிகாரம், பரிபாடல் போன்ற இலக்கியங்கள் என்னைப் பெரிதும் புகழ்கின்றன. பழங்காலத்தில் நான் தண்ணீர் நிரம்பப்

பெற்றிருந்தேன். அத்தண்ணீரில் எண்ணிலாப் பூக்களைக் காட்டிலிருந்து கொண்டுவருவேன். அப்பொழுது என்னைப் பார்த்தவர்கள் இது புனல் ஆறு அன்று; பூ ஆறு எனச் சொல்வார்கள். என்னைப் 'புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி' எனவும், 'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' எனவும் இளங்கோ அடிகள் பாராட்டுகிறார். சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கண்ணகியும் கோவலனும் என்னைக் கடந்துதான் மதுரைக்குச் சென்றார்கள்.

மதுரை நகரைக் கடந்து மானாமதுரை, பரமக்குடி வழியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரியில் நான் பாய்கிறேன்; அங்கிருந்து வெட்டப்பட்டுள்ள பல கால்வாய்கள் வழியாக ஓடிப் பல ஏரிகளையும் குளங்களையும் நிரப்பிச் செல்கிறேன். முடிவில் ஏரியின் நீர்க்கால் வாயிலாக ஆற்றங்கரை என்னுமிடத்தில் வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறேன்.

இக்காலத்தில் நான் ஆண்டு முழுவதும் மதுரைக்குத் தண்ணீர் கொண்டு வருவதில்லை. நான் கொண்டுவரும் நீரெல்லாம் வையை அணையில் தேக்கி வைக்கப்படுகிறது. எனவே, மதுரை மக்கள் என்னிடத்தில் உள்ள ஊற்றுகளில் தண்ணீர் எடுக்கிறார்கள். என்னை மக்கள் வைகை என்றும் அழைப்பதுண்டு அன்றோ? வைகையில் தண்ணீர் எடுக்க வேண்டுமானால் வைகை ஆற்று மணலில் கை வை; அஃதாவது மணலைத் தோண்டுவதற்குக் 'கையை வை' என என் பெயரில் உள்ள எழுத்துகளை மாற்றிப்போட்டு வேடிக்கையாகக் கூறுவார்கள்.

என்னால் நிலங்கள் எல்லாம் நீர்வளத்தையும் நிலவளத்தையும் பெறுகின்றன. நான் வரும்வழியெல்லாம் பூங்காக்களையும் காடுகளையும் வளப்படுத்தி வருகிறேன். என்னால் அவை பச்சைப்பசேல் எனக் காட்சி அளிக்கின்றன.

நான் வையகத்தில் காவியப் பெருமையும் இலக்கியப் பெருமையும் உடையவளாக இருக்கிறேன். நீங்களும் என்னைப்போல் பல பெருமை களைப் பெற்றுச் சிறந்து இனிது வாழுங்கள்.

## அருஞ்சொற்பொருள்

பேதை - பெண் (தமிழ்), அடர்ந்த - நெருங்கிய, வராகம் - பன்றி, புனல் - நீர், ஊற்று - நீர் சுரக்கும் இடம், பூங்கா - பூஞ்சோலை, வளம் - செழிப்பு.

### I. வாய்மொழிப் பயிற்சி

1. வையை ஆறுபற்றி உனக்குத் தெரிந்தவைகளைக் கூறு.

2. கங்கையும் காவிரியும் வையையுடன் உரையாடுவதைப்போல உரையாடு.

3. கீழ்வரும் செய்யுள்களைச் சேர்ந்து பாடு :

(அ) கல்லும் மலையும் குதித்து வந்தேன் ; — பெரும்
காடும் செடியும் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி — எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் ; — பல
ஏரிகுளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் ; — மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்; — எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன் ;
நில்லும் எனக்கினி நேரமில்லை — இன்னும்
நீண்டவழி போக வேண்டும்அம்மா !

—கவிமணி தேசிகவிநாயகம்

(ஆ) சிறுசிறு துளியாய் வீழும்
மழைத்துளி ஒன்று சேர்ந்தால்
அரும்பெரும் ஆறாய் ஆகி,
அணையையும் உடைத்துச் செல்லும்.

— கவிஞர் தமிழ்முடி

### II. படிப்புப் பயிற்சி

1. இந்திய ஆறுகள்பற்றி நூலகம் சென்று படி.

2. கீழ்வரும் பாரதியார் பாடலைப் படி :

காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி — என
மேவிய ஆறு பலஓடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

## III. எழுத்துப் பயிற்சி

**1. எதிர்ச்சொல் எழுது :**

தென்பெண்ணை × சிற்றாறு ×

**2. சேர்த்து எழுது :**

சிறிய + ஓடை = சுருளி + ஆறு =

**3. பிரித்து எழுது :**

புனலாறு, பூங்கொடி

**4. விடுகதையின் விடை எழுது :**

மூன்று எழுத்தாலான ஒரு நகரின் பெயர் ;
முதல் எழுத்தை நீக்கிவிட்டால் வெள்ளையரின் பெயர் ;
கடை எழுத்தை நீக்கிவிட்டால் கள்ளின் பெயர் ;
இடை எழுத்தை நீக்கிவிட்டால் திருகின் பெயர்

[விடை : மதுரை, துரை, மது, மரை]

**5. வேறுபாடு அறிந்து பொருள் எழுது :**

குலம் - குளம் மலை - மழை கரை - கறை
வலம் - வளம் ஏரி - ஏறி

**6. விடை எழுது:**

(அ) வையையைப்பற்றிப் புலவர்கள் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்கள் ?
(ஆ) வையையின் பிறப்பிடம் யாது ?
(இ) வையை எவ்வாறு பெரிய ஆறாக மாறியது ?
(ஈ) இளங்கோ அடிகள் வையை ஆற்றை எவ்வாறு பாராட்டுகிறார் ?
(உ) வையை ஆறு கடலோடு கலக்கும் இடம் எது ?
(ஊ) வைகைப் பெயரை எவ்வாறு வேடிக்கையாகக் கூறுவர் ?

## இலக்கணம்

### எண்

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை ஆகியவை தமிழகத்தின் முக்கிய **ஆறுகள்** ஆகும்.

**மலை**யில் பெய்யும் மழைநீர்த் **துளிகளால் ஆறு** தோன்றியது.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்தில் சில சொற்கள் உள்ளன. அவற்றுள் 'மலை', 'ஆறு' என்னும் சொற்கள் ஒன்றை மட்டும் குறிக்கின்றன. அதனால், இவை **ஒருமை** எனப்படும். ஒரு பொருளை மட்டும் குறிக்கும் சொல் ஒருமை எனப்படும்.

'ஆறுகள்', 'துளிகள்' என்னும் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிக்கின்றன. அதனால் இவை **பன்மை** எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருளைக் குறிப்பின் பன்மை எனப்படும். ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும். உயர்திணை ஒருமை, உயர்திணைப் பன்மை, அஃறிணை ஒருமை, அஃறிணைப்பன்மை என இருதிணைகளிலும் ஒருமை, பன்மை உண்டு.

### இடம்

**நான்** மலையில் **பிறந்தேன்.**

**நாம்** ஒற்றுமையாக **வாழ்ந்தோம்.**

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களைப் பார். அவற்றுள் 'நான், நாம்' யாரைக் குறிக்கின்றன? பேசுவோனைக் குறிக்கின்றன. 'பிறந்தேன்', 'வாழ்ந்தோம்' என்பன அப்பொருள் செய்யும் வினையைக் குறிக்கின்றன. இவை தன்மை இடத்திற்கு உரியவை. பேசுவோன் தன்னைக் குறிப்பதால் 'நான்', 'நாம்' **தன்மை இடம்** எனக் கூறப்படுகின்றன.

**நீ** கூட்டி வந்து விட்டாய்.

**நீங்கள்** இனிது வாழ்வீர்கள்.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்கள் 'நீ' 'நீங்கள்' என்பன. இவை பேசுவோன் முன்னின்று கேட்பவரைக் குறிக்கின்றன. இச்சொற்கள் முன்னிலை இடத்திற்கு உரியவை. இப்பொருள் செய்யும் வினையைக் குறிப்பதும் முன்னிலை இடத்திற்கே உரியது. பேசுவோன் முன்னால் நிற்பவனைக் குறிப்பதால் இது **முன்னிலை இடம்** எனப்பட்டது.

**அவர்** பதவி ஏற்றார்.


**அவன்** படித்தான்.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள 'அவர், அவன்' என்னும் சொற்கள் பேசுவோனையும் முன்னிற்பவனையும் குறிக்கவில்லை. தொலைவில் உள்ளவனைக் குறிக்கின்றன. அதனால் இவை **படர்க்கை இடம்** எனப்படும். படர்க்கையில் வரும் வினைகளும் படர்க்கை இடத்திற்கு உரியன.

# 17. காயிதே மில்லத்*

காயிதே மில்லத் நமது நாட்டின் சிறந்த தலைவர்களுள் ஒருவர். 'காயிதே மில்லத்' என்பது மக்கள் இவருக்குச் சூட்டிய சிறப்புப் பெயர் ஆகும். 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்கு 'மக்களின் வழிகாட்டி' என்பது பொருள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முகம்மது இஸ்மாயில் என்பதாகும். மக்களை நேரிய பாதையில் வழி நடத்திச் சென்றதால் இவரை மக்கள் இந்தச் சிறப்புப் பெயரால் வழங்கினர்.

காயிதே மில்லத் நெல்லை மாவட்டத்திலுள்ள பேட்டை என்னும் ஊரில் 1896ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையாரின் பெயர் மியாகான் இராவுத்தர்; தாயாரின் பெயர் முகைதீன் பாத்திமா. துணைவியாரின் பெயர் ஜமால் ஹமீதா பீவி. இவருடைய ஒரே மகனின் பெயர் ஜமால் முகம்மது மியாகான்.



இவர் ஏழு வயதுச் சிறுவராக இருந்தபோதே தந்தையார் காலமானார். பின்னர், அன்னையாரின் அரவணைப்பில் வளர்ந்துவந்தார்; முதலில் நெல்லையிலும் பின்னர்ச் சென்னையிலும் கல்வி கற்றார். இவர் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்; பல பரிசுகளையும் பெற்றார்.

கல்லூரிக் கல்வி முடிந்த பின்னர் வாணிக நிறுவனம் ஒன்றில் பணியாற்றினார் ; நேர்மை, கடும் உழைப்பு காரணமாக அந் நிறுவனத்தின் பங்குதாரராக உயர்ந்தார். வணிகராக இருந்தபோதும், பின்னரும் ஏழை எளியவர்க்குத் தாராளமாகப் பொருளுதவி செய்தார்.

இளம் வயதிலேயே காயிதே மில்லத் நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டார் ; 1921ஆம் ஆண்டில் பி.ஏ. இறுதித் தேர்வு எழுதாமல் காந்தியடிகள், மௌலானா முகம்மது அலி முதலியோர் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். நம் நாடு இந்தியா, பாகிஸ்தான் என்று பிரிந்து சுதந்தரம் அடைந்தபொழுது முகம்மது

* மூலக் கட்டுரை எழுதியவர் திரு. மியாகான், எம். எல். சி.

அலி ஜின்னா இவரையே இந்திய முஸ்லிம் லீகிற்கு அமைப்பாளராகத் தேர்ந்தெடுத்தார்.

1948ஆம் ஆண்டில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவ ரானார். இவர் சிறுபான்மை மக்கள் உரிமைக்கும், நாட்டு மக்களின் நலனுக்கும் அயராது பாடுபட்டார்; இவர் சட்டமன்ற உறுப்பினராகவும், அரசியல் நிர்ணயசபையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநிலங்களவை உறுப்பினராகவும் ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் மூன்றுமுறை பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். மூன்று முறையும் தேர்தலின்போது தம் தொகுதிக்குப் போகாமலே வெற்றி பெற்றார். இவர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர். ஆனால், இவர் வெற்றி பெற்ற தொகுதி கேரளத்தைச் சார்ந்த மஞ்சேரி. இந்தியாவில் இத்தகைய சிறப்புப் பெற்றவர் காயிதே மில்லத் ஒருவர் மட்டுமே.

இந்திய நாட்டுக்குப் பொதுமொழியாக எம்மொழியைத் தேர்ந் தெடுப்பது என்று அரசியல் நிர்ணய சபையில் விவாதம் நடந்தது. "தொன்மை, எளிமை, இனிமை, இலக்கிய இலக்கண வளம் நிறைந்த ஒரு மொழியே பொதுமொழி ஆக்கப்படவேண்டும். இத்தகைய சிறப்புகள் இந்திய மொழிகளுள் தமிழுக்குமட்டுமே உள்ளன. எனவே, தமிழையே இந்திய நாட்டின் பொதுமொழி ஆக்கவேண்டும்," என்று காயிதே மில்லத் வலியுறுத்தினார். காயிதே மில்லத்தின் மொழிப்பற்றினை இது விளக்குகிறது.

கல்வி வளர்ச்சியில் காயிதே மில்லத் மிகவும் அக்கறை காட்டினார். இவரின் பெருமுயற்சியால் பல பள்ளிகள், கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

இவர் தம் தாயாரின்மீது அளவற்ற பாசமும் பணிவும் கொண்டி ருந்தார். ஒரு நாள் இரவு 9 மணி. சற்றுக் கால் அமுக்கிவிடும்படி இவரின் அன்னையார் இவரைக் கேட்டுக்கொண்டார். அவ்வாறே இவரும் அன்னையாருக்குப் பணிவிடை செய்தார். அன்னையார் அப்படியே உறங்கிவிட்டார். அதிகாலை 3 மணி. தொழுகைக்காக அன்னையார் கண்விழித்தார். தம் மகன் இன்னமும் கால் அமுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்; திகைத்துப் போனார்; மனம் உருகினார். இவ்வாறு அன்னையாருக்குப் பணிவிடை செய்தபோது காயிதே மில்லத்துக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும்.

காயிதே மில்லத் தம் பிள்ளைக்கோ குடும்பத்தினர்க்கோ வேலை வேண்டும் என்றோ, பதவி வேண்டும் என்றோ பரிந்துரை நாடாதவர்; நெறிமுறை பிறழாது வாழ்க்கை நடத்தியவர். அவர் அரிசி, சர்க்கரை போன்ற பொருள்களைப் பங்கீட்டுக் கடையில் பெறுவதில்கூட முறைப் படியே நடந்துகொண்டார்.

காயிதே மில்லத் 4-4-1972-ல் மறைந்தார். அவரது நினைவைப் போற்றும்வகையில் சென்னை அரசினர் கலைக்கல்லூரிக்குக் காயிதே மில்லத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சென்னை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலைக்குக் 'காயிதே மில்லத் நெடுஞ்சாலை' எனப் பெயரிடப் பட்டுள்ளது. புனித ஜார்ஜ் கோட்டைக்கு அருகில் உள்ள ஒரு பாலத் திற்கும் அவர் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## *அருஞ்சொற்பொருள்*

*நேரிய பாதை - சரியான வழி, காலமானார் - இறந்தார், திகழ்ந்து - விளங்கி, தொழுகை - வழிபாடு, நெல்லை - திருநெல்வேலி, அன்னையார் - தாயார், வாணிக நிறுவனம் - வியாபாரக் கம்பெனி.*

### எழுத்துப் பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுது :

(அ) காயிதே மில்லத் என்னும் சிறப்புப் பெயர் எவ்வாறு கிடைத்தது ?

(ஆ) காயிதே மில்லத் எங்கு, எப்போது பிறந்தார் ?

(இ) இவர் எங்கெங்குக் கல்வி கற்றார் ?

(ஈ) இவர் வாணிக நிறுவனத்தின் பங்குதாரராக உயர்ந்ததன் காரணம் யாது ?

(உ) பிற வகுப்பினர் மத்தியில் இவர் பெற்றிருந்த மரியாதை எவ்வாறு புலப்பட்டது ?

(ஊ) காயிதே மில்லத்தின் மொழிப்பற்றினை விளக்கு.

(எ) காயிதே மில்லத்தின் கல்விப்பணியை விளக்கி எழுது.

(ஏ) இவர் தம் தாயார்மீது கொண்டிருந்த பாசத்தையும் பணிவையும் விளக்கும் நிகழ்ச்சி யாது ?

(ஐ) காயிதே மில்லத்தின் நினைவு எவ்வாறு போற்றப்படுகிறது ?

**2. பிரித்து எழுது :**

பொருளுதவி, நெடுஞ்சாலை.

**3. புள்ளியிட்ட இடங்களில் தக்க சொற்களை நிரப்பு :**

1. 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்கு ........... ............ என்பது பொருள்.
2. இளம் வயதிலேயே காயிதே மில்லத் ........... ... ...... இயக்கத்தில் ஈடுபட்டார்.
3. காயிதே மில்லத் பாராளுமன்ற உறுப்பினராக ............... முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.
4. சென்னை .............. .............. 'காயிதே மில்லத் நெடுஞ்சாலை' எனப் பெயரிடப்படடுள்ளது.

## இலக்கணம்

### வல்லினம் மிகும் இடங்கள்

அவருக்கு + கொடு = அவருக்குக் கொடு.

பரிசுகளை + பெற்றார் = பரிசுகளைப் பெற்றார்.

சிறப்பு + பெற்றார் = சிறப்புப் பெற்றார்.

அந்த + தம்பி = அந்தத் தம்பி.

எந்த + கட்டடம் = எந்தக் கட்டடம் ?

அப்படி + போ = அப்படிப் போ.

இப்படி + செய் = இப்படிச் செய்.

அங்கு + சென்றான் = அங்குச் சென்றான்.

இச்சொற்றொடர்களைக் கவனி. இவற்றில் 'க், ச், த், ப்' என்னும் வல்லின மெய்கள் மிகுந்துள்ளன.

### வல்லினம் மிகா இடங்கள்

கிளி + கொத்தியது = கிளி கொத்தியது.

நின்று + செல் = நின்று செல்.

களி + தின்றான் = களி தின்றான்.

நல்ல + பாடல் = நல்ல பாடல்.

இச்சொற்றொடர்களைக் கவனி. இவற்றில் வல்லின மெய்கள் மிகவில்லை. தமிழில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்; சில இடங்களில் மிகாது,

# 18. புதல்வரைக் காத்த புலவர்

## (நாடகம்)

### *காட்சி—1*

***உறுப்பினர் :*** *கிள்ளி, ஒற்றர் தலைவன், அமைச்சன்*

***காலம் :*** *காலை நேரம்*

***கிள்ளி :*** அமைச்சர்களே! படைத்தலைவர்களே! சோழ நாட்டின் பெருமக்களே! நான் புகழ்மிக்க பரம்பரையில் பிறந்தவன்; ஆனால், இன்று என் வீரம், என் புகழ், என் ஆற்றல் யாவும் திருக் கோவலூர் மலையமானால் மங்கியே கிடக்கின்றன. என்ன செய்வதென்றே விளங்கவில்லை!

*(காவலன் வருகிறான்.)*

***காவலன் :*** மன்னர் பெருமானே! வணக்கம். திருக்கோவலூரில் ஒற்று ஆராய்ந்த ஒற்றர் தலைவர் அவசரமாக வந்துள்ளார்.

***கிள்ளி :*** வரச்சொல், காவலா!

***காவலன் :*** அப்படியே ஆகட்டும், மன்னவா!

*(காவலன் சென்று ஒற்றர் தலைவரை அழைத்து வருகிறான்.)*

***ஒற்றர் தலைவன் :*** மன்னா, வணக்கம்! சோழப் பேரரசே, வாழ்க! இனிப்பான செய்தியுடன் வந்துள்ளேன்.

***கிள்ளி :*** கோவலூரில் இனிய செய்தியா? விளக்கமாகச் சொல்லுங்கள், ஒற்றர் தலைவரே!

***ஒற்றர் :*** வேந்தே! தங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாய் இருந்த மலையன் 'திடு'மென நேற்றுக் காலை மறைந்துவிட்டான்.

***கிள்ளி :*** காரணம் என்ன?

***ஒற்றர் :*** காரணம் ஒன்றும் தெரியவில்லை, மன்னவா!

***கிள்ளி :*** மலையமான் தொலைந்தான்! என் புகழை வளர்க்கவிடாமல் வாழ்ந்தவன் தளர்ந்து தரைமிசை விழுந்துவிட்டானாம். ஒற்றரே ! வேறு ஏதேனும் செய்தி இருப்பின் சொல்லுங்கள்.

*ஒற்றர் :* மன்னவா! மலையமான் இறந்தவுடன் அரண்மனையுள் சென்று அவன் புதல்வர்கள் இருவரையும் தூக்கி வந்துவிட்டேன்.

*கிள்ளி :* அப்படியா! மகிழ்ச்சி! உம் திறமையைப் பாராட்டி இந்த முத்தாரத்தை அளிக்கிறேன்; பெற்றுக்கொள்ளுங்கள்.

*ஒற்றர் :* நன்றி மன்னவா! மிக்க நன்றி.

*கிள்ளி :* நச்சுமரம் ஈன்ற பிஞ்சுகளாம் மலையமான் மக்களை நாளை இந்த இடத்தில் யானையின் காலால் இடறச் செய்யவேண்டும். அமைச்சரே, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

*அமைச்சர் :* மன்னவா! நின் கொற்றம் வாழ்க! கொஞ்சி விளையாட வேண்டிய குழந்தைகளைக் கொல்வது .....

*கிள்ளி :* *(இடைமறித்து)* அமைச்சரே, நிறுத்துங்கள். மலையன் யார்? என் எதிரி; முதல் எதிரி; நாகத்தின் குட்டிகள் நாகங்கள்தாம் என்பது எனக்குத் தெரியும். மலையமான் பெற்ற பிள்ளைகள் நாளை காலை யானையால் மிதிக்கப்படவேண்டும். இஃது அரச கட்டளை. அவை கலையட்டும்.

### *காட்சி—2*

*உறுப்பினர் :* *மக்களில் சிலர்*

*காலம் :* *மாலை நேரம்*

*முதலாமவன் :* பாவம், அவர்கள் பச்சிளம் பாலகர்கள்; அவர்களை அரசர் கொல்லும்படியாகச் சொல்லிவிட்டார்.

*இரண்டாமவன் :* மன்னருக்கு மலையமான்மீது பகை. அதற்காக அவன் பிள்ளைகளை ஏன் கொல்லவேண்டும்?

*மூன்றாமவன் :* நமக்கு ஏனப்பா இந்த வம்பு? அந்தப் பிள்ளைகளின் விதி அப்படி இருந்தால் நாம் என்ன செய்ய முடியும்?

*முதலாமவன் :* கருணையே இல்லாமல் பேசுகிறாயே! விதி என்ன செய்யும்? நமக்குத்தான் மதி குறைந்துவிட்டது.

*இரண்டாமவன் :* உண்மைதான்! பேசாத சித்திரம்போல் மன்னன் அவையில் இருந்த நமக்கு மதியே இல்லை. அப்போதே எதிர்த்திருக்கவேண்டும்.

*மூன்றாமவன் :* ஏனப்பா? உன் தலை உடலோடு ஒட்டி இருப்பதில் உனக்கு விருப்பமில்லையா? மன்னனை எதிர்த்துக் குரல் எழுப்பினால் தலை தனியாகும்! நினைவில் கொள்.

*முதலாமவன் :* நீ சொல்வது சரி! எவராவது அரசனைத் தடுத்தால் அந்தக் குழந்தைகள் காப்பாற்றப்படுவார்கள். யார் அதைச் செய்வது? பூனைக்கு எந்த எலியால் மணி கட்ட முடியும்?

*இரண்டாமவன் :* நீ சொன்னதும்தான் நினைவுக்கு வருகிறது. யாரோ சிலர் கோவூர்கிழாரிடம் செய்தி சொல்ல ஓடியுள்ளனராம்.

*மூன்றாமவன் :* அப்படியா? துன்பத்தைத் துடைத்துக் கொள்ளுங்கள். எப்படியும் கோவூர்கிழார் குழந்தைகளைக் காப்பாற்றிவிடுவார். சரி, வாருங்கள். நாளை காலையில் அரசவையில் நடப்பதைக் காண்போம்.

### *காட்சி—3*

*உறுப்பினர்கள் :* *மலையன் குழந்தைகள், அரசன், கோவூர் கிழார்*
*காலம் :* *காலை நேரம்*

*திருமுடியான் :* அண்ணா, எனக்குப் பயமாக இருக்கிறது. அழுகை வருகிறது. நம்மை ஏன் இங்குத் தூக்கி வந்தார்கள்?

*(அழுகிறான்)*

*பெருமுடியான் :* தம்பி, அழாதே! நம்முடைய அப்பா இறந்து விட்டாராம். எனக்குப் பயமாக இருக்கிறது. நீ அழுதால் நானும் அழுவேன்.

*(யானை வருகிறது.)*

தம்பி! அதோ பார்! யானை! ஆ! எவ்வளவு உயரம்? பட்டாடை உடுத்தியுள்ளதைப் பாரேன். ஐ! யானை! யானை!

*(இருவரும் கைதட்டி மகிழ்கின்றனர், அரசர் கிள்ளியும் ஏனையோரும் வருகின்றனர்.)*

*கிள்ளி :* யானைப் பாகனே! இன்னும் என்ன தயக்கம்? யானையை விரட்டு! மலையனின் பிள்ளைகள் தொலைந்துபோகட்டும்.

*(மக்கள் எல்லாரும் கண்ணீர் வழிய இக்காட்சியைக் காண்கின்றனர். அப்போது......)*

*கோவூர்கிழார் :* மன்னா, நிறுத்து! யானையை நிறுத்து! அதன் மூலம் உலகில் உன் புகழை நிலைநிறுத்து!

*கிள்ளி :* யார் அவர்? கோவூர் கிழாரா? வாருங்கள், புலவர் தலைவரே! ஏன் நிறுத்தவேண்டும்? கொடியவரை யான் அழிக்கவேண்டாவா?

***கோவூர் கிழார் :*** மன்னா! யார் கொடியவர்? ஒன்றும் அறியாத இந்தப் பிஞ்சு நெஞ்சங்களா ? ஒரு புறாவுக்காகத் தன் உடல் தசையையே அரிந்து கொடுத்த சோழன் மரபில் தோன்றிய நீயா இப்படி உரைப்பது? பசுவின் துயர் துடைக்கத் தன் இனிய மகனைத் தேர்க் காலில் இட்ட மன்னன் மரபில் வந்த நீ இப்பிள்ளைகளைக் கொலை புரியலாமா? இந்தக் குழந்தைகளின் முகத்தைப் பார்! தம்மைக் கொல்லவரும் யானையைக் கண்டு கலங்காமல் கைகொட்டிச் சிரிக்கும் இவர்களின் அறியாமையைப் பார். இவர்கள் வள்ளலின் பிள்ளைகள்! வள்ளலின் மக்களும் வள்ளல்களே என்பதை அறியாயா ? வாழைக் கன்றைத்தான் வாழை மரம் ஈனும் ! அவர்களா எதிரிகள்? நான் சொல்ல வந்ததைச் சொல்லி விட்டேன் ! இனி உன் விருப்பம்போல் செய்.

***கிள்ளி :*** *(வருத்தத்துடன்)* ஐயா, புலவரே! என்னை மன்னியுங்கள். என் ஆணவம் அருளை அழித்துவிட்டது. நல்ல வேளை ! பிள்ளைகளைக் கொல்லுமுன் தடுத்தீர்கள் ! என் பரம்பரைப் புகழே என்னால் அழிந்திருக்கும். இதோ கொலையை நிறுத்து மாறு கட்டளை இடுகிறேன். என் புகழைக் காத்த புலவரே! மாற்றான் மைந்தர்களைக் காத்த புலவரே ! மன்னியுங்கள்; பொறுத்து அருளுங்கள்.

*(மன்னன், புலவர் கால்களில் விழுகிறான்; புலவர் அவனை எடுத்து மார்போடு தழுவுகிறார்; யானை திரும்புகிறது.)*

***மக்கள் :*** **வாழ்க, கிள்ளி வளவர் ! வாழ்க, புதல்வரைக் காத்த புலவர் !**

## அருஞ்சொற்பொருள்

*கிள்ளி - சோழ அரசன், மன்னர் - அரசர், கட்டளை - ஆணை, முட்டுக் கட்டை - தடை, மறைந்துவிட்டான் - இறந்துவிட்டான், போர் - சண்டை, தரைமிசை - பூமி மேல், அரண் - பாதுகாப்பு, அரண்மனை - அரசன் வாழும் இடம், முத்தாரம் - முத்துமாலை, நச்சு - நஞ்சு, எதிரி - பகை, நாகம் - நல்ல பாம்பு, இடறுதல் - எற்றுதல், உதைத்தல், அவை - சபை, பாலகர் - சிறுவர், கருணை - இரக்கம், திருமுடியான், பெருமுடியான் - மலையமானின் இரு மக்கள், நிலைநிறுத்து – நிலைபெறச் செய், மாற்றான் - பகைவன்.*

### I. வாய்மொழிப் பயிற்சி

1. இப்பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டு.
2. 'தமிழ்ச் செல்வம்' என்னும் நூலிலுள்ள நாடகம்பற்றி (கரிகாலன் முதியோர் வழக்கைத் தீர்த்துவைத்ததை) ஆசிரியரிடம் கேள்.

3. இப்பாடத்தின் நாடகத்தைச் சிறு கதையாகக் கூறு.

4. சிபி மன்னனின் கதையையும், மனுநீதிச் சோழனின் கதையையும் கேட்டறிந்துகொள்.

## II. படிப்புப் பயிற்சி

1. ஓரங்க நாடகங்களையுடைய நூல்களைப் படி.

2. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை இட்டுப் படி :

(அ) மகனைத் தேர்க்காலில் இட்ட மன்னன் ...............

(ஆ) தன் உடலின் தசையை அரிந்து கொடுத்த மன்னன் ...............

(இ) யானையின் காலால் இடற ஆணை இட்ட மன்னன் ............

(ஈ) முதியோர் வழக்கைத் தீர்த்துவைத்த மன்னன் ...............

[கிள்ளி, கரிகாலன், சிபி, மனுநீதிச் சோழன்.]

3. மலையமான் ............... விட்டான்.

[விழுந்து, இறந்து, மறைந்து]

4. பூனைக்கு எந்த ............... மணி கட்டமுடியும் ?

[கிளியால், எலியால், புறாவால்]

5. கீழ்வரும் பழமொழிகளைப் படி :

(அ) விதியை மதியால் வெல்லலாம்.

(ஆ) விதியே மதியாகி விடும்.

(இ) தலைவிதியை யாரால் மாற்ற முடியும் ?

(ஈ) விதியை வெல்ல முடியுமா ?

## III. எழுத்துப் பயிற்சி

1. எதிர்ச்சொல் எழுது :

| | | |
|---|---|---|
| புகழ் × | பேரரசு × | எதிரி × |
| விருப்பு × | வாழ்க × | பிஞ்சு × |

[முற்றல், நண்பன், இகழ், வெறுப்பு, ஒழிக, சிற்றரசு]

2. பிரித்து எழுது :

அரசவை, பட்டாடை, முத்தாரம், பச்சிளம்.

3. சேர்த்து எழுது :

| | |
|---|---|
| படை + தலைவன் = | நடப்பதை + காண்போம் = |
| யானை + பாகன் = | புதல்வரை + காத்த = |

**4. வாக்கியத்தில் அமைத்து எழுது :**

முட்டுக்கட்டை, பிஞ்சு நெஞ்சம், துயர்துடைக்க.

**5. பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது :**

(அ) கிள்ளி வளவன் அரசவையில் என்ன கூறினான் ?

(ஆ) ஒற்றர் தலைவனுக்கு அரசன் ஏன் முத்தாரத்தைக் கொடுத்தான் ?

(இ) அரசன் அமைச்சனுக்கு இட்ட கட்டளை யாது ?

(ஈ) மக்களுள் சிலர் ஒருவருக்கொருவர் என்ன கூறிக்கொண்டனர் ?

(உ) மலையமான் மக்கள் யார் ? அவர்கள் யானையைக் கண்டதும் என்ன கூறினர் ?

(ஊ) மலையமான் புதல்வரைக் கோவூர் கிழார் எவ்வாறு காத்தார் ?

## இலக்கணம்

### நிறுத்தக்குறிகள்

என் வீரம், என் புகழ், என் ஆற்றல் மங்கியே கிடக்கின்றன.

இவ் வாக்கியத்தில் 'வீரம், புகழ்' என்னும் சொற்களுக்குப் பின் **,** என்னும் குறி உள்ளதைப் பார். இதற்குக் **கால் புள்ளி** என்பது பெயர். இங்கு மிகச் சிறிது நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

மலையன் என் எதிரி; முதல் எதிரி.

இந்தச் சொற்றொடரில் 'எதிரி' என்னும் சொல்லின் பின் **;** என்னும் குறி இடப்பட்டுள்ளது. இது முந்திய குறியின்மேல் ஒரு புள்ளி கூடுதலாக இடப்பட்டதாக விளங்குகிறது. இதற்கு **அரைப் புள்ளி** என்பது பெயர். இப் புள்ளி உள்ள இடத்தில் இன்னும் சிறிது அதிக நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

உறுப்பினர் : கிள்ளி, ஒற்றர் தலைவன்

நேரம் : காலை நேரம்

இவ்வரிகளினுள் 'உறுப்பினர், நேரம்' என்னும் சொற்களின் பின் **:** என்னும் அடையாளம் உள்ளது. இது **முக்கால் புள்ளி** எனப்படும். இப்புள்ளி உள்ள இடத்தில் கால், அரைப்புள்ளி உள்ள இடங்களில் உள்ளதைவிடச் சிறிது அதிக நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

எனக்குப் பயமாய் இருக்கிறது. அழுகை வருகிறது.

இவ்வாக்கியங்களுள் 'இருக்கிறது, வருகிறது' என்னும் சொற்களின் பின் **.** என்னும் குறி உள்ளது. இதற்கு **முற்றுப்புள்ளி** என்பது பெயர். ஒரு வாக்கியம் முடிந்துவிட்டது (முற்றுப்பெற்றுவிட்டது) என்பதை இப்புள்ளி உணர்த்துகிறது. இப்புள்ளி உள்ள இடத்தில் மேலும் சற்று நிறுத்திப் படிக்க வேண்டும். அடுத்த சொல்லைச் சேர்த்துப் படிக்கக்கூடாது.

**யார்** அவர் ? கோவூர் **கி**ழாரா ?

இவ்வாக்கியங்களில் 'அவர், கிழாரா' என்னும் சொற்களுக்குப் பின் **?** என்னும் குறி இடப்பட்டுள்ளது. 'யார், கிழாரா' என வினாப் பொருளைக் கேள்வி உணர்ச்சியுடன் படிக்கவேண்டும் என்பதற்காக இக்குறி இடப்பட்டுள்ளது. இது **கேள்விக் குறி** எனப்படும். **வினாக் குறி** எனவும் சொல்லப்படும்.

தம்பி ! அதோ பார் ! யானை ! ஐ ! யானை ! யானை !

வாழ்க, கிள்ளி வளவர் ! மன்னா நிறுத்து !

மேலே உள்ள சொற்களின் பின் **!** என்னும் அடையாளம் இடப்பட்டுள்ளது. இது பேசுவோர் உணர்ச்சிகளைக் காட்ட இடப்படுகிறது. வியப்பு உணர்ச்சி, விருப்ப உணர்ச்சி, அச்ச உணர்ச்சி போன்ற உணர்ச்சிகளைக் காட்ட இந்தக் குறி இடப்படுகிறது. அதனால் இஃது **உணர்ச்சிக் குறி** எனப்படும். இக்குறி உள்ள இடத்தில் அதற்கு ஏற்ற உணர்ச்சியுடன் படிக்கவேண்டும். இதனை **வியப்புக் குறி** எனவும் கூறுவர்.

மேற்கூறப்பட்ட கால் புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, கேள்விக் குறி, உணர்ச்சிக் குறி அனைத்தும் **நிறுத்தக் குறிகள்** எனப்படும்.

இவை தவிர மேற்கோள் குறி ' ' என ஒன்றும் உண்டு. அது பொன் மொழிகளை எடுத்தாளப் பயன்படுகிறது. இதனை **ஒற்றை மேற்கோள் குறி** என்பர்.

ஆசிரியர், " நீ திருக்குறள் படித்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்," என்றார்.

இவ்வாறு ஒருவர் பேசிய பேச்சினை " " இவ்வாறு **இரட்டை மேற்கோள் குறி**களுக்கிடையில் அமைத்து எழுதவேண்டும்.

நிறுத்தக் குறிகள் பிழையின்றி எழுதவும் படிக்கவும் பயன்படுகின்றன. ஒருவர் பெயரின் முன்னெழுத்தாக, அதாவது தந்தையின் பெயர்ச் சுருக்கமாக வரும் எழுத்தின் பின்னும் பொருள் முடியும் இடத்திலும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஒருவர் பெயர் 'கு. ரங்கன்', இன்னொருவர் பெயர் 'சி. ரங்கன்' என்று வைத்துக்கொள். கு, சி என்ற எழுத்தின் பின் முற்றுப் புள்ளி (முழுப்புள்ளி) வைக்காவிட்டால் என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார். 'குரங்கன், சிரங்கன்' எனவாகிப் பொருள் மாறுபட்டுப்போகும். அதனால், நிறுத்தக் குறிகளை இடமறிந்து பயன்படுத்தவேண்டும்.

# செய்யுள் பகுதி

## I. வாழ்த்து

### திரு அருட்பா

பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே, எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே, அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை எல்லாம்
தணிக்கின்ற தருவே, பூந் தடமே, ஞானச்
செங்குமுதம் மலரவரு மதியே, எல்லாம்
செய்யவல்ல கடவுளே, தேவ தேவே.

—இராமலிங்க அடிகள்

### அருஞ்சொற்பொருள்

சமயம் - மதம், நதி - ஆறு, கங்குகரை - எல்லை, கதி - உயரிய நிலை, மயல் - மயக்கம், சோடை - சோர்வு, தரு - மரம், பூந்தடம் - பூக்கள் நிறைந்த இடம் (நீர்நிலை), ஞானம் - மெய்யறிவு, செங்குமுதம் - சிவப்பு அல்லி மலர், மதி - சந்திரன், தேவ தேவே - தேவர்களுக்குத் தேவனாக விளங்கும் இறைவனே.

### பயிற்சி

**(அ) விடை எழுது:**

1. கடவுளைக் 'கடலே' என்று இராமலிங்க அடிகள் ஏன் அழைக்கிறார் ?
2. கடவுள் எவ்வாறு கதியாக விளங்குகிறார் ?
3. கடவுளைத் தருவே, பூந்தடமே என்று இராமலிங்க அடிகள் ஏன் அழைக்கிறார் ?
4. கடவுள் எவ்வாறு மதியாக விளங்குகிறார் ?
5. கடவுளின் இயல்புகள் யாவை ?

**(ஆ) சேர்த்து எழுது :**

சோலை + எல்லாம் = பூ + தடம் =

**(இ) பிரித்து எழுது :**

செங்குமுதம் சமயமெனும்

**(ஈ) புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பு :**

*1.* கங்கு .............. .............. கடலே ..............

.............. காண்கின்ற கதியே.

*2.* மயல் .............. எல்லாம் .............. தருவே.

**(உ) பொருத்து :**

*1.* சமயமெனும் — மதி

*2.* மலரவரும் — கடவுள்

*3.* செய்யவல்ல — நதிகள்

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

ஒழுக்கம் உடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 1

அழுக்கா(று) உடையான்கண் ஆக்கம்போன்(று) இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 2

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 3

கல்வி

எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப; இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 4

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 5

யாதானும் நாடாமால்; ஊராமால்; என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 6

கேள்வி

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 7

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 8

கற்றில னாயினும் கேட்க; அஃதொருவன்
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 9

அறிவு உடைமை

அறிவற்றம் காக்கும் கருவி ; செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண். 10

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 11

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடையர் ஏனும் இலர். 12

பண்பு உடைமை

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 13

அரம்போலும் கூர்மையர் ஏனும் மரம்போல்வர்
மக்கள்பண்(பு) இல்லா தவர். 14

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந்(து) அற்று. 15

—திருவள்ளுவர்

## அருஞ்சொற்பொருள்

1. ஒழுக்கம் உடைமை - நல்ல நடத்தை உடையவனாக இருத்தல், நல் ஒழுக்கம் - நல்ல நடத்தை, விழுப்பம் - சிறப்பு, ஓம்ப — பாதுகாக்க, உயிரினும் - உயிரைக் காட்டிலும்.

2. அழுக்காறு - பொறாமை, ஆக்கம் - உயர்வு, இலான்கண் - இல்லாதவனிடம்.

3. நன்றி - நன்மை, இடும்பை - துன்பம்.

4. எண் என்ப - கணக்கு என்று கூறப்படுவனவும், எழுத்து என்ப - இலக்கிய இலக்கணம் என்று கூறப்படுவனவும்.

5. கற்றோர் - படித்தவர், கல்லாதவர் - படிக்காதவர்.

6. நாடாமால் — நாடாம், ஆல் என்பது அசை (இதற்குப் பொருள் இல்லை) சாந்துணையும் - இறக்கும் அளவும் (சாகும் அளவும்).

7. செவிச்செல்வம் - செவியால் வரும் கேள்விச் செல்வம், தலை - மேலானது, சிறந்தது.

8. ஆன்ற - நிறைந்த.

9. கற்றிலனாயினும் - ஒருவன் கல்வி கல்லாதவனாயினும், கேட்க - பெரியோர் சொல்வதைக் கேட்கவேண்டும், அஃது - அக்கேள்வி, ஒற்கம் - மனத்தளர்ச்சி, ஊற்று ஆம் துணை - ஊன்றுகோல் போன்ற துணையாகும்.

10. அறிவு+அற்றம் - அறிவற்றம், அற்றம் - அழிவு, காக்கும் - வாராமல் பாதுகாக்கும், செறுவார் - பகைவர், அரண் - பாதுகாவல் இடம்.

11. பேதைமை - அறிவு அற்ற தன்மை, அறிவார் - அறிவுடையவர்.

12. உடையார் - உடையவர், இலர் - இல்லாதவர்.

13. நயன் - நேர்மை, நன்றி - நன்மை, பாராட்டும் - புகழும்.

14. அரம் - இரும்பை அராவும் கருவி, மக்கள் பண்பு - மனிதத் தன்மை.

15. நன்பால் - நல்ல பால், கலம் - ஏனம், பாத்திரம் ; அற்று - அத்தன்மைபோல.

## பயிற்சி

(அ) விடை எழுது :

1. ஒழுக்கம்பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?
2. கல்வி குறித்துத் திருக்குறள் கூறுவன யாவை ?
3. கேள்விபற்றி வள்ளுவர் என்ன கூறுகிறார் ?
4. அறிவுடைமையின் சிறப்புக் குறித்துத் திருக்குறள் கூறுவது யாது ?
5. பண்பு இல்லாதவர்களைப்பற்றி வள்ளுவர் யாது கூறுகிறார் ?

(ஆ) சேர்த்து எழுது :

போன்று + இல்லை = கண் + உடையர் =

(இ) பிரித்து எழுது :

அறிவற்றம் வாயுணர்வு

(ஈ) பொருத்துக :

| | |
|---|---|
| 1. ——— உயிரினும் ஓம்பப்படும். | 1. கருவி |
| 2. கண்ணுடையர் என்பவர் ———. | 2. செவிச்செல்வம் |
| 3. செல்வத்துள் செல்வம் ———. | 3. ஒழுக்கம் |
| 4. அறிவு அற்றம் காக்கும் ———. | 4. கற்றோர் |

## 2. நீதிநெறி விளக்கம்

கல்வியின் பயனும் சிறப்பும்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும் நாட்டும்;—உறுங்கவலொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை. 1

இருந்தும் பயன் இல்லாதவை

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று. 2

பணிவுடைமை

கல்வி உடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்;—இல்லார்
குறைஇரந்து நம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 3

பெரியோர் பணிவு

ஆக்கம் பெரியோர் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப;—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு? 4

தற்புகழ்ச்சி கூடாது.

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ(து)? இன்பம்
நயவாமை அன்றே நலம்? 5

வன்சொல்லும் இன்சொல்லும்

இனியவர் என்சொலினும் இன்சொல்லே; இன்னார்
கனியும் மொழியும் கடுவே;—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும். 6

நல்வழி

பொய்,குறளை, வன்சொல், பயனிலவென்(று) இந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில்
புலமைந்தும் காத்து, மனமா(சு) அகற்றும்
நலமன்றோ நல்லா(று) எனல். 7

மெய்ந்நெறி நிற்றல்

கற்றாங்(கு) அறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருந்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின்(று) ஒன்றுணர்ந்து
நிற்பாரே நீள்நெறிச்சென் றார். 8

— குமரகுருபரர்

## அருஞ்சொற்பொருள்

1. அறம் - தருமம், பொருள் - செல்வம், வீடு - மேல்உலகம், பயக்கும் - கொடுக்கும், புறங்கடை-வெளியே, நல்லிசை–நல்ல புகழ், உறும்-வந்தடையும், கவல் - கவலை, உற்றுழி - வந்தபோது, கைகொடுக்கும் - உதவிபுரியும், கல்வியின் ஊங்கு - கல்வியைக்காட்டிலும், கல்வியைவிட.

2. அவை - சபை, மெய்விதிர்ப்பார் - உடல் நடுங்குவார், ஆகுலம் - ஆரவாரம், நவை - குற்றம், ஈத்து - கொடுத்து, நல்கூர்ந்தார் - வறுமை யுடையவர், இன்னலம் - இனிய அழகு, பூத்தல் - வெளிப்பட்டுத் தோன்றுதல்.

3. உடைமை - செல்வம், தாழ - பணிய.

4. பணிவு - அடக்கம், மீச்செலவு - அளவுக்கு மீறிய தவறான நடத்தை (குறும்புத்தனம்), நனி - மிகுதி, தாழ்ந்து - பணிந்து, தூக்கின் - உயர்த்திப் பிடித்தால், மெலியது - எடை குறைந்த பொருள் உள்ள தராசுத் தட்டு, துலை - தராசு.

5. வியப்பிப்பான் - நன்கு மதிக்கும்படி செய்ய எண்ணி, தீச்சுடர் - விளக்கு, சொரிந்து - ஊற்றி, வளர்த்தல் - எரியச் செய்தல், வியப்பு - நன்மதிப்பு, நயவாமை - விரும்பாமை, நலம் - இன்பம்.

6. இன்னார் - தீயவர், கனி - கனிந்த, இனிமையான; கடு - விடம்; நஞ்சு; அனல் - தீ, கொளுந்தும் - சுடும், வெங்காரம் - உப்பு வகைகளுள் ஒன்று, வெய்து - வெப்பம் உடையது, மெய்பொடிப்ப - உடம்பு மயிர் சிலிர்க்க, சிங்கி- நஞ்சு.

7. குறளை - கோள்சொல்லுதல், எய்தாமை - பொருந்தாமை, வழுக்காது - நெறி தவறிச் செல்லாமல், புலமைந்து (புலம் + ஐந்து) - மெய், வாய், கண், மூக்கு, செவி; காத்து - அடக்கி, மாசு - குற்றம், நல்லாறு - நல்ல வழி.

8. கற்றாங்கு - கற்றபடி, ஓரீஇ - நீங்கி, பற்றுவது - வீட்டு (ஞான) நெறி, பணி - தன் செயல், அற - நீங்க, ஒன்று - தனிப் பரம்பொருள், கடவுள்; நீணெறி - (நீள் + நெறி) பெருவழி.

## பயிற்சி

(அ) விடை எழுது :

1. கல்வியின் பயனும் சிறப்பும் யாவை ?
2. இருந்தும் பயன் இல்லாதவை யாவை ?
3. செல்வம் எனப்படுபவை யாவை ?
4. பெரியோர் பணிவை நீதிநெறிவிளக்கம் எவ்வாறு எடுத்து உரைக்கிறது ?
5. தற்புகழ்தல் கூடாது என்பதைக் குமரகுருபரர் எவ்வாறு கூறுகிறார் ?
6. வெங்காரம், சிங்கி என்ற இரண்டின் இயல்புகள் யாவை? அவை எதற்காக எடுத்தாளப்பெற்றன ?
7. எது நல்வழி என நீதிநெறிவிளக்கம் கூறுகிறது ?
8. நீள்நெறிச் சென்றார் இயல்புகள் யாவை ?

(ஆ) பிரித்து எழுது :

ஊங்கில்லை புலமைந்தும்

(இ) சேர்த்து எழுது :

நலம் + அன்றே = தீது + ஓரீஇ =

# III. கதைப் பகுதி

## 1. நண்டு கொக்கைக் கொன்ற கதை

(பஞ்சதந்திரப் பாடல்)

மீன்ஒன்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்கு
தான்அங்கொரு பால்நண்டு தனைக்கண்டு இரைகொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டுஅப்
பால்நண்டதை, 'நீஇங்குறை பண்பேது உரை'என்ன, 1

'என்னென்றுரை செய்வேன்!இனி யான்எங்ஙனம் உய்வேன்!
கொல்நுந்திய வலைகாரர்கள் கூடிக்குளம் ஏரி
மன்னும்தடம் எல்லாம்மிக வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதல் சேரப்பிடித் தாரே! 2

'இந்தக்குளம் நாளைக்கு'என எண்ணிக்கொடு போனார்.
அந்தப்படி வந்தேபிடித்து அவர்காவில் எடுத்தே
சந்தைக்கடை தொறும்மீன்விலை தானேஎன விற்பார்
எந்தப்படி இவர்தப்புவது எனஎண்ணியி ருந்தேன். 3

'அந்தப்பழி காரர்வரும் முன்னேயொரு உபாயம்
சிந்தித்தனன் நான்;அப்படிச் செய்தால்அவை உய்யும்.
எந்தப்படி யானும்அழைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குளம் எய்தும்படி செய்வேன்'. 4

என்றேபக ராசன்சொல, இயல்நண்டுஅதை நம்பிச்
சென்றேபல மீனோடுஉரை செயவே அவைகூடி,
நன்றேஎன வரஒவ்வொரு நடைக்குஒன்றுகொண்டு ஏகிக்
கொன்றேசில தின்றே,சில கொடும்பாறையில் உலர்த்தி, 5

அலவன்தசை தனைஉண்டிட அதையுங்கொடு செலஅந்
நிலம்எங்கணும் மீன்என்புகள் நிறைகொண்டது கண்டே,
நலதுஇங்கிது பலமீனையும் நனிதின்றது நமையும்
கொலவந்தது நாமும்இது கொலுமுன்கொலு வோமே! 6

நம்மால்வரு பிழையேஇது; நாமும்அந்த மீன்போல்
சும்மாஇருந் தனமேல்கொலும் அதிலேஒரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினிச் செய்வேம்என எண்ணி
அம்மாபகம் கழுத்தைக்கவை அடியால் நெருக்கியதே! 7

**நெருக்குண்டுஅற வீழ்ந்தேபகம் நீங்கிற்றுயிர். அலவன்**
**இருக்குந்தலம் ஏகித்தனது இனத்தோடுஇருந் ததுவே.**
**செருக்கும்பகை பெரிதாகிலும் சிலதந்திர வகையால்**
**முருக்கும்படி நினைத்தால்அதில் முடியாததும் உளதோ?** **8**

—வீரமார்த்தாண்ட தேவர்

## அருஞ்சொற்பொருள்

1. தின்றுடல் - தின்று + உடல், இரை – உணவு, ஞானம் - அறிவு, மோனம் - பேசாதிருத்தல், இங்கு + உறை - இங்குறை, உறை - தங்குதல்.

2. கொல் - கொலைத்தொழில், நுந்திய - தூண்டிய, மன்னும் - நிலை பெறும், தடம் - நீர்நிலை.

3. கொடு - கொண்டு, காவில் - காவடியில், இவர் - குளத்தில் வாழும் மீன்கள்.

4. பழிகாரர் - கேடு விளைவிப்பவர், வலைஞர் - மீன் பிடிப்போர், உபாயம் - தந்திரம், உய்யும் - உயிர் தப்பிப் பிழைக்கும், எய்தும் - அடையும்.

5. பகம் + ராசன் - பகராசன், பகம் - கொக்கு, கொடும்பாறை- வெப்பம் பொருந்திய பாறை, வளைந்த பாறை.

6. அலவன் - நண்டு, தசை - இறைச்சி, கொடுசெல - அலகால் கௌவிக் கொண்டு செல்ல, என்பு - எலும்பு, நனி - மிகுதி, கொல - கொல்ல.

7. பிழை - தவறு, மா - பெரிய, கவை - பிளவுபட்ட, அடி - கால், நெருக்கியது - நசுக்கியது.

8. அற - அறுபட, தலம் - இடம், ஏகி - சென்று, செருக்கும் - கர்வம் கொள்ளும், முருக்கும்படி - அழிக்கும்படி.

## பயிற்சி

**(அ) விடை எழுது:**

1. நண்டு கொக்கைப் பார்த்து என்ன கேட்டது?
2. கொக்கு நண்டிடம் கூறிய பொய் யாது?
3. கொக்கு அரசன் மீன்கள் தப்பிக்க என்ன வழி கூறியது?
4. கொக்கு மீன்களை என்ன செய்தது?

5. கொக்கு நண்டைத் தூக்கிச் செல்லும்போது நண்டு எதைக் கண்டது ? என்ன நினைத்தது ?

6. கொக்கு எவ்வாறு இறந்தது ?

(ஆ) பிரித்து எழுது :

தின்றுடல் இங்குறை

(இ) சேர்த்து எழுது :

இங்கு + இது = மீன் + ஒன்றையும் =

(ஈ) I. சரியா தவறா எனக் கண்டுபிடித்துச் சரியானதை எழுது :

1. நீ இங்கு உறை பண்பு ஏது உரை ........... நண்டு/கொக்கு

2. எந்தப்படி இவர் தப்புவது ..................... கொக்கு/நண்டு

3. இந்தக் குளம் விட்டோர் குளம் எய்தும்படி செய்வேன் ....................... நண்டு/கொக்கு

4. நமையும் கொல வந்தது ......................... கொக்கு/நண்டு

II. புள்ளியிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுது :

1. நீங்கிற்று உயிர் ...........

2. இனத்தோடு இருந்தது ..............

(அலவன், பகம்)

## 2. புத்தரும் மகனை இழந்த தாயும்

(மூன் கதை)

[ஒருசமயம் புத்தர் சோணை ஆற்றங்கரையில் தங்கி இருந்தார். அப்போது சுஜாதை என்னும் தாய் ஒருத்தி அவரைக் கண்டு வணங்கினாள். பாம்பு கடித்து இறந்துபோன தன் மகனை உயிர்ப்பிக்குமாறு வேண்டினாள்.]

### தாயின் நிலைமை

**ஆறாகக் கண்ணீர் வடித்து நின்றாள்; — கையில்**
**ஆண்மகவு ஒன்றையும் ஏந்தி நின்றாள்;**
**தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும் — ஞான**
**தேசிகன் சேவடி போற்றி நின்றாள்.**

மகனை இழந்த தாய் மனம் வருந்திக் கூறுதல்

" சிரித்தமுகம் எனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடும்அவ் வேளை,
விரித்தபடம் எடுத்துஅரவுஒன்(று) அடுத்துஒருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந் ததுவே. 2

பால்மணமா றாதசிறு பாலகனும் அறியான்,
படஅரவை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டான்.
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து,
வருத்தம்எழச் சிறுகுறும்பு செய்துவிட்டான்; ஐயோ! 3

சிறுபொழுது சென்றிடஎன் செல்வமகன் உடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட(து) ஐயா!
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட(து) ஐயா!
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட(து) ஐயா! 4

காடும் மலையும் கடந்து வந்தேன்; — உம்மைக்
கண்டுது யரெல்லாம் போக்க வந்தேன்;
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும் — இந்த
மைந்தன் உயிரெழச் செய்யும் ஐயா!" 5

புத்தரின் பதில்

" தாயே!நின் மனக்கவலை — ஒழிந்திடத்
தக்கநன் மருந்(து) அளிப்பேன்;
சேயினை எழுப்பிடுவேன்; — விளையாடித்
திரியவும் செய்திடுவேன். 6

நாவிய கடுகும் வேண்டும் — அதுவுமோர்
நாவுரி தானும் வேண்டும்;
சாவினை அறியாத — வீட்டினில்
தந்ததாய் இருக்கவேண்டும். 7

பக்கமாம் பதிகளிலே — சென்றுநீ
பார்த்(து)இது வாங்கிவந்தால்
துக்கமும் அகலும்அம்மா! — குழந்தையும்
சுகமாக வாழும் அம்மா!" 8

கடுகு கிடைக்காமல் வெறுங்கையோடு வந்த தாய் கூறியது

"ஐயமிடு மனைகளிலே மரணம் என்றும்
அறியாத மனைஏதும் இல்லை; இல்லை.
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு.
மாற்றரிய விதிஇ(து)என்(று) உணர்ந்து கொண்டேன்.
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன்;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்பது உண்டோ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்," என்றாள். 9

—கவிமணி தேசிகவிநாயகம்

## அருஞ்சொற்பொருள்

தாய் - சுஜாதை என்னும் பெயருடைய தாய், தேசிகன் - புத்தர், மகவு - குழந்தை, தேறாத-தெளிவு அடையாத, சேவடி - செம்மையான திருவடி, அரவு – பாம்பு, கடகம் - காப்பு, குறும்பு - துன்புறுத்தும் சிறு செயல், சீதம் - குளிர்ச்சி, விழி - கண், மைந்தன் - மகன், சேய் - குழந்தை, நாவிய - கொழித்த, நாவுரி (நாழி + உரி) - ஒன்றரைப் படி (நாழி - படி, உரி - அரைப்படி), ஐயம் - பிச்சை, மனை - வீடு, கான் - சுடுகாடு, வையகம் - பூமி.

## பயிற்சி

**(அ) விடை எழுது :**

1. மகனை இழந்த தாயின் நிலையை எழுது.
2. பாம்பு சிறுவனை ஏன் தீண்டியது?
3. பாம்பு தீண்டிய சிறுவன் உடல் எவ்வாறு இருந்தது?
4. மகனை இழந்த தாய் புத்தரிடம் வேண்டியது யாது?
5. புத்தர் தாய்க்குக் கூறிய பதில் யாது?
6. புத்தரிடம் திரும்ப வந்த தாய் என்ன கூறினாள்?

**(ஆ) பிரித்து எழுது :**

சேவடி பரந்துணர்வு

**(இ) சேர்த்து எழுது :**

அரவு + ஒன்று = கை + அமர்ந்த =

## 3. மயிலுக்குப் போர்வை அளித்தவன்

மாரிக் காலம் வந்ததும் மழையே எங்கும் பெய்தது.
தேரில் ஏறி மன்னவன் சென்றான் மலையைக் காணவே! 1

மலையைச் சுற்றிப் பார்த்தபின் மனம் மகிழ்ந்த மன்னவன்
அலைந்து திரிந்த சோர்வினால் அங்கு நின்றான் ஓரிடம். 2

வானில் மேகம் பரவியே மெதுவாய்த் தூறல் பெய்தது.
கான மயிலும் அதனையே கண்டு களித்து நின்றது. 3

மேகம் கண்ட மகிழ்ச்சியால் மயிலும் தனது தோகையை
வேக மாக விரித்தது; விரைந்து ஆட லானது. 4

மன்னன் அதனைக் கண்டதும் மயிலும் குளிரால் நடுங்குது;
என்றே எண்ணிப் போர்வையை எடுத்து அதற்குப் போர்த்தினன். 5

மயிலும் போர்த்திக் கொள்ளுமோ? மன்னன் அதனை மறந்தனன்.
மயிலின் குளிரைப் போக்கிய மகிழ்ச்சி மட்டும் கொண்டனன். 6

அந்த மன்னன் யாரென அறிந்து கொள்ள வேண்டுமோ?
வந்த பேர்க்குப் பொருள்களை வழங்கும் வள்ளல் பேகனாம். 7

—புலவர் சி. மாணிக்கம்

### அருஞ்சொற்பொருள்

*மாரிக்காலம் - மழைக்காலம், மன்னவன் - அரசன், சோர்வு - களைப்பு, தூறல் - சிறுமழை, கானம் - காடு.*

### பயிற்சி

**(அ) விடை எழுது :**

1. *மன்னன் எங்கு எவ்வாறு சென்றான்?*
2. *கானமயில் ஏன் ஆடியது?*
3. *மயிலைக் கண்ட மன்னன் யாது செய்தான்?*
4. *மயிலுக்குப் போர்வை அளித்த மன்னன் பெயர் யாது? அவன் எப்படிப்பட்டவன்?*

**(ஆ) பிரித்து எழுது :**

*ஓரிடம்* *ஆடலானது*

**(இ) சேர்த்து எழுது :**

*தேரில் + ஏறி =* *மலையை + காண =*

# IV. பல்பொருள் பகுதி

## 1. கலைத் தெய்வம்

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம் ;
　　தீமை காட்டி விலக்கிடும் தெய்வம் ;
உய்வம் என்ற கருத்துடை யோர்கள் ;
　　உயிரி னுக்குயிர் ஆகிய தெய்வம் ;
செய்வம் என்றொரு செய்கை எடுப்போர்
　　செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம் ;
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்;
　　கவிஞர் தெய்வம் ; கடவுளர் தெய்வம்.

—சுப்பிரமணிய பாரதியார்

### அருஞ்சொற்பொருள்

*உய்வம் - தப்பிப் பிழைப்போம், தெய்வம் — கலைமகள்.*

### பயிற்சி

**(அ) விடை எழுது :**

*பாரதியார் தெய்வத்தின் சிறப்புகளாகக் கூறுவன யாவை ?*

**(ஆ) பிரித்து எழுது :**

*உயிரினுக்குயிர்　　　　என்றொரு*

**(இ) சேர்த்து எழுது :**

*கருத்து + உடையோர்கள் =*

## 2. நம் நாடு

இமயம் தொட்டுக் குமரி மட்டும் இங்(கு) இருக்கும் யாவரும்
　　இந்தி யாவின் மக்கள் என்ற சொந்தம் காணச் செய்குவோம்;
சமயம் என்றும் சாதி என்றும் சண்டை யற்று வாழவும்
　　சமதை யாக மொழிகள் யாவும் சலுகை பெற்று வளரவும்
அமைதி யாகத் தேச சேவை அச்சம் இன்றி ஆற்றுவோம்;
　　அவதி மிக்க ஏழை மக்கள் வறுமை போக மாற்றுவோம்;
நமது நாடு உலகி னுக்கு நல்ல மார்க்கம் காட்டவே
　　நாங்கள் என்றும் பணிபுரிந்து வெற்றி மாலை சூட்டுவோம்.

—நாமக்கல் கவிஞர்

### அருஞ்சொற்பொருள்

தொட்டு - தொடங்கி ; இமயம் - இமயமலை, குமரி - கன்னியாகுமரி என்னும் இடம், அற்று - இல்லாமல், சமதை - சமம், தேச சேவை - நாட்டுத் தொண்டு, அவதி - துன்பம், மார்க்கம் - வழி.

### பயிற்சி

(அ) விடை எழுது :

1. தேச சேவையை எதற்காக எவ்வாறு ஆற்றவேண்டும் என நாமக்கல் கவிஞர் கூறுகிறார் ?

2. நாம் நாட்டிற்காக வேறு என்னென்ன செய்யவேண்டும் எனக் கவிஞர் கூறுகிறார் ?

(ஆ) சேர்த்து எழுது :

இங்கு + இருக்கும் = அச்சம் + இன்றி =

(இ) பிரித்து எழுது :

அமைதியாக, சண்டையற்று.

## 3. குற்றால மலை

**வானை அளந்து நின்ற மலைகள் உண்டு ; — நல்ல**
**வாசமொடு தென்றல்உலா வருவதுண்டு ;**
**தேனைச் சொரிந்திடும்பூஞ் சோலைகள் உண்டு ; — வாகாய்த்**
**தெள்ளியநீர் துள்ளிவரும் ஓடைகள் உண்டு.** 1

**நின்று குளித்திடவெள் அருவியுண்டு ; — வந்தோர்**
**நெஞ்சம் குளிருமட்டும் நிற்பதுமுண்டு ;**
**சென்று குளிப்பதற்குச் செண்பகாடவி — உயர்**
**தேனருவி ஐந்தருவி தொலைவில் உண்டு.** 2

**கோலக் குரங்கினங்கள் கோடியங் குண்டு ; — தாயின்**
**கும்பியிலே தொங்கிவரும் குட்டிகளுண்டு ;**
**ஆலம் விழுதினூசல் ஆடுவதுண்டு ; — மந்தி**
**அத்தனையும் அந்தரடித் (து) ஒடுவதுண்டு.** 3

—கவிஞர் மீ. ப. சோமு

### அருஞ்சொற்பொருள்

வாசம் - மணம், உலா வருதல் - சுற்றி வருதல், வாகு - வசதி, கோலம் - அழகு, இனங்கள் - கூட்டங்கள், கும்பி - வயிறு, அந்தரடித்தல் - குட்டிக்கரணம் போடுதல்.

### பயிற்சி

(அ) விடை எழுது :

குற்றால மலைக்காட்சியைக் கவிஞர் எவ்வாறு விவரிக்கிறார் ?

(ஆ) பிரித்து எழுது :

ஐந்தருவி, கோடியங்குண்டு.

(இ) சேர்த்து எழுது :

அருவி + உண்டு = குரங்கு + இனங்கள் =

## 4. ஒருமைப்பாடு

ஒருமைப் பாடு ஒருமைப் பாடிதை உயிராய்க் காத்திடுவோம் ;
பெருமை மிக்க பாரத நாட்டின் பேரைப் போற்றிடுவோம். 1

'இமயம் முதலா குமரி வரையில் இணைந்த பெருநாடு'
சமமே யாவரும் உறவினர் என்றே சரிநிக ராய்வாழ்வோம். 2

மாநில மெல்லாம் வீட்டின் அறைபோல் மதித்தே வாழ்ந்திடுவோம் ;
ஊனில் உயிர்தான் உள்ள வரையிலும் ஒற்றுமை காத்திடுவோம். 3

இந்து, முசுலிம், கிறித்தவர், புத்தர் எப்படி இருந்தாலும்
இந்திய நாட்டின் பிள்ளைகள் என்போம் யாவரும் ஒரு குலமே. 4

சாற்றும் சமயம் சாதிகள் பலப்பல சார்ந்தே இருந்தாலும்,
வேற்றுமை யதிலே ஒற்றுமை கண்டே விரும்பி வாழ்ந்திடுவோம். 5

—எல். மதி

### அருஞ்சொற்பொருள்

ஊன் - உடம்பு, சாற்றும் - கூறும், இணைந்த - சேர்ந்த.

### பயிற்சி

1. ஒருமைப்பாட்டைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?

2. புள்ளியிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்பிப் படி :

............ ............ காத்திடுவோம்.

............ ............ போற்றிடுவோம்.

............ ............ வாழ்வோம்.

## 5. சூரிய உதயம்

சூரியோ தயத்தைப் பாருங்கடி ! — அந்தச்
சோதியில் மனமும் சேருங்கடி !
வாரிதி யிலொரு சூரிய காந்தி
மலர்ந்து வருகுது பாருங்கடி ! 1

நீலக் கடலினுக் குள்ளிருந்தே — அது
நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்குதடி !
நாலில் ஒருபங்கு தோணுதடி ! — இப்போ
நல்லதோர் அழகாய்க் காணுதடி ! 2

முற்றிலும் வட்டமாய் ஆச்சுதடி ! — இப்போ
முன்னைவிடப் பெரிது ஆச்சுதடி !
சுற்றி யுள்ளபொருள் அத்தனையும் — அதன்
சோதிசென் றணைந்து முந்துதடி ! 3

—தீபன்

### அருஞ்சொற்பொருள்

*உதயம் - தோற்றம், சோதி - ஒளி, வாரிதி - கடல்.*

### பயிற்சி

**(அ) விடை எழுது :**

*சூரிய உதயம்பற்றித் தீபன் கூறுவன யாவை ?*

**(ஆ) சேர்த்து எழுது :**

*சூரியன் + உதயம் =* *சென்று + அணைந்து =*

**(இ) பிரித்து எழுது :**

*நீலக்கடல்,* *சுற்றியுள்ள.*

## 6. ஆசான்

அறிவுலகின் வீதியிலே அழைத்துச் செல்வார் ;
அலைகடலின் ஆழம்போல் பாடம் சொல்வார் ;
அறியாமை இருள்நடுவே விளக்கு வைப்பார் ;
அஞ்சாத நெஞ்சுரத்தை வளரச் செய்வார். 1

அறநிழலில் குடிவாழ்க்கை நடத்தச் சொல்வார் ;
அன்புடைமை துணையாகக் கொள்க என்பார் ;
குறைகளைந்து திருத்துகின்ற ஆசான் போன்று
குணமுயரப் பாடுபடும் பெரியோர் உண்டோ ? 2

—ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

### அருஞ்சொற்பொருள்

*வீதி - தெரு, அஞ்சாத - பயப்படாத, ஆசான் - ஆசிரியர்.*

### பயிற்சி

(அ) விடை எழுது :

*ஆசிரியர் என்னென்ன நன்மைகளைச் செய்வதாகக் கவிஞர் கூறுகிறார் ?*

(ஆ) பிரித்து எழுது :

*அறிவுலகு, நெஞ்சுரம்.*

(இ) சேர்த்து எழுது :

*குணம் + உயர= அன்பு + உடைமை=*

## 7. குளிர் தரும் வேம்பு

வீட்டுக்கு முன்னே வேப்பமரம் ; — கோடை
வெப்பக் கொடுமையைப் போக்கும்மரம் ;
வெள்ளி நிறத்திலே பூப்பூக்கும் ; — மணம்
வீதி முழுதும் கமகமக்கும். 1

பச்சை நிறத்திலே காய்காய்க்கும் ; — அதில்
பாலோடு முத்துப் பளபளக்கும்.
தங்க நிறத்தில் பழம்பழுத்து — அது
தளதள என்று மின்னிநிற்கும். 2

—புலவர் ல. சண்முகசுந்தரம்

## அருஞ்சொற்பொருள்

மணம் - வாசனை, வீதி - தெரு, கமகமக்கும் - மணம் கமழும்.

## பயிற்சி

1. புள்ளியிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்பிப் படி:

பூ ................

காய் ................

பழம் ................

(பூக்கும், பழுக்கும், காய்க்கும்)

2. வேம்பின் சிறப்புகள் யாவை ?

# சொற்பட்டியல்

**அ**

அகத்தியம்
அகத்தியர்
அகல்
அச்சம்
அச்சிட்ட
அசை
அசோகர்
அஞ்சாமை
அஞ்சு
அடிமை
அடிவாரம்
அடைதல்
அடையாளம்
அடையாறு
அணு
அணை
அதிவீரராமன்
அம்பு
அமைச்சன்
அமைப்பு
அயராது
அயலார்
அரக்கோணம்
அரங்கு
அரண்
அரண்மனை
அரம்
அரவு
அரிந்து
அருந்து
அருமை
அருவி
அருள்
அரைப்புள்ளி
அல்
அல்லி
அலகு
அலர
அலுமினியம்
அலை
அலைந்து
அவசரம்
அவதி
அவி
அழி
அழுக்காறு
அளப்பரிய
அற்றம்
அறம்
அறவழி
அறிஞர்
அறுத்தல்

**ஆ**

ஆக்கம்
ஆசான்
ஆசியா
ஆண்டான்
ஆண்டிப்பட்டி
ஆணவம்
ஆந்திரம்
ஆப்பிள்
ஆயர்
ஆர்வம்
ஆரியபட்டா
ஆலைத்தொழில்
ஆள
ஆற்றி

**இ**

இடி
இடுக்கண்
இடும்பை
இடைச்சொல்
இதயம்
இதிகாசம்
இந்து
இயற்கை எய்தினார்
இரக்கம்
இரந்து
இருள்
இரை
இலஞ்சி
இழுபடு
இளமை
இன்சாட்
இன்னார்
இனிது
இனிப்பு
இனியவர்

**ஈ**

ஈட்டி
ஈத்து
ஈரம்
ஈர்க்குச்சி

**உ**

உச்சி
உடையார்
உண்டிட
உணர்வு
உணர்ந்து
உதகமண்டலம்
உதகை
உய்வோம்
உயர்திணை
உயரமான
உயரிய
உயிர்வாழ
உரிச்சொல்
உருண்டு
உருது
உருவம்
உருளி
உலர்த்தி
உவர்ப்பு
உளம்
உற்பத்தி
உற்ற
உற்றார்
உற்றுழி
உறந்தை
உறிஞ்சி
உறுப்பினர்
உறைந்து
உறையூர்
உனக்கு

**ஊ**

ஊசல்
ஊட்டி

**எ**

எட்ட
எண்
எண்ணிலா
எதிர்த்த
எதிரி
எதிரொலி
எய்தாமை
எரிக்க
எல்
எல்லை
எழு
எழுத்தாளர்
எழுப்பு
எஃகு

**ஏ**

ஏடு
ஏந்தி
ஏமாந்து
ஏரி
ஏலம்
ஏற்றார்
ஏற்றுமதி
ஏறத்தாழ

**ஐ**

ஐந்தருவி
ஐயம்

ஒ
ஒத்துக்கொள்
ஒரியா
ஒரீஇ
ஒலி
ஒழிய
ஒற்றர்

ஓ
ஓங்கும்
ஓசை
ஓடை
ஓம்ப
ஓய்தல்
ஓரம்

ஔ
ஔவை

க
கங்குகரை
கங்கை
கட்டடம்
கட்டம்
கட்டணம்
கட்டனை
கட்டில்
கட்டுப்பாடு
கட்டுரை
கட்டை
கடகம்
கடமை
கடா
கடிவாளம்
கடு
கண்கொள்ளா
கண்டம்
கண்ணகி
கண்ணியம்
கண்ணீர்
கணீர்கணீர்
கயிலை
கர்நாடகம்
கரி
கரிகாலன்
கருத்து
கருவூலம்
கலங்காமல்
கலப்பு
கலை
கவசம்
கவர்ந்த
கவலை
கவிதை
கழனி
களிமண்
களை
களைப்பாற
கன்னடம்
கனியும்

கா
காக்கும்
காட்டு விலங்கு
காய்ந்த
கால்வாய்
காவியம்
காளான்
கான்

கி
கிருமி
கிள்ளி
கிறித்தவர்

கீ
கீரை
கீழே
கீழோர்

கு
குகை
குடியரசு
குடைவழி
குத்துவிளக்கு
கும்பி
குமுதம்
குருதி
குற்றாலம்
குறளை
குன்னூர்
குஜராத்தி

கூ
கூட்டிவா
கூடம்
கூரிய

கே
கேட்டறி
கேரளம்
கேள்வி

கை
கைக்கு எட்டியது
கைகொடுக்கும்
கைவந்த
கைவிளக்கு

கொ
கொக்கு
கொஞ்சி
கொடியது
கொண்டை
கொதிகலன்
கொல்லா
கொழு
கொள்கை
கொள்ளு
கொற்றம்

கோ
கோங்கு
கோட்டை
கோதாவரி
கோரை
கோலூர்
கோவை
கோழியூர்

ச
சட்டம்
சண்டை
சத்தம்
சதுக்கம்
சந்தனம்
சமதை
சமுதாயம்
சர்க்கஸ்
சலுகை

சா
சாடினார்
சாத்தூர்
சாரல்

சி
சிகரம்
சிங்கி
சித்திரா
சிந்தனை
சிந்து
சிபி
சிம்லா
சிமெண்டு
சிரபுஞ்சி
சிலை
சிவகாசி
சிவன்
சிற்பி
சிறப்பாக
சிறுதுளி
சிறை

சீ
சீக்கியர்
சீதம்
சீர்திருத்தம்

சு
சுகம்
சுரக்கும்
சுருண்டு
சுருளியாறு
சுழல்காற்று
சுள்ளி
சுற்றிலும்
சுனை

சூ
சூரிய உதயம்

செ
செண்பகாடவி
செப்பேடு
செம்பழுப்பு
செம்மண்
செம்மல்
செய்தி
செய்யுள்
செல்லச்செல்ல

சே
சேய்
சேலம்
சேவடி

சொ
சொரிந்து
சொல்வன்மை

சோ
சோடை
சோர்வு
சோலை
சோழர்
சோறு

த
தசை
தட்டுமுட்டுச்சாமான்
தந்திரம்
தபதி
தயக்கம்
தரணி
தராசு
தரு
தலைப்பாகை
தவழ்
தவிடு
தழுவுதல்
தளர்ச்சி
தளை

தா
தாங்கு
தாயுமானவர்
தார்க்கோல்
தாவரஇயல்
தாழும்

தி
திடீரென
திண்டாட்டம்
திணை
திரிகூடம்
திருகு
திருச்சி
திருத்தம்
திருந்த
திருநாள்
திருநெல்வேலி
திரும்ப
திரைப்படம்
திறமை

தீ
தீச்சுடர்
தீண்டாமை
தீது
தீபாவளி
தீமை

து
துடை
துணி
துத்தநாகம்
துப்பு
துலக்கு
துலை
துவர்ப்பு
துளுவம்
துறவி
துறை

தூ
தூக்கின்
தூர்
தூள்

தெ
தெலுங்கு
தென்காசி
தென்பகுதி
தென்பெண்ணை
தென்றல்

தே
தேக்கு
தேசியம்
தேய்ந்து
தேவதேவே
தேனடை
தேனருவி

தை
தையல்

தொ
தொகைநிலை
தொடர்ச்சி
தொடர்பு
தொழில்

ந
நச்சு
நடி
நதி
நயன்
நர்மதை
நரகர்
நல்லாறு
நவை
நறுமணம்
நனி

நா
நாடா
நாண்
நாயன்மார்

நி
நிலக்கோட்டை
நினைவு

நீ
நீட்டிய
நீண்ட
நீத்தார்
நீதிமன்றம்
நீர்ச்சுழி
நீர்நிலை
நீர்வீழ்ச்சி
நீராவி
நீள்நெறி

நு
நுகர்கோல்
நுண்ணறிவு
நுந்திய
நுழை

நூ
நூல்
நூலகர்
நூற்றல்

நெ
நெடில்
நெறி

நே
நேர்முக வருணனை
நேரில்
நேற்று

நோ
நோக்கி
நோன்பு

ப
பகுதி
பகைமை
பஞ்சாடை
பஞ்சாபி
பட்டம்
பட்டை
படிப்பு
படுக்கை
படை
பண்டை
பத்தமடை
பதிவு
பந்தயம்
பந்து
பயங்கரம்
பரந்த
பரப்பு
பரமக்குடி
பரிபாடல்
பருத்தி
பருந்து
பருவம்
பவளம்
பழங்காலம்
பழம்
பழமை
பழி
பழுப்பு
பள்ளம்
பளபளப்பாக
பற்று

பா
பாட்டி
பாதை
பாதுகாப்பு
பாராட்டி
பாலாறு
பாலூட்டி
பாஸ்கரா

பி
பிஞ்சு
பிடாரி
பிணி
பித்தளை
பிரதமர்
பிழை
பின்பற்று
பின்னல்

பு
புகழ்
புண்ணியம்
புயல்
புரண்டு
புலம்
புலவர்
புவியியல்
புள்
புறங்கடை
புறா
புனல்

பூ
பூக்கள்
பூசல்
பூத்தல்

பெ
பெருக்கி
பெருக
பெரும்பாலும்

பே
பேகன்
பேச்சாற்றல்
பேருந்து நிலையம்

பை
பைம்பொழில்

பொ
பொங்கு
பொங்குமாங்கடல்
பொடிமீன்
பொருந்து
பொறியியல்

போ
போட்டி
போர்க்கருவி
போற்றி

ம
மக்கள்
மகாபாரதம்
மகாவீரர்
மங்கி
மணம்
மதி
மதிப்பு
மதுரை
மயங்கி
மயல்
மரணம்
மராத்தி
மருத்துவம்
மல்யுத்தம்
மலயமான்
மலை
மன்றம்

மா
மாசு
மாடம்
மாணாக்கர்
மாணிக்கவாசகர்
மாந்தர்
மாநாடு
மாற்றான்
மான்செஸ்டர்
மானாமதுரை

மி
மிசை
மின்னணு
மின்னின

மு
முக்கனி
முடைதல்
முத்தமிழ்
முத்தாரம்
முதுமொழி
முதன்மை
முன்னணி
முன்னேற்றம்
முனிவர்
முஸ்லிம்

மூ
மூங்கில்
மூடப்பழக்கம்
மூடிய

மெ
மெதுவாக
மெய்
மெய்பொடிப்ப
மெய்விதிர்த்தல்

மே
மேட்டுப்பாளையம்
மேரு
மேற்புறம்
மேன்மேல்
மேனிலை

மை
மைசூர்
மைந்தன்

மோ
மோனம்

ய
யமுனை

யா
யாதும்
யாப்பு
யானைப் பாகன்

ரோ
ரோகிணி

வ
வங்கக்கடல்
வட்டமிடு
வடிவம்
வண்ணம்
வரிக்குதிரை
வல்லுநர்
வழுக்காது
வளம்கொழி
வளைவு
வற்றா
வறுமை
வன்சொல்

வா
வாசம்
வாய்க்கால்
வாரிதி
வாள்
வாளி

வி
விடை
விதி
விந்திய மலை
விமான நிலையம்
வியந்து
விரட்டு
விரதம்
விரிகுடா
விரித்தாடு
விரையும்
விழி
விழுது
விழுப்பம்
வினவு
வினை
வினைச்சொல்

வீ
வீண்
வீதி
வீரவன் ஆறு

வெ
வெங்காரம்
வெடுக்கென
வெய்து
வெளிப்படுத்த

வே
வேங்கை
வேய்
வேலை
வேற்றுமை

வை
வை
வைகை
வையகம்

மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ; மற்றவர்கள் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று கருதுகிறோமோ; மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

—தந்தை பெரியார்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

WRAPPER PRINTED BY
AMBIKA PRINTERS, MADRAS-2.